# பொருளடக்கம்


1. வாழ்க்கைக்கு வழிகாட்டும் வள்ளுவம்
முனைவர் பாரிஜாதம் 1

2. கம்ப ராமாயணத்தில் உறவுகள்
முனைவர் பே.மகேஸ்வரி 12

3. திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுகள்
முனைவர் ச.பர்வத கிருஷ்ணம்மாள் 25

4. அறநூல்கள் செப்பும் சூழலியல் சிந்தனைகள்
முனைவர் (கேப்டன்) மா.குமார் 37

5. கல்வியும் சமுதாய நலனும்
முனைவர் க.நஞ்சையன் 50

6. அற இலக்கியங்களில் மேலாண்மை
பேரா.செந்தாமரை 59

7. புதுக்கவிதைகளில் விழிப்புணர்வுச் சிந்தனைகள்
முனைவர் பாரிஜாதம் 68

8. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மதிப்புக்கல்வி
முனைவர் இரா.காமராசு 86


Scanned by TapScanner

A.Kali pandian

# 1

## வாழ்க்கைக்கு வழிகாட்டும் வள்ளுவம்

முனைவர் பாரிஜாதம்

உயர்ந்த சிந்தனைகளின் சிறந்த படைப்பே இலக்கியம் என்பார் அறிஞர் எமர்சன். மிக உயர்ந்த வாழ்க்கை நெறிகளை வழங்குகின்ற உன்னத நூல்கள் உள்ளங்கையிலே அடக்கி விடுகின்ற அளவிற்கு அடக்கமாய் இருக்கின்றன என்கிறார் மற்றொரு அறிஞர். இதற்குச் சான்று வள்ளுவரின் திருக்குறள். கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை குறளின் சிறப்பை,

"மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெலாம்
சிக்கலறக் காட்சி நலம்செய் நூலாம்
மிக்க புகழ்ச் செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை -நெஞ்சமே!
சிந்தனை செய்வாய் தினம்"

என்று பாடுவது நினைக்கற்பாலது.

ஒவ்வொரு மனிதனும் தத்தம் வாழ்வில் தவறாது கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளை வரிசையாகப் பட்டியலிட்டுக் கொண்டே செல்கிறது குறள்.

### அன்பு

உலக உயிர்களின் இயக்கத்திற்கு அடிப்படையாக விளங்குவது அன்பு. அன்பின் சக்தி மகத்தான சக்தி. அச்சக்தி இல்லையேல் உலகம் நிலைக்காது. அன்பு தான். அன்பு மட்டும் தான் மனிதன் சேமிக்கும் மகத்தான செல்வம்.

வள்ளுவரும், 'அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்' என்றார்.

ஓர் இளைஞன் திடப்படுத்தல் 'திருவிருந்தில்' பங்கேற்கும் நாள் அருகில் வந்தது. எனக்குப் புதுத்துணி வேண்டாம், ஸ்கூல் யூனிபார்ம் எனக்குப் போதும், எனக்காக நீங்கள் செலவு செய்யப் போகிற பணத்தை என்னிடம் கொடுங்கள். அன்னை தெரசா குழந்தைகள் இல்லத்திற்கு அதைக் கொடுக்கப் போகிறேன் என்றான்.

மகனின் பொதுநலப் பார்வை, அன்பின் பார்வைக் கோணம் பெற்றோரைச் சிந்திக்க வைத்தது. அன்று முதல் தந்தை மது அருந்துகிற பழக்கத்தை விட்டு ஒழித்தார். மதுவுக்காகச் செலவு செய்கிற பணத்தைச் சேர்த்து வைத்தார்.

தாய் புகை பிடிப்பவர். அவரும் புகைபிடிப்பதில்லை என்று தீர்மானித்தார். இதற்கெனச் செலவாகும் தொகையைச் சேமித்தார்.

பிள்ளையின் அன்புச் செயல் பெற்றோரின் தீய பழக்கத்தையே மாற்றி விட்டது. அன்பின் வலிமை பெரிது. ஆளையே மாற்றுகிற வலிமை உள்ளது அன்பு.

ஒருவரிடம் நாம் அன்பு கொள்ளும் போது அவருக்காக வாழ வேண்டும் என்ற எண்ணம், தியாகம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, அவருக்காக எதையும் செய்யும் ஆர்வம் போன்ற பல நல்ல உணர்வுகளுடன் நீக்க முடியாத நட்பும் உண்டாகிறது.

அன்பு சிறந்த நட்பைத் தரும் என்பதனை,

**"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு"      (குறள் 74)**

என்னும் குறளில் காட்டுகிறார் வள்ளுவர்.

அன்பில்லா வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதையும் உலகிற்கு உணர்த்துகிறார் வள்ளுவர். பாலை நிலத்தைப் பார்க்கிறார். அதில் பசுமையின்றி வறண்டு போய் நிற்கும் தனிமரம் அவர்தம் கண்ணில் படுகிறது. யாருக்கும் பயனின்றித் தனிமரமாக நிற்கிறதே என நினைக்கிறார். ஆனால் தளிர்ப்பதற்கான வாய்ப்பும் இல்லையென்பதை உணர்கிறார்.

செல்வமிருந்தும் அன்பில்லாத ஒருவனைப்பற்றிக் கேள்விப்படுகிறார். அன்பற்ற அவனை விட்டு மனைவியும் பிரிந்து விடுகிறாள். தனிமரமாக நிற்கும் அவனை வற்றல் மரத்தோடு இணைத்துப் பார்க்கிறார் வள்ளுவர்

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று" (குறள் 78)

எனவே உயிர்கள் இன்பமாகவும் செம்மையாகவும் இருக்க அன்பே முதற்படி என்பதை உணர்த்துகிறார்.

**அடக்கமுடைமை**

அன்புடைமைக்கு அடுத்ததாக வருவது அடக்கமுடைமை. அன்பு இருந்தால் மட்டும் போதுமா? இல்லை, இல்லை, அடக்கம் தான் ஒருவனது வாழ்க்கையை உயர்த்தி ஒளிபெறச் செய்து முழுமை அடைய உதவும்.

அடக்கம் என்றால் என்ன? இருந்தும் இல்லாதிருப்பதே அடக்கம் ஆகும். மனிதவாழ்வு மாட்சிமை பெற அடக்கம் மிகமிக அவசியம். ஒருவர் அடக்கமாக இருந்தால் அவருக்கு எத்தகு சிறப்பு ஏற்படும் என்பதை ,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" (குறள் 121)

எனும் குறள் உணர்த்தும்.

அடங்காமை என்பது ஆணவம் கொண்டு திரிதலாம். அடங்காது இருப்பது கொடிய துன்பத்தில் தள்ளிவிடும்.

**அடக்கத்தைக் காத்தல்**

அடக்கத்தை உறுதிப் பொருளாகக்கொண்டு காக்க வேண்டும். ஏனென்றால் அதைவிட மிக மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை என்கிறார்.

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு" (குறள் 122)

வாழ்க்கைக்கு வகுத்த நெறியில் சிறிதும் மாறுபடாமல் வாழ்பவனுடைய உயர்ச்சி மலையின் உயர்ச்சியை விட மாபெரும் உயர்ச்சியாகும். இதனை, வள்ளுவர்

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது" (குறள் 124)

என்கிறார்.

Scanned by TapScanner

அடக்கம் எப்படி இருக்க வேண்டுமென்பதையும் வள்ளுவர் மிக அழகாக எடுத்தியம்புவார்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் 126)

ஆமை தனக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்தால் தன் உடலைத் தன் ஓட்டிற்குள் இழுத்துக் கொள்ளும். அது போல் நாமும் ஐம்புலன் களுக்குத் துன்பம் நேர்ந்தால் ஆமை போல் ஒடுங்கி விட வேண்டும்.

**நாவடக்கம்**

எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும். இல்லை யெனில் சொற்குற்றத்திற்கு ஆளாக நேரிடும்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"(குறள் 127)

எனவே அடக்கம் தான் ஒருவனை வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்கிறது.

**ஒழுக்கமுடைமை**

"ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை" என்கிறது கலித்தொகை. ஒழுக்கம் தான் ஒருவனை உயர்ந்தோனாக்கும்; சான்றோனாக்கும். அது உயிரை விட மேலானது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 131)

ஒருவன் ஒழுக்கம் தவறினால் உலகம் அழியும் வரையும் அப்பழியி லிருந்து மீளமுடியாது. ஆற்றலாலும் வரத்தாலும் உலகையே தன் ஒரு குடைக்குள் வைத்திருந்த இராவணன் பிறன்மனை நயத்தல் என்னும் கூடாவொழுக்கத்தால் பொல்லாப் பழிக்கு ஆளானான். எனவே ஒழுக்கத்தை விடாது கடைப்பிடிக்க வேண்டும். நல்லொழுக்கமே இன்பமான வாழ்க்கைக்கு விதை போடுவது போன்றதாகும். தீய ஒழுக்கம் என்றைக்கும் துன்பத்தையே தரும்.

Scanned by TapScanner

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்" (குறள் 138 )

உயர்ந்தோர் கூறிய ஒழுக்கத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர்கள் நூல் பல கற்றவராயினும் அறிவில்லாதவராவார்.

ஒழுக்கத்தின் மேன்மையினை நாமக்கல் கவிஞரும்,

"ஓதலினும் மிகச்சிறந்த(து) ஒழுக்கம்
- - - - - - - - - - - - - - - - - - - - - - - -
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம்நல் லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே"

என்று பாடியுள்ளார். நலமான வாழ்க்கைக்கு ஒழுக்கமே முதற்படி என்னும் கருத்து முன்வைக்கப்படுகிறது.

**கைம்மாறு வேண்டாக் கடப்பாடு**

எந்தவித எதிர்பார்ப்புமின்றிப் பெய்யும் மழையைப் போல ஒருவன் வாழ வேண்டும். அவன் தேடிய பொருள் அனைத்தும் தக்கார்க்குப் பயன்பட வேண்டும்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் 212)

ஓர் ஊரில் மிகப் பெரிய செல்வந்தன் இருந்தான். அவன் யாருக்கும் எந்த உதவியும் செய்ததில்லை. ஆனால் தான் இறந்த பிறகு தன் செல்வம் முழுவதும் ஊரார்க்குச் சொந்தம் என்று எழுதி வைத்தான். இருந்தாலும் அவனை யாரும் பாராட்டவில்லை; சபித்துக் கொண்டே இருந்தார்கள்.

அவன் ஊருக்கு வந்த ஞானியிடம் இது பற்றிக் கேட்டான். அவர் சிரித்துக் கொண்டே பசு மற்றும் பன்றியின் கதையைக் கூறினார்.

பன்றியொன்று பசுவைப் பார்த்துக் கேட்டது. "நான் இறந்த பிறகு சுவையான மாமிசத்தையும் விலையுயர்ந்த தோலையும் தருகிறேன்; நீயோ பாலை மட்டுமே தருகிறாய். ஆனால் உன்னை வழியில் சந்தித்தால் கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். என்னைக் கல்லெடுத்துத் துரத்துகிறார்கள். காரணம் என்ன?"

Scanned by TapScanner

உடனே பசு சொன்னது, "நான் வாழும் போதே பயன்படுகிறேன். நீயோ இறந்த பிறகு மட்டுமே பயன்படுகிறாய். அதனால் தான்" என்றது.

அந்தச் செல்வந்தனுக்குத் தன் தவறு புரிந்தது. அதற்குப் பிறகு எல்லோரும் வாழ்த்தினார்கள். வாயாரப் போற்றினார்கள். வள்ளுவர் இதனை,

**"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்"** (குறள் 214)

என்றார். பிறருக்கு உதவாது வாழ்பவன் செத்தவனாகவே கருதப் படுவான்.

உண்மையான ஒப்புரவு என்பது கைம்மாறு கருதாமல் உதவி செய்வதாகும்.

**"இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற்றிருக் கையிலே**
**தொட்டுப்பார் உன்நெஞ்சில் தோன்றுமின்பம்"**

என்பார் பாரதிதாசன்.

**பொறுமை**

பொறுமையைப் போலச் சிறந்த அணிகலன் எதுவுமில்லை. "பொறுத்தார் பூமியாள்வார், பொறாதார் காடாள்வார்" என்பது பழமொழி. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரையும் தாங்கிக் கொள்ள வேண்டும்.

பொறுமையினால் ஏற்படும் நன்மைபற்றி வள்ளுவர் கூறுகிறார்.

**"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்"** (குறள் 156)

பொறுமையே நமது வெற்றிக்கு அறிகுறி. பூமிக்கடியில் பல வருடங்கள் இருக்கும் கரியின் பொறுமை தான் வைரம். பூமியின் மேல் மண்ணின் பொறுமைதான் மலை. தாயின் பத்து மாதப் பொறுமை தான் குழந்தைச் செல்வம். எனவே பொறுமை என்பது நேரத்தைப் போக்குவது அல்ல. காலத்தை வெற்றிகரமாக மாற்றும் கனியாகும்.

**வாய்மை**

வாய்மையால் சரித்திரத்தின் ஏடுகளில் இடம் பிடித்தவன் அரிச்சந்திரன். அவன் கதையைப் படித்த காந்தியும் வாய்மையே பேசினார். புலால் உண்பதில்லை எனத் தன் தாயிடம் சத்திய வார்த்தையைச் சொல்லிச் சென்றார். தன் தாய் இறந்த பிறகும் கூட

Scanned by TapScanner

அதையே கடைப்பிடித்தார். அவரது வாய்மையால் தான் இன்றும் நாம் அவரை வாயாரப் பேசி மகிழ்கின்றோம்.

**"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்" (குறள் 294)**

என்ற குறளுக்கு இலக்கணமானவர் காந்தி.

வாய்மை என்றால் என்ன என்பதற்கு இலக்கணம் கூறுகிறது வள்ளுவம். பிறர்க்குத் தீமை பயக்காத சொல்லே வாய்மை என்கிறது.

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்" (குறள் 291)**

ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர் ஒருவர் 'வாய்மை' என்னும் தலைப்பில் உங்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை வைத்து எழுதுங்கள் என்று பணித்தார். உடனே ஒரு மாணவி எழுந்து நின்று தன் வாயில் உள்ள மையைச் சுட்டிக் காட்டி (லிப்ஸ்டிக்) இதுதான் வாய்மை என்றாள். அத்துடன் நில்லாது என் வாயிலுள்ள மை பிற உயிருக்கு எந்த வகையிலும் தீமை செய்வதில்லை. எனவே இதுதான் வாய்மை என்று குறளுக்கே புது விளக்கம் கொடுக்க மாணவியர் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டனர். பாருங்கள்! இன்றைய மாணவ சமுதாயம் எங்குப் போகிறதென்று?

**"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்" (குறள் 293)**

தன் நெஞ்சு அறிந்தவற்றைப் பிறர் அறியார் என எண்ணிப் பொய் சொல்லுதல் கூடாது. பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

அகந்தூய்மை கூட வாய்மையால் காணப்படும். எனவே வாய்மையைச் சிறந்த அறமாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**கல்வி**

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றார் ஔவையார். புறநானூற்றிலே ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடல் ஒன்று, ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவருள்ளும் இளையவன் கற்றால் தாய்க்கு அவன்பால் மதிப்பு கூடும். அரசனும் அவன் வழியிலே நடப்பான். எனவே கல்வி என்பது உயர் நிலைக்குக் கொண்டு செல்லக்கூடியது. அறியாமையை அகற்றும் மந்திரக்கோல். கற்றால் மட்டும் போதுமா? அதன் வழியில் நிற்க வேண்டும்.

Scanned by TapScanner

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் 391)

எப்படி கற்க வேண்டுமெனவும் சொல்லி, எவ்வாறு வாழ வேண்டுமென்பதையும் மக்கள் மனதிலே புகுத்துகிறார்.

கல்லாதவர் கண்களைப் புண்களென்கிறார்

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (குறள் 393)

பாரதிதாசனும் 'கல்வியிலான் ஆவியிலானே' என்றும் 'கல்வி இல்லான் கண் இல்லான்' என்றும் கூறுவர். மேலும்,

"கல்லான் வலியிலான்; கண்ணிலான் அவன்பால்
எல்லா நோயும் எப்போது முண்டு
கற்க எவரும்; எக்குறை நேரினும்
நிற்காது கற்க. . . ." என்பார்.

'கல்வி கரையில' என்று நாலடியார் சுட்டும். 'குழந்தைகளின் உள்ளத்தின் கட்டுப்பாட்டுக்கு வழிசெய்வதே கல்வியாகும்' என்பார் ஜான்லாக் என்னும் அறிஞர். ஒருவன் சேர்த்து வைக்கும் மகத்தான சொத்து கல்வி.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" (குறள் 400)

தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போலக் கற்க, கற்கத் தான் நம் அறிவு வளரும். சாதாரண அண்ணாவாக இருந்தவர் கன்னிமாரா நூலகத்தின் அனைத்து நுல்களையும் கற்றதனால் தான் பேரறிஞர் அண்ணாவாக முடிந்தது. நம் வாழ்க்கைக்குப் பீடு சேர்ப்பதே கல்விதான். கட்டடத்திற்குச் செங்கல் போன்று வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் கல்வி தேவை.

**இன்னா செய்யாமை**

நல்லது செய்யவில்லையாயினும் பிறர்க்குத் தீமை செய்தல் கூடாது.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (குறள் 319)

பிறர் நமக்குத் தீமை செய்தாலும் நாம் அவருக்கு நன்மையே செய்ய வேண்டும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (குறள் 314)

Scanned by TapScanner

புத்தரை ஒருவன் ஒருமுறை காறி உமிழ்கின்றான். புத்தர் எதுவுமே பேசவில்லை. ஆனால் அவன் மனதிலே போராட்டம். மறுநாள் புத்தரிடம் வந்து என்னை மன்னிக்க வேண்டும் என்கிறான். நீ நேற்றே இறந்து விட்டாய். இன்று நீ புதிய மனிதன். மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை என்கிறார். தன்னைப் போலப் பிறரையும் மதித்து வாழவேண்டும்.

முயற்சி

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" (குறள் 616)

நூலொன்றிலே படித்த ஒரு செய்தி. முதலாளி ஒருவர் தம்மிடம் வேலை தேடி வந்த முப்பது இளைஞர்களை நோக்கி, 'இதோ இந்தக் குறியை எழுதட்டை அடிக்க வேண்டும். எழுதட்டையும் சரியாக அடிக்கின்றவனுக்கு வேலை கிடைக்கும் என்றார். ஒருவரும் சரியாக அடிக்கவில்லை. இன்று போய் நாளை வந்து அந்தக் குறியை அடியுங்கள் என்றனுப்பினார். மறுநாள் ஒருவன் மட்டும் தான் வந்தான். எழுதட்டையும் சரியாக அடித்தான். அவருக்கோ வியப்பு. எப்படி? என்று வினவினார். அப்பொழுது அந்த இளைஞன் கூறினான். நான் என் தாயைக் காப்பாற்றுவதற்காக அந்த உத்தியோகத்தைப் பெற விரும்பினேன். அதனால் வீட்டில் இரவு முழுவதும் இதே மாதிரி குறி வைத்து அடித்துப் பழகினேன் என்றான். எனவே முயற்சி செய்தால் வானம் கூடத் தொட்டு விடும் தூரம் தான்.

"மூச்சு விட்டுக் கொண்டிருப்பவன் எல்லாம்
மனிதன் இல்லை
முயற்சி செய்து கொண்டிருப்பவன்
மட்டும் தான் மனிதன்" என்பார் பா. விஜய்

முயற்சி தான் வளர்ச்சிக்குக் காரணம். முயற்சி உடையவர்களுக்கே இந்த உலகம் சொந்தம். சோர்வில்லாமல் முயற்சி செய்பவர்கள் உன்னதமான இடத்தைப் பிடிப்பது உறுதி. அதனால்தான் வள்ளுவரும்,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள் 619)

என்கிறது. எனவே முயற்சி செய்தால் வாழ்க்கையில் உயரலாம் என்ற சிந்தனையை நம் உள்ளத்தே விதைக்கின்றது வள்ளுவம்.

## சினம் கொள்ளாமை

சினம் என்பது ஒரு கொடிய விஷம். இது அடுத்தவர்களை மட்டுமின்றித் தன்னையே அழித்துவிடும். சினம் பற்றி இறையன்பு அவர்கள் சொன்ன கதையொன்று நினைவுக்கு வருகிறது.

சினமே உருவெடுத்தாற் போன்று இருந்த தன் மகனைத் திருத்த நினைத்தார் தந்தை.

'உனக்குக் கோபம் வரும்போதெல்லாம் நம் மதில் சுவரில் ஆணியடிக்க வேண்டும். ஒரு நாளைக்கு எத்தனை முறை கோபப் பட்டாலும் அத்தனை முறையும் ஆணியடிப்பாய்' என்றார்.

அவனும் அப்படியே செய்ய ஆரம்பித்தான். உறுதியான சுவருக்குள் ஆணியை அடிப்பது அவனுக்குச் சிரமமாக இருந்தது. ஆணியடிக்கிற கஷ்டத்தில் கோபத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆரம்பத்தில் 15, 10 என்று அடித்த ஆணிகள் ஐந்து, நான்கு எனக்குறைந்து ஒரு நாள் ஆணியே அடிக்காத சூழல் ஏற்பட்டது.

கோபப்படுவதையும் அதனால் செலவாகும் சக்தியும் அவனுக்குப் புரிந்ததால் அவன் கோபம் நிற்க ஆரம்பித்தது.

தந்தையிடம் சென்று கூறினான். இரண்டு, மூன்று நாட்கள் ஆகின்றன. நான் ஆணியே அடிக்கவில்லை. எனக்குக் கோபமே ஏற்படவில்லை.

'அப்படியா? நல்லது. நீ அடித்த ஆணிகளையெல்லாம் நீயாகவே பிடுங்கி விடு. அவனுக்கு அடிப்பதைக் காட்டிலும் கடினமாக இருந்தது. சிரமப்பட்டு பிடுங்கிவிட்டுத் தந்தையிடம் வந்தான்.

'எல்லா ஆணிகளையும் பிடுங்கிவிட்டேன்' நீ பிடுங்கி விட்டது என்னவோ உண்மைதான். ஆனால் ஆணி அடிப்பதற்கு முன் இருந்தபடியாகவா இப்போது அந்தச் சுவர் இருக்கிறது?'

அந்தச் சுவர் முழுவதும் ஏகப்பட்ட ஆணி அடித்த அம்மைத் தழும்புகள்! கோபத்தால் வார்த்தைகளைச் சிதறி விட்டுப் பின்னர் அவர்களைச் சமாதானம் செய்துவிட்டாலும் அந்தக் கோபம் ஏற்படுத்திய ரணங்கள் தழும்புகளாக நின்றுவிடும் என அவனுக்குப் புரிய ஆரம்பித்தன.

இதனையே வள்ளுவரும்,

**"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்"** (குறள் 305)

எனக் குறிப்பிடுவார்.

ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவன் தான் கோபத்தை அடக்க வேண்டும். இல்லை என்றால் அவனது சினம் அவனையே அழிக்கும்.

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்" (குறள் 306)

சினம் என்னும் நெருப்பு தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும். சினத்தை முக்கியமாகக் கருதுபவன் அழிவது உறுதி. சினத்தை விட ஒருவனுக்குக் கொடிய பகை வேறு இல்லை. ஒருவன் தன் மனத்தால் கோபத்தை எண்ணாமல் வாழ்வானானால் அவன் எண்ணிய நன்மைகள் எல்லாவற்றையும் பெறுவான். சினம் நீக்கினால் வாழ்வில் இன்பம் பெருகும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

வாழ்க்கையை வளமாக்கும் மந்திரச் சொற்களை மக்கள் மனத்தில் உதிர்த்து அவர்களைச் சிந்திக்க வைக்கின்றார் வள்ளுவர். நம்மையும் வாழச் செய்து பிறரையும் வாழச் செய்கின்றது வள்ளுவம்.

வாழ்க்கைக்கு வள்ளுவத்தைக் காட்டிலும் வழிகாட்ட வல்லது வேறொன்றுமில்லை.

"வள்ளுவப் பெருமான் சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடைமை"
"வள்ளுவன் வழிதனிலே இனி
வாழ்க்கை ரதம் செல்லுமே"

என்ற பட்டுக்கோட்டையின் பாடல்வரிகள் நினைவு கூரத்தக்கன. ஓங்குக! வள்ளுவர் நெறி.

❑

Scanned by TapScanner

# 2

# கம்ப ராமாயணத்தில் உறவுகள்

- முனைவர் பே.மகேஸ்வரி

பக்தி இயக்கம் எழுந்த காலத்தில் திருமாலின் அவதாரங்களைப் பற்றிப் பேசுகின்ற பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்கள் செல்வாக்கான இடம் பெற்றிருந்தன.

வேதங்களில் உள்ள நீதிகளை நிகழ்வுகளாக விரித்து உரைப்பவை களே புராண இதிகாசங்கள். 'நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவன் கூற ஆரணக்கவிதை செய்த வான்மீகியின் இராமாயணமே ஆதிகாவியமாகும். அக்காவியத்தைத் தழுவி தமிழில் கம்பரும், இந்தியில் துளசிதாசரும், மலையாளத்தில் எழுத்தச்சனும் இராமாய ணத்தை எழுதியுள்ளனர். மேலும் கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி உள்ளிட்ட இந்திய மொழிகளிலும் இக்காப்பியம் அரங்கேறி இருக்கிறது. மேலும் கீழை நாடுகளான இலங்கை, தாய்லாந்து, மலேசியா, ஜாவா, பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளிலும் இராமாயணம் பரவியுள்ளமையை அறிய முடிகின்றது.

இராமாயணத்தின் சிறப்பைப் பற்றி மகாத்மா காந்தியடிகள், "வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் இடையில் உன்னதமாக வாழ்ந்த ஓர் உத்தமனின் வாழ்க்கையைக் கூறும் நூல் இராமாயணம் - இது நிறைவடைந்த ஒரு மனிதனின் ஆதர்ச சரிதை" - என்று தன் சத்திய சோதனை என்ற நூலில் குறிப்பிடுகிறார். "கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ" என்று பெரிய திருமொழி நூலில் நம்மாழ்வார் புகழ்ந்து கூறுகின்றார்.

Scanned by TapScanner

## இராமாவதாரத்தின் சிறப்பும் பிறப்பும்

இராவணன் போன்ற அசுரர்களின் கொடுமையால் வருந்திய தேவர்கள், அரவணைச் செல்வராகிய திருமாலிடம் அணுகி, "ஆலிலை சயனா, இராவணன் போன்ற அசுரர்களால் மிகவும் வருந்துகிறோம். அவர்களை அழித்து எங்களைக் காத்தருள வேண்டும் என்று விண்ணப்பம் புரிந்தனர். அதன்படி திருமால், "தேவர்களே! இராவணன் மானிடரையும் வானரங்களையும் அற்பப் பிராணிகளாகக் கருதி, இவைகளை ஒழித்து ஏனையோரால் தனக்கு அழிவு வர முடியாதபடி வரம் பெற்றுள்ளான். ஆதலின் வானவர்களாகிய நீங்கள் வானரர்களாகப் பிறப்பீர்களாக! யாம் இராமாவதாரம் புரிந்து நும் குறையை நீக்குதும்" என்று கூறி, "அமரர்களே, மனுகுலத்தில் தசரதனுக்கு யாம் மகனாக அவதரிப்போம். சங்கும், சக்கரமும், ஆதிசேடனும் எனக்குத் தம்பியர்களாகப் பிறப்பார்கள் என்றார். அவ்வாறே மூன்று உடன்பிறப்புக்களும் பரதன், இலட்சுமணன், சத்துருக்கனன் என்ற பெயர்களில் அவதரித்தனர்.

## இராமனின் தோற்றம்

தசரதன் குலகுருவாகிய வசிட்ட முனிவனது கட்டளைப்படி கலைக்கோட்டு முனிவனது பாதங்களைத் தொழுது, நல்ல தவத்தைச் செய்து நான்கு மக்களைப் பெற்றெடுத்தார். அதில் முதல்வனாக விளங்கியவனே இராமன்.

> "கரா மலையத், தளர் கைக் கரி எய்த்தே
> அரா - அணையில் துயில்வோய் ! என, அந் நாள்,
> விராவி அளித்தருள் மெய்ப் பொருளுக்கே,
> 'இராமன்' எனப் பெயர் ஈந்தனன் அன்றே."

*(கம்பராமாயணம்-பாலகாண்டம்-திருஅவதாரப்படலம் - 296)*

ஒரு முதலை காலைக் கவ்விக் கொண்டு வருத்த, அதனால் சோர்வுற்ற துதிக்கையை உடைய யானையான கஜேந்திரன் பாம்பணையில் துயில்பவனே என அழைக்க, அந்த நாளிலே விரைந்து அந்த முதலையை அழித்து யானையைக் காத்தருளிய பரம் பொருளான அப்பரமனே 'இராமன்' என்னும் பெயரை உடையவன், பிரளயத்தின் போது அப்பெரு வெள்ளத்தே அழியாதபடி எல்லா உலகங்களையும் தனது வயிற்றிலே வைத்துப் பாதுகாத்துக் கொண்டு, அவ்வெள்ள நீரிலே ஆலிலையின் மீது ஒரு பாலகனாய் இருந்த திருமாலே 'இராமன்' என்று கம்பர் வருணிக்கிறார்.

## இராமனின் பண்புகள்

நாட்டை ஆள்வோர் நல்லோர்களிடம் இணக்கமாக இருக்க வேண்டும். தீயோர்களின் இணக்கத்தை ஒதுக்க வேண்டும். பணிவு, அடக்கம் ஆகியன காக்கப்பட வேண்டும். எளிமை, பரிவு, தியாகம், வீரம், இன்சொல் ஆகியவை இருக்க வேண்டும். வன்சொல் தவிர்க்கப்பட்டு, தீமையை எதிர்த்துத் தன்னலத்தைத் துரத்த வேண்டும். செல்வத்தின் செருக்கு விரட்டப்பட வேண்டும். மேற்கண்ட இத்தனை பண்புகளும் இராமனிடம் மிகுந்து இருந்ததால், நாட்டை வளமுள்ள நாடாக, குடிமக்கள் பயனுள்ள வாழ்க்கை நடத்துவதற்கேற்ற நாடாக மாற்றிக் காட்ட முடிந்தது.

உலகில் அனைவரும் ஒழுக்க சீலர்களாய், உத்தமர்களாய் இருக்க மாட்டார்கள். தன்னலம் காரணமாகச் சிலர் ஒழுக்கத்திற்கு இழுக்கம் இழைப்பர். உத்தம குணங்களுக்கு ஓய்வு அளிப்பர். தியாகத்தைப் பிறர்மீது திணிப்பர். எனவே, நாட்டையாளும் அரசன் தீயோரைக் கண்டித்து நல்லோரைக் காக்க வேண்டும். இங்ஙனம் காக்கும் கடமைகளை இராமன் தவறாது செய்து ஓர் உத்தம அரசராய்த் திகழ்ந்தார்.

## இராம சகோதரர்களின் பெயர் விளக்கமும் சிறப்பும்

இராமன் - மகிழ்ச்சியைத் தருகின்றவன்
பரதன் - நற்குணங்களைத் தாங்குகின்றவன்
இலட்சுமணன் - உத்தம லட்சணங்களை உடையவன்
சத்துருக்கனன் - பகைவர்களைக் கொல்பவன்

அயோத்தியில் தசரத மன்னனுக்கு மக்களாகத் தோன்றி, நால்வரும் நான்கு வேதங்கள் போல் வளர்ந்தனர். அண்ணன் தம்பியருக்குள் ஒன்று இரண்டு நாட்களே இடைவெளியிருந்தும் அண்ணனுக்குக் கொடுக்கும் மதிப்பில் இம்மியளவும் குறையாமல் வாழ்ந்து வந்தனர். தம்பியர்கள் அண்ணனுடைய பண்பு நலன்கள் யாவும் தம்மாட்டும் குறைவறப் பெற்றிருந்தனர்.

## உறவுகளின் வெளிப்பாடு

அறநெறியே வடிவெடுத்த இராமன், எல்லாச் சூழ்நிலைகளிலும் அறத்தையே கடைப்பிடிப்பவனாக இலங்குகின்றான்.

"குகனொடும் ஐவரானோம்
முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்

Scanned by TapScanner

எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய
நின்னொடும் எழுவ ரானோம்
புகலருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை”

*(யுத்த காண்டம் - வீடணன் அடைக்கலப்படலம் - 6507)*

என்ற பாடலின் வாயிலாக சாதி, குலம், பிறப்பு என்று தடுமாறாது மறத்தை எதிர்த்துப் போராடும் குகனோடும், சுக்கிரீவனோடும், விபீடணனோடும் உறவுப்பாலம் அமைத்த இராமனை நினைக்குந் தோறும் மனித உறவை நிலைப்படுத்த பிரிவினைகளை வேரறுக்க வந்த சமத்துவத் தலைவனாக எண்ணத் தோன்றுகின்றது.

### இராமன் - பரதன் உறவு

இராமன் கோசலையின் மைந்தனாகப் பிறந்து கைகேயியினால் வளர்க்கப்படுகின்றான். பரதன் கைகேயியின் மைந்தனாகப் பிறந்து கோசலையால் வளர்க்கப்படுகின்றான். ஆனால், தாயார் இருவரும் வேறுபட்டவர்களாக இருந்தபோதும், தன் நிறத்தையும், தன் அழகையும் கொண்டவனாக இருந்த பரதனிடத்தில் பேரன்பு கொண்டவனாக விளங்குகின்றான் இராமன். அதேபோல பரதனும் தாய், தந்தை, குரு ஆகியோரைக் கடந்த உயர்ந்த மதிப்பும் மரியாதையும் தன் அண்ணனிடம் கொண்டவனாக விளங்குகின்றான்.

வடிவாலும் பண்பாலும், தான் இராமனை ஒத்திருந்தும் இராமனுக்குத் தான் ஒரே ஒருநாள் இளையவனாக இருந்தும் தன் தந்தை தன்னை விடுத்து இராமனிடமே பேரன்புடையவனாக இருக்கின்றானே என்ற பொறாமையோ, தான் இராமனோடு நெருங்கிப் பழக இயலாமல் இலக்குவன் இராமனை இணைபிரியாது இருக்கின்றானே என்ற பொறாமையோ எள்ளளவும் பரதனுக்கு இல்லை. இராமனுக்குப் பிடித்த செயல்களையே செய்து வந்த பரதன் இராமனின் உள்ளத்தில் அன்புத் தம்பி என்ற இடம் பெற்றிருந்தான். இராமன் இலக்குவனுடன் கோசிக முனிவர் வேள்வி காக்கத் தன்னைப் பிரிந்த போது, தான் உயிரைப் பிரிந்த உடலைப் போல் இருந்தான். பின் மிதிலைக்குச் சென்று இராமனைத் தொழுது எழுந்து அவன் தழுவிக் கொண்ட அளவிலேயே உயிர் வரப் பெற்றான் என்பதை,

“உன்னு பேரன்புமிக்கு ஒழுகி ஒத்து ஒண்கண் நீர்
பன்னு தாரைகள் தரத்தொழுது எழும் பரதனைப்

பொன்னின் மார்பு உற அணைத்து, உயிர் உறப்புல்லினான்
தன்னை அத்தாதை முன் தழுவினான் என்னவே."

(பால காண்டம்-எதிர்கொள்படலம்-1054)

என்று பரதனுக்கும் இராமனுக்கும் இருந்த அன்புப் பிணைப்பினைக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

ஆட்சிப் பொறுப்பைத் தன் மகனுக்குக் கொடுக்க வேண்டும் என்றும், இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்றும் கைகேயி தசரதனிடம் வரம் பெறுகிறாள். அதன்படி இராமனும் காட்டுக்குச் சென்று விடுகின்றான். ஒரு தவறும் அறியாத பரதன், தசரதனால் கைகேயியின் மகன் என்று முதலில் ஒதுக்கப்பட்டுப், பின் தன்மகன் அல்லன் என்றும் கூறி, ஈமக்கடன் செய்யும் உரிமையும் மறுக்கப்படும் அளவிற்குக் கைகேயி தன்னை வளர்த்த காரணத்தால், தன் மனப்பக்குவத்தை அறிந்து செயல்படாத தாயினால் ஏற்படும் பழியைத் தாங்க வேண்டியவனாகிறான் பரதன்.

ஆனால், பரதனை உள்ளவாறு அறிந்த இராமனோ, பரதனிடம் கொண்ட அன்பு எள்ளளவும் மாறாமல், என் பின்னவன், கோசலையின் காதல் திருமகன், பங்கமில் குணத்து எம்பி, சிறந்த தம்பி, வரிவில் எம்பி என்று அவனைக் குறிப்பிடுகின்றான்.

பரதன், தன் தாய் கைகேயியிடம் கடிந்து கூறித் தந்தையின் பிரிவு குறித்துக் கண்ணீர் விட்டுக் கதறுகிறான். அக்கதறலிலும் தன் அண்ணனுக்கு முடிசூட்டிப் பாராமல், அவனைப் பிரிந்து செல்ல தன் தந்தைக்கு எவ்வாறு மனம் வந்ததோ என்று புலம்புகிறான். பரதன் தந்தை, தாய் சகோதர பாசம் யாவும் உடையவன். அதனால் தந்தை, தாய், சகோதரர் என எல்லாப்பாசத்தையும் இராமனிடம் ஒருங்கு கண்டவன். எனவே, தன் துயரைப் போக்கிக் கொள்ள இராமனைக் காண வருகின்றான் பரதன். இதனை,

'எந்தையும் யாயும் எம்பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன் ; ஆதலால்
வந்தனை அவன் கழல் வைத்தபோது அலால்
சிந்தை வெங்கொடுந்துயர் தீர்கலாது என்றான்'

(அயோத்தியா காண்டம், நகர் நீங்குபடலம்-58)

என்று கூறுகிறார் கம்பர்.

Scanned by TapScanner

தன் அண்ணனைக் கொல்வதற்கு இராமனுடைய துணையை வேண்டிப் பெற்ற சுக்கிரீவனுடைய செயல் இலக்குவனுக்கு வெறுப்பைத் தந்தது. தன் அண்ணனையே கொல்ல முயலும் இவன் மற்றவருக்குத் துணையாக உதவுவான் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்று இலக்குவன் இராமனிடம் கூற, இராமன் 'இலக்குவ! தம்பி அண்ணனைக் கொல்லச் செயற்படுவது விலங்கின் தொழில் தான். மனிதத் தொழில் அன்று. ஆனால், அண்ணனைக் கொன்று விடுவதாகக் கூறுவதும் மனிதப்பண்பு அன்று' என்று இலட்சுமணன் சித்திரகூடத்தில் பரதனை அழித்து விடுவதாகக் கூறிய செய்தியை இலட்சுமணனுக்குக் குறிப்பாக நினைவுறுத்தி "எல்லாத் தம்பியரும் பரதனைப் போல உத்தமமானவராய் இருப்பார்கள் என்று நினைக்கிறாயா ?" என்கிறான்.

> "அத்தா! இது கேள் என ஆரியன் கூறுவான் ; இப்
> பித்து ஆய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆமோ ?
> எத்தாயர் வயிற்றிலும் பின்பிறந்தார்கள் எல்லாம்
> ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?"
>
> *(கிட்கிந்தா காண்டம் - வாலிவதைப்படலம் - 3977)*

என்ற இராமன் கூற்றில் அவன் பரதனை உத்தமத் தம்பியாகக் கொண்டிருந்த செய்தி புலப்படுகிறது.

**இராமன் - இலக்குவன்**

தசரதனின் இளைய மனைவி சுமித்திரையின் மகனான இலக்குவன் இராமனைப் பிரியாத அடியவன் போல வாழ்கின்றான். கோசிக முனிவர் வேள்வி காக்க இராமனை அனுப்புமாறு தசரதனிடம் வேண்ட, தசரதனும் உடன்பட இலக்குவன், இராமனைப் பிரிந்து தனித்திருத்தலை ஆற்றாது அவனுடனே புறப்படுகிறான். அவனுக்கு என்று எந்த வினையும் இல்லை. இராமனுடைய கட்டளையை நிறைவேற்றுவதே அவன் செய்யும் பணி.

மேலும், இராமன் மிதிலையில் திருமண மண்டபத்திற்கு வரும்போது, அவன் தேரில் அமர்ந்திருக்கத் தானும் அன்றே திருமணம் செய்து கொள்ளும் மணவாளனாக இருந்த நிலையிலும், இராமனுக்குக் கவரி வீசும் தொண்டினைப் பிறரிடம் விடாது தானே இலக்குவன் செய்து வந்தான். இலக்குவன் திருமணம் நிகழ்ந்த பின்னரும் தன் மனைவியோடு பொழுது கழிப்பதனை விடுத்துப் பெரும்பாலும் இராமனைப் பிரியாத தம்பியாகவே காணப்படுகிறான்.

Scanned by TapScanner

மரவுரியோடு காட்டிற்குப் புறப்பட்ட இராமனும், இலக்குவனும் தாய் சுமித்திராவிடம் விடைபெறச் சென்ற போது,

'இலக்குவ! உனக்கு இனிக்காடே அயோத்தி; இராமனே தந்தை; சீதையே தாய்; இராமனுடன் தம்பி என்ற உரிமையை விடுத்து அவனுடைய அடியவன் என்ற எண்ணத்தோடு புறப்படு. அவன் அயோத்திக்குத் திரும்பி வந்தால் நீயும் வா. இன்றேல், அவனுக்கு முன் உன் உயிர் பிரியட்டும்' என்று கூறி ஆசி நல்கி விடையளித்தாள்.

"நற்றாதையும் நீ ; தனி நாயகன் நீ ; வயிற்றில்
பெற்றாயும் நீயே ; பிறர் இல்லை."

(அயோத்தியா காண்டம் - நகர் நீங்கு படலம் - 1737)

என்று இராமனிடம் சொல்லிக் கொள்ளும் அளவில், இராமனிடம் பாசம் வைத்திருந்த இலக்குவன், இராமனிடமிருந்து பிரிக்கப்பட்டால், பிரிவைத் தாங்காது உயிரை இழந்துவிடுவான் என்று அவர்களது சகோதரத்துவத்தைக் கம்பர் வெளிக்காட்டுகிறார்.

காட்டில் இராமன் இருந்தபோது, பரதன் நாட்டில் கங்குலில் நெடிது உறக்கம் நீங்கி வாழ்ந்தது போலவே, இலக்குவனும் காட்டில் உறக்கத்தை வென்ற யோகியாகப் பதினான்கு ஆண்டுகள் வாழ்கிறான். இதனை நினைத்து, இராமனும் இலக்குவனிடம் வீடணனுக்கு முடிசூட்டுமாறு கட்டளையிட்ட நேரத்தில், "துஞ்சல் இல் நயனத்து ஐய ! சூட்டுதி மகுடம்" என இலக்குவனை உறக்கத்தை வென்ற உத்தமனாகக் காட்டுகிறார் கம்பர்.

இராமன் நீர் வேட்கை உற இலக்குவனை நீர் கொணருமாறு ஏவ, அவன் அயோமுகி என்னும் அரக்கியால் தூக்கிச் செல்லப்பட இலக்குவன் வராதது கண்டு இறந்து விட்டானோ ? என நினைத்து இராமன் புலம்புகிறான். இறுதியாக இராமன், 'நான் செய்த அறம் எனக்கு நற்பயன் தருவது உறுதியானால், மறுமையிலும் இலக்குவன் எனக்கு உடன்பிறந்தானாக வரல் வேண்டும் என்ற கருத்தில்,

"அறப்பால் உளதேல் அவன் முன்னவனாய்ப்
பிறப்பான் உறின், வந்து பிறக்க"

(ஆரண்ய காண்டம் - அயோமுகிப்படலம் - 3617)

என்று கூறுகின்றான். அதுவே, அடுத்த பிறவியில் அண்ணன் பலராமனாக இலக்குவனும், தம்பி கிருஷ்ணனாக இராமனும் பிறக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

திரும்பி வந்த இலக்குவன் இராமனிடம், கடலிலே செல்பவர் அலைகளுக்கு அஞ்சலாமோ ? என்று கூற,

"பிரிபவர் யாவரும் பிரிக ; பேர் இடர்
வருவன யாவையும் வருக ; வார் கழல்
செருவலி வீர ! நின் - தீரும் அல்லது
பருவரல் என்வயின் பயிலற் பாலதோ ?"

*(ஆரண்ய காண்டம் - அயோமுகிப்படலம் - 3629)*

என்று இலக்குவனிடம் தான் கொண்ட பாசத்தை இராமன் எடுத்துக் கூறுகின்றான்.

தன்னலம் கருதாது குடிமக்கள் நலம் கருதி ஆட்சிப்பொறுப்பை ஏற்க, முடி சூட வேண்டிய மன்னனான சுக்கிரீவனுக்குத் தன்னலம் என்பதே சற்றும் இல்லாத இலக்குவனைக் கொண்டு இராமன் முடி சூட்டுவித்தான்.

"மறையோர் ஆசி வழங்க, வானுளோர்
நறை தோய் நாள்மலர் தூவ, நல்நெறிக்கு
இறையோன் முன்வினைசெய்ய, அவ்வேந்தலை
துறையோர் நூல்முறை மௌலி சூட்டினான்"

*(கிட்கிந்தா காண்டம் - அரசியல் படலம் - 4119)*

என்கிறார் கம்பர்.

தம்பி நாகபாசத்தால் கட்டப்பட்டதனைக் கண்ட இராமன், இந்நாகபாசத்தை இந்திரசித்திற்கு வரமாகக் கொடுத்த தெய்வமே இரங்கி அப்பாசத்தை நீக்கினால் சினம் நீங்குவேன். இன்றேல் திரிபுரத்தைச் சாம்பலாக்கியமை போல உலகையே அழித்து விடுகிறேன். ஆனால், ஒருவன் செய்த தீங்கிற்கு உலகையே அழிப்பது முறையாகாது. அதனால், எம்பியே இறக்கும் என்னின் புகழ்தான் என்னை ? பழி என்னை ? அறம் தான் என்னை ? என்றாற் போல வெகுளியும் வருத்தமும் தோன்றக் கூறி இப்பாசம் இலக்குவனை வீழ்த்தியது என்னின் பின்னர் யானும் வீழ்வேன் என்று கருதிய கூற்றில் அவன் இலக்குவனிடம் கொண்டிருந்த பாசம் புலப்படுகிறது.

மேலும்,

"மன்னவன் பணியன்றாகின் நும்பணி மறுப்பனோ ? என்

பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ?"
*(அயோத்தியா காண்டம் - கைகேயி சூழ்ச்சிப் படலம் - 1604)*

என்று கூறும்போதும், சகோதரப்பண்பு மேலோங்கியிருப்பதைக் காண முடிகிறது.

**இராமன் - சத்துருக்கனன்**

சுமித்திரைக்கு இரண்டாவது மகனாகத் தோன்றியவன் சத்துருக்கனன். இவன் இராமனுடைய அடியவனான பரதனுக்கு அடியவனாக வாழ்ந்தவன். இவனுடைய வாழ்க்கை மனித வாழ்க்கையின் முடிந்த முடிபான அடியார்க்கு அடியவராயிருத்தலைத் தெரிவிக்கிறது. இராமன் காட்டுக்குச் சென்ற பின்பு நந்திக்கிராமத்திலேயே தங்கிய பரதனின் கட்டளைப்படி அயோத்தியில் தங்கி அரசுப் பணிகளைக் குறைவில்லாமல் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சொன்னபோது, தன் செவிகள் இரண்டையும் இரு கைகளாலும் பொத்திக்கொண்டு நஞ்சினை உண்டவனைப் போல மயங்கி விழுகிறான். பின்னர் சிறிது நாழிகை கழித்து எழுந்து, மிகுந்த கோபத்தோடு, 'நான் உனக்கு என்ன தவறு செய்து விட்டேன்? அண்ணன் நாட்டை விட்டுக் காடு ஆளப் போனான். அவனைக் காத்துத் தம்பி ஒருவன் அவன்பின்னே போனான். குறிப்பிட்ட நாளில் அவர்கள் மீளவில்லை என்றால் உயிரைவிட உள்ளான் தம்பி ஒருவன். இறுதியில் எஞ்சியுள்ள யானா அரசு ஆள்பவன் ? எப்பேர்ப்பட்ட இனிய அரசாட்சி இது ?

**'கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக் காத்து, பின்பு**
**போனானும் ஒரு தம்பி : போனவர்கள் வரும் அவதி போயிற்று' என்னா**
**ஆனாத உயிர்விட என்று அமைவானும் ஒரு தம்பி, அயலே, நாணாது**
**யான் ஆம் இவ்வரசு ஆள்வென் ? என்னே! இவ் அரசாட்சி ! இனிதே, அம்மா!**
*(யுத்த காண்டம் - மீட்சிப் படலம் -10172)*

நீ நந்திக் கிராமத்தில், தவம் மேற்கொண்டு இருக்கிறாயே ? உன் அடிமையாகிய நான் உனக்குப் பின்னும் எவ்வாறு உயிர் வாழ்வேன் என்று கேட்கிறான் சத்துருக்கனன். இவ்வாறாக, ஒரு சில வார்த்தைகளே பேசக் கூடியவன். இவன் பரதனிடம் கொண்டிருந்த பக்தி, இலக்குவனுடைய இராமபக்திக்கு இணையானது. இராமாயணத்தில் சத்துருக்கனன் ஒருவனே பரதன் போன்று இருந்தான் என்று கூறப்படுகிறது.

## இராமன் - குகன் !

தசரதன் மக்கள் நால்வரை அடுத்து, ஐந்தாவதாக இராமனால் உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன் குகன். படகு செலுத்துபவன் பிறப்பின் சார்பால் வேடனாயினும் உள்ளத்தால் உயர்ந்த பண்பாளன்; சான்றோரிடம் பழகும் முறையை அறிந்தவன். இராமன் கங்கைக் கரைக்கு வந்திருப்பதனைக் கேள்வியுற்று, காணிக்கையாக, தான் உவந்து உண்ணும் பக்குவப்படுத்தப்பட்ட மீனையும் தேனையும் ஏந்திச் சுற்றம் சூழ இராமனை வந்து தரிசித்தவன்.

குகன், இராமனுடைய கண்ணழகில் ஈடுபட்டு, அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்து பணிவோடு வாயைக் கைகளால் பொத்திக் கொண்டு நின்றான் என்பதை,

> "எப்பொருளும் தானாய் மரகதக் குன்றம் ஒக்கும் ;
> அப்பொழுதைத் தாமரைப்பூ கண்பாதம் கை கமலம் ?"

என்று திருவாய் மொழிப்பாடல் கூறுகிறது.

இரவு முழுவதும் குகனுடன் தங்கியிருந்தபோது, இராமனுக்குத் தேவையான காய், கனி, கிழங்கு முதலியனவற்றைக் கொடுத்து அன்போடு கவனித்துக்கொள்கிறான். மறுநாள் அவர்கள் செல்ல நினைக்கும்போது தானும் உடன் வருவதாகக் கூறுகிறான். அப்போது இராமன்,

> 'என் உயிர் அனையாய் நீ ; இளவல் உன் இளையான் ; இந்
> நன்னுதல் நின் கேள் ; நளிர் கடல் நிலமெல்லாம்'
> உன்னுடையது ; நான் உன், உரிமையின் உளென்...
> (அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம் - 697)
> முன்பு உளம் ஒரு நால்வேம்..இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்..
> (அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம் - 698)
> வடதிசை வரும் அந்நாள் நின்னுழை வருகின்றேன்.
> (அயோத்தியா காண்டம்- கங்கைப்படலம் - 699)
> அங்குஉள கிளைகாவற்கு அமைதியின் உளன் ; உம்பி
> இங்கு உள கிளை காவற்கு யார் உளர் ? இசையாய் நீ ;
> உன் கிளை எனது அன்றோ ? உறுதுயர் உறலாமோ ?
> என் கிளை இது கா என் ஏவலின் இனிது என்றான்
> (அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம் - 700)

என்று குகன் உள்ளம் ஓரளவு இசையுமாறு கூறி, வருத்தம் குறையாவிடினும் தான் பணித்த சொற்களைக் கடவாதவனாகிய

குகனுடைய இசைவு பெற்றுச் சீதையுடனும் இலக்குவனுடனும் புறப்பட்டான் இராமன். இராமனுடைய நினைவாக, அவன் திரும்பி வரும் நாளைக் கணக்கிட்டுக்கொண்டு, அவனுக்குக் குற்றேவல் செய்யும் வாய்ப்பினைப் பெற முடியாத தன் பேற்றுக் குறைவை நினைந்தவாறு காலம் கழித்தான் குகன்.

பதினான்கு ஆண்டுகள் கழித்து இராமன் அயோத்தி மீண்ட வழியில் பாரத்துவாசர் ஆசிரமத்தில் தங்கியிருக்க இராமன் வரவேண்டிய நாளைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த குகன் அம்முனிவர் ஆசிரமத்தை அடைந்து இராமனை வணங்கி, அவனிடம் அடிமைப்பணி செய்யும் வாய்ப்புத் தனக்குக் கிட்டவில்லையே என்று கூறி வருந்தினான். இதை,

"ஆயன பிறவும் பன்னி அழுங்குவான் தன்னை ஐய
நீ இவை உரைப்பது என்னே ? பரதனின் நீ வேறு உண்டோ ?
போய் இனிது இருத்தி என்னப் புளிஞர் கோன் இளவல் பெற்றாள்
மேயினன் பணிந்துபின் அன்னை விரைமலர்த் தாளில் வீழ்ந்தான்"
(யுத்த காண்டம்- மீட்சிப்படலம்-315)

எனக் கம்பர் இராமன் குகன் உறவைப் புலப்படுத்துகிறார்.

**இராமன் - சுக்கிரீவன்**

வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்குப் பட்டம் சூட்டுகின்றான் இராமன். மௌலி சூடிய சுக்கிரீவனை மார்புறத் தழுவிய இராமன்,

"வாய்மை சால் அறிவின் வாய்த்த
மந்திர மாந்தரோடும்,
தீமை தீர் ஒழுக்கின் வந்த
திறத் தொழில் மறவரோடும்,
தூய்மை சால் புணர்ச்சி பேணித்
துகள் அறு தொழிலை ஆகிச்
சேய்மையோடு அணிமை யின்றி
தேவரின் தெரிய நிற்றி"
*(கிட்கிந்தா காண்டம் - அரசியல் படலம் - 4122)*

என்று "அறிவிற்சிறந்த சத்திய சீலர்களையும், வலிமையிற் சிறந்த ஒழுக்கம் ஓம்பும் வீரரையும் தூய நண்பரையும், சுற்றமாகக் கொண்டு அவர்களை அணுகாதும் அகலாதும் பழகச் செய்து வடுவில்லா வேந்தன் தொழிலை இயற்றித் தேவன் எனத் திகழ்வாயாக" என்று கூறுகிறான்.

மேலும்,

"செய்வன செய்தல், யாண்டும்
தீயன சிந்தியாமை,
வைவன வந்த போதும்
வசை இல இனிய கூறல்
மெய் சொலல் வழங்கல், யாவும்
மேவின வெஃகல் இன்மை,
உய்வன ; ஆக்கித் தம்மோடு
உயர்வன உவந்து செய்வாய்"

*(கிட்கிந்தா காண்டம் - அரசியல் படலம் - 4125)*

தூயன சிந்தித்து நல்லன செய்தல், கடுஞ்சொல் பொறுத்து இன்சொல் பேசல், வாய்மை, தவறாதிருத்தல், பிறர் பொருள் வெஃகாமை ஆகிய உறுதிப் பொருள்களைக் கடைப்பிடித்துக் குடிகளை உயர்த்துவதன் மூலம் தானும் உயர்வதையே மனத்துக்கினிய கருமமாகக் கொள்வாய் என்றான் இராமன். இவ்வாறு கவிக்குலத்து அரசனான சுக்கிரீவன் மேல் கொண்ட சகோதர உறவு வெளிப்படுகிறது.

**இராமன் - விபீடணன்**

இராவணன் தம்பி விபீடணன் இராமனை அடைக்கலமாக அடைய வந்தபோது, எல்லோரும் விபீடணன் வஞ்சகமாக வந்துள்ளான் என்று கூறியபோது, தஞ்சம் புகுந்தவனை நஞ்சமென விலக்குவது அறம் திறம்புவதாம் என்று கருதினான் இராமன். வீடணனிடம் முகத்தால் நட்புக்காட்டி, மனத்தில் வஞ்சம் பாராட்டும் சிறுமைக்கும் அவன் ஆளாகவில்லை. 'வந்தவனால் நன்மையே ஆகுக, தின்மையே ஆகுக, சரணம் என்றவனை ஏற்றே தீருவேன்' என்றான் அந்த உத்தமன்.

"வெற்றியே பெறுக, தோற்க ;
வீக, வீயாது வாழ்க ;
பற்றுதல் அன்றி உண்டோ ?
அடைக்கலம் பகர்கின்றானை"

*(யுத்த காண்டம் - வீடணன் அடைக்கலப்படலம் - 6469)*

என்று இராமன் - விபீடணன் உறவைக் கம்பர் வெளிப்படுத்துகிறார்.

**இராமன் - சடாயு**

சடாயு தந்தையின் இடத்திலிருந்து மைந்தனாகிய இராமனின் சினத்தைத் தணித்தது மிகச் சிறந்த பகுதியாகும். சீதையைக் கொண்டு சென்றவன் யார் என்பதைக் கூறுவதற்கு முன் அவன் ஆவி பிரிந்து விடுகிறது. பெற்று வளர்த்த தந்தையாகிய தசரதனுக்கு, தந்தை உரிமை

Scanned by TapScanner

பற்றிக் கிடைக்க வேண்டிய இந்தச் சிறப்பு கிடைக்கவில்லை. இராமாவதாரம் எடுத்த பரம்பொருளின் கையினால் நீர்க்கடன் செய்யப்பெறும் பேறு தந்தை முதலாகிய எந்த மனிதருக்கும் கிடைக்கவில்லை. எங்கோ காட்டில் வாழ்ந்த பறவைக்குக் கிடைத்தது என்றால், இராமனின் அன்பே இதற்குக் காரணமாகும்.

இவ்வாறாக, கம்பராமாயணத்தில் இராமன் - பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோரிடத்துக் கொண்டிருந்த உறவு, கங்கைக்கரை வேடர் குலத் தலைவனாகிய குகனை உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொண்டது, வானரர் தலைவன் சுக்கிரீவனைச் சகோதரனாகக் கொண்டது, அரக்கர் இன விபீடணனைத் தம்பி உறவாக்கியது, பறவை இனத் தலைவன் சடாயுவைத் தந்தை உறவு கொண்டது, கரடிகளின் தலைவனான சாம்பவானையும் உறவினராகப் போற்றியது என்றும் இவற்றைக் காணும்போது, மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பாசம், அமைதி, நிதானம், விட்டுக் கொடுக்கும் தன்மை சாதி மத இன வேறுபாடு கருதாது மனநிலை ஆகியவை புலனாகின்றன.

# 3

## திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுகள்

-முனைவர் ச.பர்வத கிருஷ்ணம்மாள்

உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை விளையாட்டுகள் மனித வாழ்வில் முக்கிய இடம் வகித்து வருகின்றன. இவ்விளையாட்டுகள் மனிதனுக்கு நல்ல உடற்பயிற்சியாக அமைந்து, தெளிந்த சிந்தனைத் திறனை உருவாக்கி, அறிவு வளர்ச்சியை மேம்படச் செய்வதோடு மனதிற்கு மகிழ்ச்சியையும் தருவதாக அமைகின்றன.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே" (தொல். நூற்பா : 1204 )

என "அல்லல் நீத்த உவகை" அளிக்கும் செயல்களுள் விளையாட்டையும் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். நமது தமிழ் இலக்கியங் களிலும் கூட விளையாட்டுகள் முக்கிய இடம் பிடித்துள்ளன.

### விளையாட்டு - வரையறை

விளையாட்டு என்னும் பழந்தமிழ்ச் சொல் பல்வேறு நிலைகளில் நோக்கப்படுகிறது. விளையாட்டு என்பது யாது? ஆட்டம், போட்டி விளையாட்டு, வன்மை விளையாட்டு, இன்பப் பொழுது போக்கு எனப் பலவாகப் பொருள் தருகிறது சொற்களஞ்சியம்.

விளையாட்டு என்பதற்கு "விரும்புகின்ற ஆட்டம்" என்று தேவநேயப்பாவாணரும், "இன்பம் விளைவிக்கும் ஆட்டம்" என்று மு. இராகவையங்காரும், "விதிகளை வகுத்துக்கொண்டு ஆடும் ஆட்டம்" என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும் பொருள் கூறுகின்றனர். "விளையாட்டு என்பது மகிழ்ச்சி உணர்ச்சியோடு தொடங்கி மகிழ்ச்சி உணர்ச்சியோடு முடிவது" என்றும், "விளையாட்டின் முதற் பயன் இன்பமே" என்றும், "விளையாட்டு அதன் செயற்பாட்டிலேயே அமைதி, ஆறுதல், இன்பம் தருவது" என்றும், "விளையாட்டு என்பது

ஒரு செயல். அதில் மனநிறைவு என்பது ஒரு பகுதி ; தன் ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு பகுதியே விளையாட்டு" என்றும், "விளையாட்டென்பது சிரமமின்றி, இலேசாகச் செய்கின்ற, வேடிக்கையான மகிழ்ச்சி நிறைந்த செயல்" என்றும் அறிஞர் பெருமக்கள் பலவாறு கூறியுள்ளனர். மேற்கூறிய விளக்கங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது ஓய்வு வேளைகளில் மன மகிழ்ச்சிக்காகச் செய்யக்கூடிய எளிமையான, வேடிக்கையான செயல்களே விளையாட்டு எனலாம். உடலையும் மனத்தையும் வளப்படுத்தும் விளையாட்டு சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றது. எனவே தான் "விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சி அளிக்கும் களம்" என்கிறார் டாக்டர் இரா. பால சுப்பிரமணியம்.

## விளையாட்டுகளின் வகைகள்

குழந்தைகள் முதல் பெரியோர் வரையிலும் பால்வேறுபாடின்றி விரும்பி ஆடப்படும் இவ் விளையாட்டுகளைப் பொதுவாக அகவிளையாட்டுகள், புற விளையாட்டுகள் என்று பிரிக்கலாம். அகவிளையாட்டுகள் மகளிரால் விரும்பி ஆடப்பட்டன. ஆடவர் புற விளையாட்டுகளையே விரும்பி ஆடினர். கிட்டிப்புள், மற்போர், ஏறு தழுவுதல் முதலான விளையாட்டுகள் உடலளவில் பெரும் சக்தி தேவைப்படக் கூடிய, முரட்டுத்தனமான விளையாட்டுகள் ஆகும். எனவே இவை ஆடவரால் பெரிதும் விரும்பி ஆடப்பட்டன. மகளிர் மென்மையான இயல்பு உடையவர்கள்; ஆதலால் அவர்கள் கண் புதைத்து ஒளிந்தாடல், கழங்காடல், தாயம், பல்லாங்குழி, குரவையாடுதல், சிற்றில் கட்டி விளையாடல், சிறு சோறு சமைத்தல், பாவை விளையாட்டு, மலர்கொய்தல், மணற்குவியலில் மறைத்தாடல், பிசி - நொடி விளையாட்டு, வள்ளை அகவுதல், ஊசல், தூங்கல் போன்ற விளையாட்டுகளையே விரும்பி ஆடினர்.

## திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுகள்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றுள் எட்டாம் திருமுறையாக அமைவது திருவாசகம். மாணிக்கவாசகர் பெற்ற இறை அனுபவத்தின் வெளிப்பாடே திருவாசகமாய் மலர்ந்தது. இளம்பருவத்தில் மனதில் துளிர்க்கும் நற்சிந்தனைகளே இம்மைக்கும், மறுமைக்கும் உதவும். எனவே தான், இளம்பெண்களும் இறைஉணர்வு பெற வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன், எங்கும் எல்லாமாய் நிறைந்து இலங்கும் சிவபெருமானின் திருவிளையாடல்களைச் சொல்ல வந்த மணிவாசகர், பெண்கள் விரும்பும் விளையாட்டுகளின் வாயிலாக அவற்றை உலகுக்கு உணர்த்துகின்றார்.

திருவாசகத்தில், பாவையாடல், அம்மானை ஆடல், சுண்ணம் இடித்தல், தும்பி பிடித்தல், தெள்ளேணம் கொட்டுதல், சாழல், பூப்பறித்தல், உந்திப்பறத்தல், தோள் நோக்கம், ஊசல் போன்ற பத்து வகையான மகளிர் விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன. இவ் விளையாட்டுகள் சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாம் சிவபெருமானைப் போற்றிப் பாட்டுப் பாடிக் கொண்டே விளையாடுவதாக அமைகின்றன.

## பாவையாடல்

பாவை என்பதற்கு உருவம் என்பது பொருள். மழலைப் பருவத்தில் மரத்தினால் ஆன பாவையை வைத்து விளையாடிய பெண்கள் காலம் செல்லச் செல்ல பாவை புனைந்து விளையாடியுள்ளனர். இயற்கையில் கிடைத்த குரவமலர் கொண்டு பாவை செய்து விளையாடியதைக் "குரவம்பாவை" என்ற தொடர் தெரிவிக்கிறது. பின்னர் மணல், முத்து, பவழம், மலர், சிப்பி, பொன் முதலியன பாவை செய்வதற்குப் பயன் பட்டுள்ளன. நாள் முழுவதும் நேரம் போவது தெரியாமல் மிக மகிழ்ச்சி யாகக் குழந்தைகளால் விளையாடப்பட்ட இதனை ஓர் அறிவு வயப்பட்ட விளையாட்டு எனச் சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

பாவை புனைந்து விளையாடிய சிறுமியர் கன்னிப் பருவம் எய்தியதும், பாவைநோன்பு நோற்கத் தொடங்கினர். அவர்கள், நீர்த் துறைகளின் மணற்பரப்பில் மண்ணைக் குவித்தோ அல்லது இல்லத்தில் இருந்து கொண்டுவந்த தேங்காயைக் கும்பத்தில் வைத்தோ அதைப் பாவையாகப் பாவித்து, தங்களுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் எனவும், நாடு முழுவதும் மழை பெய்து செழிக்க வேண்டும் எனவும் நோன்பு நோற்றனர். இதனைத் "தைந்நீராடல்" என்றும், "அம்பா ஆடல்" என்றும் சங்க இலக்கியங்கள் கூறும். மாணிக்கவாசகரின் திருவெம்பாவை இந்நோன்பை "மார்கழி நீராடல்" என்று குறிப்பிடும்.

மார்கழி மாதத்தின் அதிகாலைப்பொழுதில் துயில்எழுந்த இளம்பெண்கள், ஒன்று கூடி, வீதியில் செல்லும்போது இறைவன் புகழைப் பாடிக் கொண்டே சென்று, நோன்பு நோற்க வருமாறு, தங்கள் தோழியரை எழுப்புவர். அதன்பின்னர் இறைவனைப் பாடும் வகை கூறி, இருஞ்சுனை நீராடி, இறைவனை வேண்டித் தங்கள் நோன்பை நிறைவு செய்வர். திருவெம்பாவையின் முதல் எட்டுப் பாடல்களில் பொழுது புலரும் காட்சியும், பள்ளிகொள்ளும் பாவையரின் இயல்பும், அவர்தம் பதிலும் இயல்பாக விளக்கப்பட்டுள்ளன. இப்பகுதியே இதனை ஒரு

Scanned by TapScanner

விளையாட்டுப் பாடலாகக் கருத இடம் தருகிறது. "ஏலோர் எம்பாவாய் என ஒவ்வொரு பாடலும் சந்த லயத்தோடு முடிவது பொருட்சிறப்பு மிக்கதாகத் திகழ்கிறது. 'ஏல்' என்பதற்கு 'எழுதல்' என்று பொருள். 'ஓர்' என்பது 'உணர்', 'நினை' என்ற பொருள்களைத் தரும். ஆக, "ஏலோர்" என்ற சொல்லுக்கு 'எழுந்துணர்' என்று பொருள் கொள்ளலாம். நல்ல பண்புள்ள ஆடவரைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடனும், மழை பெய்து நாடு வளத்துடன் திகழவேண்டும் என்ற மனப்பாங்குடனும் பாவையர் பாடி நீராடுவதாக அமையும் இப்பாடல்கள் இன்றும் மகளிரால் மார்கழி மாதத்தில் பாடப்படுகின்றன.

"மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்"
"ஒண்ணித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ"
"நீயே வந்து எண்ணிக் குறையில் துயில்"
"என்னே துயிலின் பரிசு"
"வாழிஈது என்ன உறக்கமோ வாய்திறவாய்"

எனத் தோழியர் ஒருவரை ஒருவர் விளையாட்டாக எள்ளி நகையாடித் துயில் எழுப்புகின்றனர். இங்குப் 'பாவை' என்பது பாவையரைக் குறித்து நின்ற சொல்லாகவே உள்ளது.

## அம்மானை

இளமகளிர் உருண்டையாக உள்ள பந்து வடிவமான காய்களை 3 அல்லது 5 என்ற அளவில் கையில் எடுத்துக் கொண்டு அவற்றை மேலே தூக்கிப் போட்டு தரையில் வீழாமல் பிடித்து ஆடும் ஆட்டம் "அம்மானை" எனப்படும்.

ஒரு பெண் வெண்கலம் அல்லது வெள்ளியால், உள்ளீடில்லாமல் செய்யப்பட்ட மூன்று பந்துகளுள் பரல்களை இட்டுச் செய்யப்பட்ட அம்மானைக் காய்களைக் கைகளில் ஏந்தி, அமர்ந்து கொண்டு பாடிய வண்ணம் அவற்றுள் ஒன்றை மேலே வீசி, அது கீழே வரும் பொழுது தன் கைகளிலுள்ள காய்களில் ஒன்றை மேலே செலுத்திவிட்டு, முதலில் செலுத்திய காயைத் தன் கையில் ஏற்பாள். இவ்வாறு மூன்று காய்களையும் ஒவ்வொன்றாக மேலே தூக்கிப் போட்டு அவை கீழே விழாமல் பிடிக்கும் இவ்விளையாட்டு ஒரு தாளகதிக்கு உட்பட்டே நடைபெறுதல் வேண்டும். இல்லையென்றால் காய்கள் கீழே விழுந்துவிடும். இந்தத் தாளகதியை நிறைவு செய்ய, அதற்கு ஏற்ற சந்தத்தில் பாடல்கள் பாடப்பெற்றன. அம்மானைப் பாட்டின் அடிப்படை இதுவே ஆகும். பெண்கள் இவ்விளையாட்டினைத் தங்களது இல்லங்களின் பின்புறத்திலும், மரநிழலிலும், மேன்மாடங்களிலும் அமர்ந்து விளையாடுவர். மணிவாசகர் காலத்து இளம்பெண்கள், விளையாடும்போது,

Scanned by TapScanner

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி"

என்று இறைவனது சேவடிப் பெருமையைக் கூறி,

"எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்!"

என்று அவன் இயல்புகளைப் போற்றிப் பாடுவதாக அம்மானைப் பாடல்கள் அமைந்துள்ளன.

சங்க காலத்தில் "கழங்கு ஆடுதல்" என்ற பெயருடன் ஆடப்பட்ட இவ்விளையாட்டு, சிலப்பதிகாரக் காலத்தில் "அம்மானை ஆட்டம்" என்று வழங்கலாயிற்று.

காலம் செல்லச் செல்ல பெண்கள் இயற்கையில் கிடைத்த காய்களைக் கொண்டு விளையாடி மகிழ்ந்தனர். காலத்திற்கேற்ப காய்களின் எண்ணிக்கையும் கூடியது. இன்றும் தமிழகத்துக் கிராமப்புறங்களில் பல பெண்கள் கூடி அமர்ந்து பாட்டுப்பாடிக் கொண்டும் பந்தயம் கூறியும் கற்களைக் கொண்டு இவ்விளையாட்டை விளையாடுகின்றனர். விளையாடும் காய்களைக் "கழற்சிக் காய்கள்" என்பர்.

1. ஓரி உலகெல்லாம்
உலகெல்லாம் சூரியன்
சூரியன் தங்கச்சி
சுந்தரவல்லிக்கு
மாயக்கழச்சிக்கு
நாளைக்குக் கல்யாணம்.

2. ஈரி ரெண்டு
எருக்கலந் தண்டு
மாதா ரெண்டு
மல்லிகைப்பூச் செண்டு.

எனக் காலத்திற்கேற்ப பாடல்களும், பாடற்பொருளும் கூட உருமாற்றம் பெற்றன.

**சுண்ணம் இடித்தல்**

சுண்ணம் என்பது இறைவனை நீராட்டுவதற்குப் பயன்படுத்தும் ஒருவகை வாசனைப் பொடி. பல்வேறு வகைப்பட்ட மணப்பொருட்களை

Scanned by TapScanner

ஒன்றுசேர்த்து இடித்து உருவாக்குவதே இச்சுண்ணப் பொடியாகும். இதனைத் தயாரிக்கும் பொறுப்பினைப் பெண்கள் ஏற்றிருந்தனர். அவர்கள் சுண்ணத் தயாரிப்பில் தங்கள் முழுத்திறமையையும் காட்டிப் போட்டியிடுவர்.

முற்காலத்தில், தானியங்களையோ அல்லது இடித்துப் பயன் படுத்தக்கூடிய பொருட்களையோ உரலில் இட்டுப் பாட்டுப் பாடிக் கொண்டே உலக்கையால் குற்றி மகிழும் விளையாட்டு ஒன்று தமிழ்ப் பெண்களால் விளையாடப்பட்டுள்ளது. இதனைத் தமிழ்இலக்கியங்கள் உலக்கைப் பாட்டு, உரல்பாட்டு, வள்ளைப் பாட்டு ஆகிய பெயர்களால் சுட்டுகின்றன. "வண்ணமேந்தினர் சுண்ணம் ஏந்தினர்" எனச் சிலப்பதிகாரமும், "சுந்தரச் சுண்ணமும் தூநீராடலும்" என மணிமேகலையும் குறிப்பிடுகின்றன. குணமாலை, சுரமஞ்சரி இருவரும் தத்தம் வாசனைப் பொடியே சிறந்தது எனக் கூறி, மனவேறுபாடு கொள்ள, எது சிறந்தது என்பதை நடுவுநிலைமையோடு கூறும் பொறுப்பைச் சீவகனிடமே விட்டுவிட்டனர் என்பதைச் சீவகசிந்தாமணி வாயிலாக அறிய முடிகிறது. இங்ஙனம் வள்ளைப் பாட்டாக இருந்த ஒன்றைச் சுண்ணமிடித்தலோடு தொடர்புபடுத்தி மாணிக்கவாசகர் "திருப் பொற்சுண்ணம்" எனும் பகுதியில் அமைத்துள்ளார்.

இறைவனுக்குத் திருமுழுக்காட்டப் பயன்படுத்தப்படும் பல்வேறு வாசனைப் பொருட்களை ஒருசேர உலக்கையில் இட்டு இடித்தல் என்பது ஒருவரால் இயலாத செயலாகும். எனவே இருவரோ அல்லது நால்வரோ எதிர்எதிராக நின்று இடித்திருத்தல் கூடும். அங்ஙனம் இடிக்கும்போது ஒரு குறிப்பிட்ட தாளகதியை அடிப்படையாகக் கொண்டு இடிக்க வேண்டுமென இசைப் பாடல்கள் பாடுவது வழக்கம். திருவாசகத்திலுள்ள "திருப்பொற்சுண்ண"ப் பாடல்கள் இந்தத் தாளகதிக்கு ஏற்ப அமைக்கப்பெற்ற ஓசைநயமுடைய பாடல்களாகும். இறைவனுக்காகத் தயாரிப்பதால் இல்லத்தையும், உரல், உலக்கை ஆகியவற்றையும் தூய்மைப்படுத்தி, எண்வகைத் தெய்வ மகளிரின் துணையோடு,

"பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்"

என அடியவர் அனைவரையும் இச்செயலில் பங்குகொள்ளச் செய்யுமாறு வேண்டுவதாகவும்,

Scanned by TapScanner

"செய்ய திருவடி பாடிப்பாடிச்
    செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே".

என இறைவனின் வடிவஅழகு, வீரச் செயல்கள் ஆகியவற்றை விளக்கும் வகையிலும் இப் பாடல்கள் அமைகின்றன. தமிழகக் கிராமங்களில் பெண்கள் இருவரோ அல்லது நால்வரோ நின்றுகொண்டு உரலில் தானியங்களை இட்டு உலக்கையால் இடிக்கும்போது ஒலியெழுப்பிக் கொண்டோ பாடிக்கொண்டோ இடிக்கும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது.

## தும்பி பிடித்தல்

தும்பி பிடித்தல் என்பது இளஞ்சிறார்கள் ஆடும் குறும்பு விளையாட்டுகளில் ஒன்றாகும். தும்பியினைப் பிடித்து, அதன் சிறகுகளை நூலால் கட்டி, தம் கைகளில் பிடித்துக் கொண்டு சிறுவர்கள் குதூகலிப்பது வழக்கம். அதனை அடிப்படையாகக் கொண்டு திருவாசகத்தில் "திருக் கோத்தும்பி" என்னும் பதிகம் அமைக்கப்பட்டுள்ளது.

'கோத்தும்பி' என்பது வண்டுகளுள் பெரியதாகிய அரசவண்டினைக் குறிக்கும். மலர்களில் இருந்து தேனை உண்டுகளித்த வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டு மேலே பறக்க, இளம்பெண்கள் அவற்றைப் பிடிக்க முயல்கின்றனர். இயலாத நிலையில் தம் உள்ளக் கருத்தைத் தும்பியிடம் உரைத்து, அதனை இறைவனிடம் சென்று கூறுமாறு இறைஞ்சித் தூது விடுகின்றனர்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!"

எனப் பாடல்களினூடே இறைவனின் அருட்திறம், ஆனந்தத்திருநடனம், அடியவர் பெருமை ஆகியவற்றைப் பெண்கள் எடுத்துரைக்கின்றனர். மாணிக்கவாசகர், குருந்த மரத்தின் அடியிலிருந்து தமக்கு உபதேசம் செய்தருளிய குருநாதனாகிய இறைவனுடைய செயலைக் கூறி, அவரை விட்டுப் பிரிந்த துன்பத்திற்கு வருந்திக் கோத்தும்பியைத் தூது விடுவதாக இப்பாடல்களை அமைத்துள்ளார்.

## தெள்ளேணம்கொட்டுதல்

மாணிக்கவாசகர் கூறும் புதியதோர் விளையாட்டு தெள்ளேணம் கொட்டுதல். 'ஏணம்' என்பதற்கு 'மான்தோல்' என்று பொருள். 'ஏணம்' என்ற சொல் 'பாத்திரம்' என்ற பொருளில் வழங்கப்படும் வழக்குச் சொல்லாகவும் அமைகிறது. மாணிக்கவாசகரின் திருத்தெள்ளேணப் பாடல்கள் 'தெள்ளேணம் கொட்டாமோ' என முடிவதால் மான்தோலால் ஆன 'படகம்' என்னும் இசைக்கருவியை உணர்த்துகின்றது எனலாம். இன்று நாட்டுப்புற மெட்டில் பாடல்கள் பாடும் போது பயன்படுத்தப்படும் "ஜால்ரா" என்னும் ஒத்திசைவுக் கருவியே தமிழில் "படகம்" என வழங்கப் பட்டிருக்கலாம்.

'தெள்ளுதல்' என்ற சொல் இன்றும் கிராமப்புறங்களில் வழங்கி வருகிறது.அரிசியில் கலந்துள்ள கற்களைப் போக்குவதற்கு அதனை முறத்தில் கொட்டி, இரண்டு கைகளாலும் முறத்தைப் பிடித்துக் கொண்டு இடமும் வலமுமாக அசைத்தலே தெள்ளுதலாகும். ஆக, தோல் கருவிகள் ஆடவரால் மட்டுமே பயன்படுத்தப்பட்ட நிலையில், பெண்களும் தெள்ளேணம் கொட்டியதாக மணிவாசகர் கூறுகிறார். எனவே, இரண்டு கைகளாலும் ஒருபுறம் திறந்துள்ள பாத்திரம் போன்ற தோல் கருவியையோ அல்லது பாத்திரத்தையோ பிடித்துக் கொண்டு இடமும் வலமுமாக அசைத்து, கையால் தட்டி,சிறுபறைகொட்டுதல் போன்ற ஒலியைஎழுப்பி விளையாடுவதையே'தெள்ளேணம்கொட்டுதல்' என மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார் எனலாம். தெள்ளேணப் பாடல்கள் இறைவனின் திருவடிப் பெருமையினையும், அவனது எளிவந்த தன்மையினையும் குறித்துப் பெண்கள் பாடி விளையாடுவதாக அமைந்துள்ளன.

## சாழல்

"சாழல்" என்பது மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று.சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் பல்வரிக் கூத்துகளுள் "சாழல்" என்ற பெயரும் இடம்பெறுகிறது. விளையாட்டாகக் கைகளைக் கொட்டி நகைத்துப் பேசுதலே "சாழல்" என்னும் விளையாட்டு ஆகும். இருவர் பங்கு பெறும் இவ்விளையாட்டில் ஒரு பெண், தன் எதிரேயுள்ள ஒருத்தியிடம் ஒரு கையைத் தூக்கிஆட்டிக் கொண்டு,

> **"கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
> **தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ"**

என்று எதிரே உள்ளவளால் விடை கூற முடியாது என்ற எக்களிப்புடன் 'காணேடீ', 'இயம்பேடீ' என்ற சொற்களைக் கூறித் தன் எள்ளலை வெளிப்படுத்துகிறாள். உடனே எதிரே இருப்பவள் மிக எளிதாக,

Scanned by TapScanner

"தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ"

என்று இறைவனின் தன்மைகளை எடுத்துரைத்து, உன் அறியாமை இருந்தவாறு என்னே, இறைவனை உன் அறியாமையால் மதிப்பிடுதல் அழகோ என்று கூறும்முகமாக, வெற்றி தனக்கே என்று உறுதியாய்த் தெரிவிப்பவள் போல 'சாழலோ' என்ற சொல்லைப் பயன்படுத்து கிறாள். அவ்வாறு 'காணேடீ', 'சாழலோ' என்று கூறும்போது இருவரும் தங்கள் கைகளை உயரத் தூக்கி உள்ளங்கைகள் ஒன்றுடன் ஒன்று படுமாறு தட்டி ஓசை எழுப்பி விளையாடியுள்ளனர்.

'ஸ்யாலன்' என்னும் வடமொழிச் சொல் 'மைத்துனன்' முதலியோரை உணர்த்தும். மைத்துனன் 'ஸ்யாலன்' எனவும், மைத்துனி 'ஸ்யாலி' எனவும் அழைக்கப் பெற்றனர். அதுவே 'சாழலி' என்றாகி, நகைப்பிற்குரிய பேச்சமைந்த உறவுமுறையாய் மகளிர் தமக்குள் அழைத்து வினவி, விளையாடுவதாய் அமைந்தது என்பார் சு.நவநீத கிருஷ்ண பாரதியார்.

**பூவல்லி கொய்தல் (பூப்பறித்தல்)**

பூப்பறித்தல் என்பது மகளிர் விரும்பி ஈடுபடும் செயல்களுள் ஒன்றாகும். செடிகளில் பூத்திருக்கும் பூக்களை எடுப்பது 'பூப்பறித்தல்' ஆகும். தரையில் படர்ந்திருக்கும் கொடிகளில் மலர்ந்துள்ள பூக்களை எடுப்பதைப் 'பூக்கிள்ளுதல்' என்பர். மரம், பந்தல் ஆகியவற்றில் படர்ந்துள்ள கொடிகளில் மலர்ந்துள்ள பூக்களை எடுப்பது 'பூக்கொய்தல்' எனப்படும். இங்ஙனம் உயர்ந்த கொடிகளில் மலர்ந்துள்ள பூக்களைப் பறித்தலாகிய செயலே 'பூவல்லி கொய்தல்'என்னும் விளையாட்டாகத் திருவாசகத்தில் கூறப்பட்டுள்ளது. சிறுமியர் பலர் எதிர் எதிராக நின்றுகொண்டு, தங்கள் உடலை எக்கி, குதிகாலை உயர்த்தியவாறு பூக்கொய்தலே 'பூவல்லி' எனக் குறிப்பிடப்படுகிறது. பல்வரிக் கூத்தினுள் ஒன்றாக அடியார்க்கு நல்லார் கூறும் 'கொய்யு முள்ளிப்பூ' என்பது இப் பூவல்லியாகிய விளையாட்டினையே குறிக்கும். பூக் கொய்யும்போது வேறு சிந்தனையின்றி,

"புரமூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ"

என்று இறைவன் புகழ் கூறுதலே சிறப்பு என்னும் கருத்தைக் கூறுவதாக இப்பாடல்கள் அமைந்து உள்ளன.

**உந்திப் பறத்தல்**

உந்துதல் என்பதற்கு மகிழ்ச்சிக் களிப்பால் எம்பிக் குதித்தல் என்று பொருள். சிறுமியர் கீழே குத்துக்காலிட்டு அமர்ந்தும், திடீரென்று பறவை போல் கைகளை விரித்துக்கொண்டு எழுந்து, ஓடிச்சென்று, மறுபடியும்

Scanned by TapScanner

கைகளை மடக்கிக் கொண்டு அமர்ந்தும் விளையாடும் விளையாட்டே "உந்திப் பறத்தல்" விளையாட்டாகும்.

"உந்தி" என்னும் சொல்லுக்கு "நீர்ச்சுழி" என்பது பொருள். இளம் பெண்கள் இருவர் ஒருத்தியின் பாத முன்பகுதி, மற்றொருத்தியின் பாத முன்பகுதியோடு சேரும்படி அமைத்துக் கொண்டு, ஒருத்தியின் வலது கரத்துடன் மற்றவள் இடது கரத்தையும், அவளது இடது கரத்துடன் தன் வலது கரத்தையும் மாறி அமையும் வண்ணம் விரல்களைக் கோர்த்துப் பற்றியவாறு, கைகளை முழுவதும் நீட்டி உடல்களைப் பின் தள்ளி நின்று சுற்றுவர். இந்த நிலையில் அவர்கள் ஒரு நீர்ச்சுழி போலத் தோற்றம் அளிப்பர். ஆதலால் இவ்விளையாட்டு 'உந்தி' எனப் பெயர் பெற்றது. அவர்கள் தங்கள் பாதங்களின் முன்பகுதிகளும், கால் விரல்களும் மட்டும் நிலத்திற்படிய உள்ளங்கால், குதிகால் முதலியவை தரையைத் தீண்டாமல் சுழன்று விளையாடுவது நீர்ச்சுழி போன்றும், பறப்பது போன்றும் தோற்றம் அளிக்கும். அவ்வாறு விளையாடும்போது சிவபெருமானின் திருவடிப் பெருமை, திரிபுரங்களை அழித்தது, இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்டது போன்ற பல நிகழ்ச்சிகளைப் பாடிக்கொண்டே விளையாடுவர்.

சிறுமியரின் இவ்விளையாட்டு "தட்டாமாலை" என்றும், "கைசுற்றி விளையாடல்" என்றும் பெயர் கூறப்பட்டு, கிராமப்புறங்களில் சில இடங்களில் இன்றும் விளையாடப்பட்டு வருகிறது.

## தோள்நோக்கம்

தோள்நோக்கம் என்பது,பெண்கள் ஒருவர் தோளை மற்றவர் கடைக்கண்ணால் பார்க்க முயன்றாடும் ஆட்டம் என்பார் கா.சு.பிள்ளை. பெண்கள் பலர், வட்ட வடிவில் நின்றுகொண்டு, அனைவரும் ஒரே சமயத்தில் முன்னே குனிந்து கைகளைக் கொட்டி நிமிர்வர். அவ்வாறு நிமிரும் போது ஒவ்வொரு பெண்ணும் தன் தலையை இடப்புறம் திருப்பித் தன்னை அடுத்து நிற்பவள் தோளைப் பார்ப்பாள். பின்னர் சிறிது வலது புறமாக நகர்ந்து மீண்டும் கைகொட்டி நிமிர்ந்து அடுத்தவள் தோளைப் பார்ப்பாள். இவ்வாறு ஆடும்போது மகளிர் அன்பின் உருவான இறைவனது பெருமைகளைப் பாடிஆடுவர். இவ்விளையாட்டைத் தமிழ் இலக்கியங்கள் "நல்லார்தம் தோள்வீச்சு" என்று கூறும்.

இன்றும் கிராமப்புறங்களில், பெண்கள் பலர் வட்டமாக அமர்ந்து கொண்டோ அல்லது நின்று கொண்டோ இவ்விளையாட்டை விளையாடி வருகின்றனர். அமர்ந்திருப்பவர்களுக்குப் பின்னால் ஒரு பெண் "கொல

Scanned by TapScanner

கொலயா முந்திரிக்கா" என்று பாடிக்கொண்டே அவர்களின் தோளைப் பார்த்தபடியே சுற்றிவருவாள். அமர்ந்திருப்பவர்கள், "நரியே நரியே சுத்தி வா" என்று கூறுவார்கள். மீண்டும் அவள், "கொள்ளை யடிச்சவன் எங்கிருக்கான் ?" என்று கேட்க, இவர்களோ "கூட்டத்தில் இருக்கான் கண்டுபிடி" என்று சொல்வார்கள். சுற்றி வருபவள், இடையில் யாராவது ஒரு பெண்ணின் தோளைத் தொட்டோ, தட்டியோ செல்வாள் . உடனே தோள் தட்டப்பட்ட பெண் எழுந்து முன்னவள் போலவே பாடிக் கொண்டு சுற்றுவாள். முன்பு தோளைத் தொட்ட பெண் அவளது இடத்தில் வந்து நிற்பாள். இவ்விளையாட்டு வீட்டின் முன்போ, தோட்டத்திலோ அல்லது தெருக்களிலோ விளையாடப்படும்.

**ஊசல்**

பெரிய மரக்கிளைகளில் நீண்ட கயிற்றைக் கட்டிவிட்டு அதில் அமர்ந்து மகளிர் விளையாடும் ஒருவகை விளையாட்டு "ஊசலாடுதல்" ஆகும். அமர்ந்து விளையாடுவதற்குப் பலகைகளையும், துணை இருக்கைகளையும் அமைத்திருந்தனர். ஊசலில் அமர்ந்திருக்கும் மகளிர், இரு கைகளாலும் கயிறுகளை இறுகப் பிடித்துக் கொண்டு கால்களினால் பூமியை உதைத்து வேகமாக ஆடுவர். இவ்விளையாட்டு ஒருவர் ஆட்டுவிக்க இன்னொருவர் ஆடுவதாகவும், ஒருவர் தானாகவே கால் களைத் தரையில் ஊன்றித் தத்தித் தத்தி ஆடுவதாகவும் அமையும். வீட்டுக்கு வெளியே சோலைகளில் இவ்விளையாட்டு நடைபெற்றது. சில இடங்களில் சிற்றூசல் அமைத்து இல்லத்தினுள்ளும் ஆடினர்.

கயிறு, கொடிகள் அல்லது இரும்புச் சங்கிலியினால் கட்டப்பட்டு மரப்பலகையால் ஊசல் அமைப்பதே பொது இயல்பு. ஆனால் திருவாசகம் காட்டும் மகளிர் ஆடும் ஊசல், அழகிய முத்துகளால் ஆகிய வடங்களைக் கயிறுகளாக்கி, ஆடலுக்குரிய ஊஞ்சல் பலகை பொன்னாலேயே செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மேன்மையான பவளத்தால் கால்கள் அமைக்கப்பட்டதாகும். ஊசலில் அமர்ந்து ஆடும் பெண்கள்,

"சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்தாள் இணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ".

எனத் தம் ஆட்டத்திற்கேற்ற இசை நயத்தோடு இறைவன் பெருமை களைப் பாடி ஆடுவர். "சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக" என்ற

வரியில் 'ரா, ஙங்கா, தங், நாக' என்னும் எழுத்துகளில் அழுத்தம் தந்து பாட்டைப் பாடி, அழுத்தம் வரும் இடங்களில் காலை உந்தி ஆடினால் ஊஞ்சலின் ஆட்டம் ஒரே சீராக அமையும். இந்த நுணுக்கத்தோடு அந்த அதற்கேற்ற தாள கதியோடு அடிகளாரால் பாடப்பட்ட இப்பாடல்கள் உத்தரகோசமங்கை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் அருள்திறத்தைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

இங்ஙனம் மாணிக்கவாசகர், பெண்களுக்கு இறையுணர்வை ஊட்டவும், நமது பண்பாடுகளில் ஒன்றான இறைவழிபாட்டைப் பெண்களும் மேற்கொள்ளவேண்டும் என்னும் நோக்கத்துடனும், அவர்கள் விளையாடும் விளையாட்டுகளையே உத்தியாய்க் கையாண்டுள்ளார். இங்ஙனம் குழுவாகக் கூடி, ஆடிப்பாடி விளையாடும் விளையாட்டுகள் பெண்களுக்கு உடல்உரம், உள்ளக் கிளர்ச்சி, மதி வன்மை, கூட்டுறவுத் திறம், மறப் பண்பு ஆகியவற்றை நல்குகின்றன.

# 4

# அறநூல்கள் செப்பும் சூழலியல் சிந்தனைகள்

- முனைவர் (கேப்டன்) மா.குமார்

முன்னுரை:

ஆதிகாலமனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தான். இயற்கையாதாரங்களின் 'உயிர்ச்சூழல்' பாதிப்படையாவண்ணம், இயற்கை தரும் பொருட்களைத் தனது வாழ்வாதாரங்களாகக் கொண்டு முன்னேறினான். பின்னர் இயற்கையை உற்றுநோக்கியதன் மூலம் காலநிலை, வெப்பம், மழை, நீராதாரம், தாவரங்கள், விலங்குகள், பறவைகள் இவற்றின் வாயிலாக அறிவுப்புரட்சியை ஏற்படுத்திக் கொண்டான். அவனது அறிவுசார்ந்த உழைப்பும், உற்பத்தியும் வேளாண்மைச் சமூகமாக மாறியது. பின்னர் சமமற்ற நிலவுடைமைச் சமூகத்தில் (Feudalism Society) நிலவிய பெரும் ஏற்றத்தாழ்வுகளினால் பண்ணை-கூலிச் சமுதாயம் ஏற்படலாயின. விவசாய உற்பத்தியின் மூலம் கிடைத்த உபரிப்பொருட்களைத் தம்மைப் போன்ற பிற இனக்குழுக்களிடையே இவன் செய்துவந்த உணவு, உடை, உறையுள் சார்ந்த பரிமாற்றம் "பண்டைமாற்றம்" (Barter System) என்ற முறையில் பரவலாக்கம் ஏற்பட்டது. பின்னர், அதுவே, பெருவணிகமாக அசுரத்தன்மை பெற்றது. இங்ஙனம் தோன்றிய மனிதச் சமூகவாழ்க்கை இனம், மதம், சாதி சார்ந்த நிறுவனங்களாக மாறிப், படிப்படியாக நகர்ந்து விரிந்து நகரவாழ்க்கையாக மாறியது. நகர வாழ்க்கையில் இலாபநோக்கம் என்ற "பேராசை" மனிதனை வெறிகொள்ளச்செய்தது. இதனால், மனிதர்களிடையே சுயநலம் ஏற்பட்டுப் பிற சமூகங்களோடு போரிட்டான். இப்போர் இனம், ஊர், நகர், நாடு என விரிவடைந்து, பல உலகப்போர்களை ஏற்படுத்தின. இவ்வகையான பேராசையும், சுயநலமும், பலவகைப்போர்களை ஏற்படுத்தின. இப்போர் மானுடத்தைச் (Humanism)

Scanned by TapScanner

சிதைத்ததோடு மட்டுமின்றி உயிர்நலவாழ்க்கைக்கு ஆதாரமான சுற்றுச்சூழலையும் அழித்து வருகின்றன. ஆகவே, உயிரினங்கள் வாழ்வதற்கு வேண்டிய சுற்றுச்சூழலே இன்று நஞ்சாகி உயிரினங்களின் அழிவிற்குக் காரணமாகின்றன.

**அறநூல்கள்:** சங்கம் மருவிய கால இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். இவையாவும் கி.பி.250 முதல் கி.பி 585 வரையுள்ள காலகட்டத்தில் பல புலவர்களால் இயற்றப்பட்டவையாகும். பதினெட்டு நூல்களில் பதினோரு அற நூல்கள் உள்ளன. இந்நூல்கள் யாவும்

1. தனி மனித ஒழுக்கம் (Individual Ethics)
2. சமூக ஒழுக்கம் (Social Ethics)
3. செயல்முறை ஒழுக்கம் (Functional Ethics)

என்ற மூன்றினை எடுத்தியம்புவதை முழுநோக்கமாகக் கொண்டுள்ளன. அறநூல்களில் சிறுபஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி, ஆசாரக்கோவை ஆகிய நூல்களில் சூழ்நிலைச் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. அச்சிந்தனைகளை வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சூழலியல்-சொற்பொருளாய்வு:-** ஜெர்மானிய உயிரியலாளர் இராய்ட்டர் (1868) என்பார் உயிர்ச்சூழலியலைக் குறிக்க 'ஆய்கோலாஜி' (Oikology) என்ற கிரேக்கச்சொல்லைப் பயன்படுத்தினார். அச்சொல்லிலிருந்து தோன்றியதே 'எக்காலஜி' (Ecology) என்ற சொல்லாகும். இச்சொல்லின் பொருள் உயிரினங்களுக்கும் அவைசார்ந்த சூழ்நிலைகளுக்கும் இடையிலான நேர்மறையான, எதிர்மறையான உறவுகளை விளக்கும் அறிவியலாகும். Oikology என்ற சொல்லில் உள்ள 'oiko' (ஆய்க்கோ) வாழுமிடம் என்றும் 'logy' அதைப்பற்றி அறிதல் என்றும் பொருள்படும். இவ்விரு சொற்களின் சேர்க்கையின்படி உயிரினங்கள் வாழுமிடம் குறித்து அறியும் அறிவியலைச் 'சூழலியல்' எனலாம். ஆகவே. சூழலியல் (Ecology) என்றால் நாம் வாழுமிடத்தினை நன்கறிந்து இயற்கைக் காரணிகளோடு இணங்கி வாழுதலைக் குறிக்கும்.

**சூழலியல் பாதுகாப்புச்சிந்தனை:** 1954 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் சாலையோர 'எல்ம்' மரங்களின் மீதுள்ள வண்டுகளை அழிக்கப் பூச்சிக்கொல்லி (DDT) மருந்தினைத் தெளித்தனர். அதனால் வண்டுகளும் புழுக்களும் அதைச்சார்ந்த உயிரினங்களும், அவ்வுயிரினங்களின் உணவுச்சூழலும் அழிந்தன. அவ் அழிவில் பெரிதும்

Scanned by TapScanner

பாதிக்கப்பட்டவை இராபின் பறவைகளாகும். அமெரிக்காவின் வசந்தகாலத்தை முன்னறிவிக்கும் இராபின் பறவைகள் அழிவதால் அமெரிக்காவின் வசந்தகாலம் மௌனமாகிவிட்டதாக அமெரிக்கக் கடல் ஆராய்ச்சியாளர் இராக்கேல் கார்சன் மிகவும் வருந்தினார். அவரது வருத்தத்தின் விளைவே 'மௌனவசந்தம்' (Silent spring) என்ற நூல். இந் நூலின் சிந்தனைகளே, சூழலியல் பாதுகாப்புக் குறித்து உலகத்திற்குக் கட்டியம் கூறின. அதன்பின்னரே உலகநாடுகள் விழிப்புணர்வு பெற்று, சுற்றுச்சூழலில் பாதுகாப்புச் செயல்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றன. (பசுமைக் குமார், தமிழக சுற்றுச்சூழல், பக்: *10-13*)

**இலக்கியமும் சுற்றுச்சூழலும்:** மனிதன் தன் வாழ்க்கைத் தேவைக்காக இயற்கையைச் சார்ந்து வாழ்கிறான். இயற்கை மக்களுக்கு உணவளித்து உதவியதோடு மட்டுமன்றி மருந்தாகவும் பயன்படுகிறது. மருத்துவப்பொருட்களை எடுக்கும்போது செடிகளுக்கு ஊறுநேரா வண்ணம் எடுத்தல் வேண்டுமென்ற 'சூழலியல் சிந்தனை' கொண்டவர்கள் நம் முன்னோர்கள் என்பதை 'மரம் சா மருந்தும் கொள்ளார்' (நற்.*26:1*) என்ற பாடல்வரி புலப்படுத்துகின்றது. இன்றைய அதீத நுகர்வுக் கலாச்சாரத்தில் தள்ளப்பட்ட நாம் 'இயற்கை' எனும் கற்பகப்பசுவின் 'மடியை' அறுத்துண்டு வாழ்கிறோம்? கேட்டதையெல்லாம் தரும் வரமான தாவரத்தின் வகைகளை அழித்துச் சூழலைக் கெடுக்கிறோம்.

சுற்றுச்சூழலைப் பேணவேண்டும் என்ற உணர்வும், அறிவும் இன்று உலகளவில் பெரிதும் பேசப்படுகின்றன. அறிவியல்முன்னேற்றம், தொழில் புரட்சி, மக்கள்தொகைப் பெருக்கம், மக்களின் நுகர்வுத்தன்மைகளில் ஏற்பட்டுள்ள அதீத மாற்றங்கள் பஞ்சபூதங்களின் தூய்மைக்குச் சவாலாக உள்ளன.

சங்கஇலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை சூழலியல் சிந்தனைகள் ஊடும்பாவுமாக இடம்பெற்றுள்ளன. சங்ககாலமக்களின் இயற்கை வழிபாடு, இயற்கையைப்பேணல், இயற்கையைப்பெருக்கல் என்பன முக்கிய அறங்களாகக் கருதப்பட்டுள்ளன. இயற்கைச்சூழலை வருணிப்பது (Portrayal) தமிழ் இலக்கியங்களின் அடிப்படைப் பண்பாக விளங்குகின்றன. இக்கூறுகள் யாவும் தமிழ்ப்புலவர்களின் சூழலியல் சிந்தனைகளையும், அதைப் பேணுவதற்குரிய காரண காரியங்களையும் எடுத்துரைக்கின்றன.

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் சூழ்நிலைச் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. பழந்தமிழர்கள்

Scanned by TapScanner

தம்மைச்சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்களை உற்று நோக்கி அதற்கேற்ப வாழும் சூழ்நிலை அறிவினைப் பெற்றிருந்தனர்.

'நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்...' (தொல். மரபியல்.91:1-2 )

என்ற நூற்பாவில் இப்பிரபஞ்சம் (Universe) ஐம்பெரும் பூதங்களினால் ஆனது என்றும் இவை ஒன்றுக்குள் ஒன்று சார்ந்து இயங்குவதில் தான் 'உயிரின வாழ்வு' சாத்தியமாகின்றது என்று கூறுவதின் மூலம் அவர்களது சூழ்நிலையியல் கண்ணோட்டத்தினை அறிய முடிகின்றது.

**பழந்தமிழர் மருத்துவம்:** பழந்தமிழர் இயற்கை சார்ந்த மருத்துவ முறைகளில் ஒன்று சித்த மருத்துவம் ஆகும். இம்மருத்துவம் இன்று உலக நாடுகளில் பெரிதும் போற்றப்படுகின்றன. சித்தமருத்துவத்தில் தாவரங்களின் இலை, பூ, காய், வேர், பட்டை போன்றவற்றின் இயற்பண்பு களையும் வேதிப்பண்புகளையும் நன்கு ஆராய்ந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இம்மருந்துகள் பல வகையான நோய்களை நிரந்தரமாகக் குணப்படுத்துகின்றன. உடலை நொய்ந்து போகும்படிச் செய்யும் நோய்களை வராமல் தடுப்பது மருந்தாகும். உடல் செயலியக்கத்திற்கு (Physiology) தேவையானவை வாதம், பித்தம், சிலேட்டுமம் (கபம்) என்னும் முப்பொருள்களாகும். இம்மூன்றும் கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்பது மருத்துவ நூலார் முடிபு. இதனையே வள்ளுவரும்

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (குறள்: 941)

எனக் குறிப்பிட்டுள்ளார். வாதம், பித்தம், கபம் எனும் முப்பொருட்களின் கெடு மாற்றங்களினால் ஏற்படும் நோய்களை மறுத்து உடலுக்கு வலுவினைத் தருவது மருந்தாகும். இதனைத் திருமூலர்

"மறுப்பது உடல் நோய் மருந்து எனல் ஆகும்
மறுப்பது உளநோய் மருந்து எனல் சாலும்
மறுப்பது இனிநோய் வாராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனல் ஆமே"

என்கிறார்.

உடம்பினை அழியாது உயிரை உடலில் வைத்து இயங்கச் செய்யும் மருத்துவ முறையை வைத்தியம் என்பர். அவ்வைத்தியங்களில் சித்தர்கள் கண்டுணர்ந்த சித்த மருந்துகள் பலவுள. சிறுபஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி

Scanned by TapScanner

போன்றவை சித்த மருந்துகள் பற்றிப் பேசுகின்றன. இந்நூலின் ஆசிரியர்கள் உடல் நோய்களையும், உள்ள நோய்களையும், சமூக நோய்களையும் வகை தொகை செய்து அதன் காரணகாரியங்களை எடுத்துரைப்பதில் **'சூழ்நிலைச்சிந்தனைகள்'** அடிநாதமாகத் தென்படுவதை அறிய முடிகின்றன.

**ஒழுக்கக்குறைபாடும் சூழலியல்கேடும்:** உடல் நோயினை மருந்துப்பொருட்கள் குணப்படுத்துவதை நாம் அறிவோம். அதுபோல உள்ள நோய்களையும் சமூக நோய்களையும் அறக்கருத்துக்கள் குணப்படுத்துகின்றன. பெரும்பாலும் உள்ளம், சமூகம் சார்ந்த நோய்கள் ஒழுக்கக்குறைபாடுகளால் ஏற்படுவ்னவாகும். ஓர் உயிரி வாழும் உயிர்ச்சூழலிலுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் தான் அவ்வுயிரியின் நல வாழ்வைத் தீர்மானிக்கின்றன. இதனையே எர்னஸ்ட் ஹெக்கல்(1969) **"ஓர் உயிரிக்கும் அதனைச் சூழ்ந்துள்ள உயிருள்ள (Biotic), உயிரற்ற(Non- Biotic) காரணிகளுக்கும் இடையிலான நேர்மறையான மற்றும் எதிர்மறையிலான உறவுகளை விளக்கும் அறிவியலைச் 'சூழலியல்' என்று விளக்குகிறார்".** ஒருமனிதனின் ஒழுக்கக்குறைபாடுகளே உயிரற்றக்காரணிகளாகும். (Non-Biotic Factor). இவ்வுயிரற்றக்காரணிகள் உளநோயினையும் சமூகம் சார்ந்த நோய்களையும் ஏற்படுத்துகின்றன. இக்கருத்தின் அடிப்படையில் தான் ஒரு உயிரியின் குறிப்பாக மனிதனின் ஒழுக்கக்குறைபாடுகள் அவ்வுயிரியின் வாழ்வியலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளுவதில் தான் சூழலியல் சிந்தனைகள் புலப்படுகின்றன.

**சிறுபஞ்சமூலத்தில் சூழலியல்:** 'சிறுபஞ்சமூலம்' நூலின் ஆசிரியர் காரியாசான் ஆவார். இந்நூல் 102 வெண்பாக்களையுடையது. சிறுவழுதுணை, சிறுநெருஞ்சி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி போன்றவற்றின் (வேர்கள்); மூலம் 'சிறுபஞ்சமூலம்' எனப்படும். இவ்வேர்கள் உடல் சார்ந்த நோய்களைக் குணப்படுத்துவதைப் போல் சிறுபஞ்சமூலத்தில் ஐந்துவகையான ஒழுக்க நெறிகள் இடம் பெற்றுள்ளன. இந்நெறிகளை மனிதன் குற்றமின்றிப் பின்பற்றும்போது உள்ளம் சார்ந்த 'நோய்கள்' ஏற்படாது என்கிறார். மனிதர்களுக்கு நோய்கள் ஏற்பட 1.கொலை 2.களவு 3.காமம் 4.பொய் 5. புலால் ஆகிய ஐந்து ஒழுக்கக்குறைபாடுகள் முழுமுதற்காரணங்களாகும் என்பதை காரியாசான்

"ஒத்த ஒழுக்கம் கொலை பொய் புலால் களவொடு
ஒத்த இவை அல ஒரு நாலிட்டு - ஒத்த
உறுபஞ்சமூலம் தீர்மாரி போல் கூறீர்
சிறுபஞ்சமூலம் சிறந்து (சிறுபஞ்சமூலம் :2 )

என்ற பாடலில், உலகில், பஞ்சத்தில் (Famine) ஏற்படும் விளைச்சல் இன்மையை மழை நீக்கும். அது போல் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்பட்ட நோய்களை சிறுபஞ்சமூலத்தில் இடம் பெற்றுள்ள அறக்கருத்துக்கள் நீக்கும் என்கிறார்.

**கருவைப் பாதுகாத்தல்:**

சுற்றுச்சூழல் கேட்டிற்கு உயிரினக்கழிவுகளையும் இறந்த உடல் சார்ந்த கழிவுகளையும் கண்ட இடத்தில் கொட்டுதல் ஒரு காரணமாகும். இன்றைய காலகட்டத்தில் தறிகெட்ட வாழ்க்கை நுகர்வுகளினால் உருவான கருவினைக் கழித்தலும் 'கரு' வளர்ந்து குழந்தையானால் அக்குழந்தை யினைக் கொன்றோ அல்லது அனாதையாகவோ சுற்றுப்புறங்களில் (முட்புதர், சாய்க்கடை, ஆறு, குளம்) விட்டெறியும் கொடும் பாதகச் செயல்களும் அன்றாடம் நிகழ்கின்றன. இதனால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இங்ஙனம் சிசுக்கொலை (Infanticide) புரிவது பெரும் பாவச்செயல் என்ற அறைகூவல் சூழலியல் சிந்தனையோடு பொருந்துகின்றன.

**"கலங்காமைக் காத்தல் கருப்பம் சிதைந்தால்**
**இலங்காமை பேரறத்தால் ஈற்றம் விலங்காமைக்**
**கோடல் குழவி மருந்து வெருட்டாமை**
**நாடின் அறம் பெருமை நாட்டு" (மேலது: 72)**

இப்பாடலில் *1.* கரு கலையாமல் - காத்தல் *2.* கர்ப்பம் சிதைந்தால் - தாயைப்பேணல் *3.* குழந்தைப்பேறு துன்பமிலாமல் நிகழ்தல், *4.* குழந்தைக்கு உணவும், மருந்தும் கொடுத்துப்பேணல், *5.* குழந்தையை அச்சுறுத்தாமல் வளர்த்தல் ஆகிய ஐந்தும் குழந்தைப்பேறு காலத்திற்குரிய தாய்சேய் நலச்சூழலியல் (Mother and Child care Environment) சிந்தனை களை முன்வைக்கின்றன. மேலும்

**"ஈன்று எடுத்தல் சூல்புரஞ் செய்தல் குழவியை**
**ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை - ஆன்ற**
**அழிந்தாளை இல்வைத்தல் பேரறமா ஆற்ற**
**மொழிந்தார் முதுநூலார் முன்பு" (மேலது: 70)** என்ற பாடலில்,

*1.* தானீன்ற குழந்தையைத் தானே பாதுகாத்து வளர்த்தல், *2.* தான் கொண்ட கர்ப்பத்தைப் பாதுகாத்தல், *3.* அனாதைக் குழந்தைகளைக் கண்டெடுத்து வளர்த்தல் *4.* திருமணமாகாமல் ஏமாந்து சூலுற்றக் கன்னியைப் பாதுகாத்தல், *5.* கணவனால் கைவிடப்பட்ட பெண்களைப்

Scanned by TapScanner

பாதுகாத்தல் என்ற ஐந்து அறங்களையும் உற்று நோக்குமிடத்து பச்சிளம்குழந்தை (Neo-Child Environment) வளர்ப்புச் சூழலியலைப் புலப்படுத்துகின்றன.

## நோயின்றி வாழ்தல்

சூழலியல் ஆய்வாளர்கள் சுற்றுப்புறம் தூய்மைக்கேடாக இருந்தால் பலவிதமான நோய்கள் ஏற்படும் என்பர். ஆனால், சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தாலும் மனிதர்களுக்குச் சில நோய்கள் வரத்தான் செய்கின்றன. அதன் காரணம் யாது? என ஆராய்ந்த காரியாசான் தக்க பொருத்தமான காரணம் இதுவெனக் கண்டு கூறுகிறார். நோய்களை முன்னரே கண்டுணர்ந்து தீர்த்தால் இந்நாளில் ஒரு நோயும் இன்றி வாழலாம் என்று ஆரம்ப சுகாதாரச் சூழலைக் (Primary Health Environment) கீழ்வரும் பாடலில் பேசுகின்றார்.

**"சிக்கர் சிதடர் சிதலை போல் வாயுடையார்**
**துக்கர் துருநாமர் தூக்குங்கால் - தொக்க**
**வருநோய்கள் முன்னாளில் தீர்த்தாரே இந்நாள்**
**ஒருநோயும் இன்றி வாழ்வார்" (மேலது.74)** இப்பாடலில்,

1. சிக்கர் - தலைநோயுடையோர் (Head Diseases)
2. சிதடர் - பித்துடையார் (Lunatic)
3. சிதலை போல வாயுடையோர் - புண் (Throttle ulcer)
4. துருநாமர் - மூலநோயுடையார் (Piles) மற்றும்
5. தொற்று நோய்கள் - (Communicable Diseases)

ஆகிய நோய்களினால் அலறித் துடிப்பாரைக் காண்கிறோம். இரக்கமுள்ளவர்கள், பொருள்வசதி படைத்தவர்கள் இந் நோய்வாய்ப் பட்டவர்களைத் தேடி, அவர்களுக்கு வேண்டிய நல்ல அமைதிச்சூழலை வகுத்திட வேண்டும்; இனியன பேசி, நன்மருந்து கொடுத்து நோய் பரவாமல் காத்தருள வேண்டும் என்று கூறுவதின் மூலம் நோயாளிகளை மனரீதியாக அணுகும் மருத்துவச்சூழலியல் (Treatment Environment) சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார்.

இயலாதோர்க்கு ஈதல்:

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார் ஔவைப் பெருமாட்டி. முழுமையான மனிதப்பிறப்பு என்பது மிகவும் அரிதானது. ஆதரவற்றோர், முதுமக்கள், வலிமை குன்றியவர்கள், கண் பார்வையற்றவர்கள், முடமானவர்கள் போன்றோர்களுக்கு மனமுவந்து அன்புடன் செய்யும் உணவு, உடை சார்ந்த உதவிகளும் பஞ்ச காலத்தில் பகிர்ந்தளித்து உண்ணும் பண்பினையும் காரியாசான் விளக்கமாக எடுத்துரைக்கின்றார்.

"புண்பட்டார் போற்றுவார் இல்லாதார் போகுயிரார்
கண்கெட்டார் கால் இரண்டும் இல்லாதார் கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்கு ஈந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து" (மேலது: 76)

என்னும் பாடலில் போரில் புண்பட்டோர், ஆதரவற்றோர், பார்வை இல்லார், கால்இல்லார் ஆகியோர்க்கு மனம் நெகிழ்ந்து பலஉதவிகள் செய்க எனக் கட்டளையிடுகிறார். இதன்மூலம் இயலாதவர்க்கு உதவிகள் செய்யும் சூழலைப் புலப்படுத்துகின்றார். இவையாவும் தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கு (Physically Mentally Challenged People) உதவிடும் சூழலையும், இயற்கைப்பேரழிவின் போது ஏற்படும் பஞ்சத்தால் (Famine) பாதிப்புற்ற மக்களுக்குச் செய்யும் உபகாரங்களையும் நினைவூட்டுகிறது. இதன் மூலம் இவரது மனித நேயச்சூழல் புலப்படுகின்றது.

பேரின்பம் பெற வழி:-

'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. உயிரின் உடல் செயலியக்கத்திற்குத் தண்ணீர் மிகமிக அவசியமானதாகும். நீர்வேட்கையின் போது நீரருந்தாமல் இருந்தால் உயிருக்கு ஊறு விளைவிக்கும். உயிர்காக்கும் தருமங்களில் 'நீராகாரம்' வழங்குவது உயர்ந்த தருமம் என்பதை அனைவரும் அறிவர். இத்தருமத்தை விளக்கும்போது காரியாசான் சூழலியல் சிந்தனைகளை நினைவுபடுத்துகின்றார்.

"நீர் அறம் நன்று நிழல் நன்று தன்இல்லுள்
பார் அறம் நன்று பார்த்து உண்பானேல், பேர் அறம்
நன்று தளி சாலை நாட்டல் பெரும் போகம்
ஒன்று மாம் சால வுடன் (மேலது: 61)

என்ற இப்பாடலில்,

1. குடிக்கத் தண்ணீர் என்று கேட்டவுடனே தண்ணீர் கொடுத்து உதவுக

2. வெயிலால் துன்புறுவோர்க்குத் தங்கிக் களைப்பாறச் சாவடிகள் அமைக்க.
3. விருந்தினருக்கு இடம் தந்து தமக்கு ஆக்கியுள்ள உணவினையும் பகிர்ந்து உண்ணுக.
4. வழிபாட்டுத் தலங்கள் உருவாக்குக.
5. சாலைகளை அமைக்க

என்ற இவ்வைந்து கட்டளைகளை நிறைவேற்றியவருக்குப் பேரின்பம் கிட்டும் என்று வழிவகுத்துக் கூறுவதில் வாழ்விடச்சூழல் (Habitat Environment) சிந்தனைகள் புலனாகின்றன. .

குளந்தொட்டு வளம்பெருக்கல்: நீரைச்சேமிக்கும் இடங்களாக அமைவன குளம், குட்டை, அணை, ஆறுகள், வயல், தோட்டம், கா, சோலை. இவை சூழ்நிலை மண்டலம் (Eco system) ஆகும். இவற்றில் வாழும் உயிரினங்களையும் பாதுகாத்தல் நன்னீர்ச்சூழலியல் எனலாம்.

"குளம் தொட்டு கோடு பதித்து வழி சித்து
உளம்தொட்டு உழு வயல் ஆக்கி வளம் தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்றிவ்வைம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கம் இனிது" (மேலது: 64)

என்னும் பாடலில் குளம் வெட்டுவது, சாலையின் இருபக்கமும் மரங்களை நடுவது, பாதை அமைப்பது, தரிசுநிலங்களை உழுவயலாக்குவது, கிணறு வெட்டுவது ஆகிய அறங்களைச் செய்தவர் சுவர்க்க இன்பத்தைப் பெறலாம் என்கிறார். நீரையுடைய பேராழி, அடர்காடு, சேற்றுநிலம், விண்ணைத்தொடும் மலை, மாட்சிமையுடைய மக்கள் ஆகிய ஐந்தினையும் ஒரு நாடு பெற்றிருத்தல் வேண்டும். இதுவே அந்நாட்டுக்குரிய பாதுகாப்பு அரண் என்கிறார்.

"நீண்ட நீர் காடு களர் நிவந்து விண்தோயும்
மாண்ட மலை மக்கள் உள்ளிட்டு மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரணா உடையானை
வேந்தனா நாட்டல் விதி" (மேலது : 47)

இவ்விரு பாடல்களிலும் சூழ்நிலை மண்டலம் (Eco system) பற்றிச் சுட்டுகின்றார். இங்ஙனம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவிலே வாழ்ந்த காரியாசானிடம் சூழலியல் சிந்தனைகள் அரும்பியிருப்பதைச் சிறுபஞ்சமூலம் என்னும் அறநூலின்வழி அறியமுடிகின்றன.

**திரிகடுகத்தில் சூழலியல்:** திருநெல்வேலி மாவட்டம் 'திருத்து' என்னும் ஊரைச் சார்ந்தவர் நல்லாதனார். இவர் எழுதிய நூல் திரிகடுகமாகும். இந்நூல் 101 வெண்பாக்களையுடையது. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் சேர்ந்த மருந்து 'திரிகடுகம்' என்பர் மருத்துவ நூலார். 'கடுகம்' உடலின் நோயைக் குணமாக்குவது போன்று அந்நூலின் 'அறச்சிந்தனைகள்' உள மாசுகளை நீக்கி உள்ளம் சார்ந்த நோய்களைக் குணப்படுத்துகின்றன.

**நீர்மாசுபடுதல்: "தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே"** என்பது பழமொழி. நீர் மாசுபடுவதால் பல நோய்கள் ஏற்படுகின்றன. குடிநீர் உயிர்த் தேவைகளின் மிக முக்கியமான ஒன்றாகும். **'காவோடு அறக்குளம் தொட்டானும்'** (திரிகடுகம் 70), .... **'உண்ணுநீர் கூவல் குறைவின்றித் தொட்டானும்'** (மேலது. 71) ஆகிய பாடல் வரிகள் உயிரின வாழிட நீராதாரங்களான கூவல், குளம், கிணறு போன்றவற்றைச் சுகாதாரமாகப் பேணுபவன் சாகாவரம் பெறுவான். **'உடுத்தாடை யில்லாதார் நீராட்டும்...'** (மேலது.71) என்ற பாடல் வரியில் ஆடையின்றி நீர்நிலைகளில் குளிப்பது பெருந்தவறாகும் எனத் திரிகடுகம் எச்சரிக்கின்றது. இக்கருத்துக்கள் நன்னீர்ச்சூழல் பேணுதலை எடுத்துரைக்கின்றன.

**ஏலாதியில் சூழலியல்:** கணிமேதாவியார் இயற்றிய நூல் ஏலாதியாகும். ஏலம், இலவங்கம், நாகக்கேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு என்ற ஆறினையும் சேர்த்து உருவாக்கப்படும் மாத்திரையை சூரணம் என்பர். இச்சூரணம் உடல், உள்ளம் சார்ந்த நோய்களைக் குணப்படுத்த வல்லது. அது போலவே இந்நூலில் இடம் பெற்றுள்ள நீர்நிலை சார்ந்த அறக்கருத்துக்கள் சூழலியல் சார்ந்த அறிவியலைச் சுட்டுகின்றன. **"உண்ணீர் வளங்குளம் கூவல் வழிப்புரை தண்ணீரே அம்பலந்தான் பாற்படுத்தான்"** (ஏலாதி. 51) என்ற பாடல் வரிகளில் சுத்தமான குடிநீர், சுகாதாரமான குளம், பாதுகாப்பான கிணறு, வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஏதுவான இலைக்குடில்கள், தண்ணீர்ப்பந்தல் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பவன் புகழுடன் வாழ்வான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. இக்கருத்துக்கள் நீர்நிலைகளைப் பேணல், சுகாதார மேம்பாடு, வாழிட வளமைச் சூழலை நினைவூட்டுகின்றன.

> **"கருஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வளி காயும்**
> **பெருஞ்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்கு- அருஞ்சிரமம்**
> **ஆற்றி ஊண் ஈத்து அவை தீர்த்தார் அரசராய்ப்**
> **போற்றி உண்பார் புரந்து"** (மேலது. 57)

என்ற பாடலில் கொடிய சிரங்கு, வெண் குட்டம், கல்லடைப்பு, வாதம், கழலை, குடற்புண் போன்ற நோய்களால் பாதிப்படைந்தவர்களின் வருத்தம் நீக்கி, நோய் நீங்க மருந்தளித்து, உணவு வழங்கி பாதுகாப்பவர்கள் மன்னராய் வாழ்வர் என்று கூறுவதில் தொற்றுநோயுடையவர்களைப் பராமரிக்கும் மருத்துவச்சூழல் புலப்படுகின்றன.

**ஆசாரக்கோவையில் சூழலியல்:** நன்னடத்தைகளின் தொகுப்பு ஆசாரக்கோவையாகும். இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார். நூறு வெண்பாக்களையுடையது. உடம்பும், உயிரும் ஒன்று பட்டு இயங்குவதில் தான் மானுட வாழ்வு சிறப்படைகின்றது. இதனையே திருமூலர் **'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'** (திருமந்திரம். 724 : 1) என்றார். உடல் தூய்மையே உயிரைப் பாதுகாக்கும் வழியாகும்.

**எச்சிலும் சுற்றுச்சூழல் கேடும்:** உயிரினக்கழிவுகள் (எச்சில்) சுற்றுப்புறச் சுகாதாரத்தைக் கெடுத்து நோய்களைப் பரப்பக்கூடியன. மலம், சலம், புணர்ச்சியின் போது வெளிப்படும் சுக்கிலம், வாயில் தோன்றும் கோழை, காரல், புண்களில் தோன்றும் சீழ் போன்றன உயிரினக் கழிவுகளாகும். இக்கழிவினால் வாந்தி பேதி, காலரா, பறவைக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல், எய்ட்ஸ், மற்றும் எபோலா போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் ஏற்படுகின்றன. இக்கொடிய நிலைக்கு தன் சுத்தம், மற்றும் பொதுநலச் சுகாதாரத்தைப் பேணாமல் போகும் ஒழுக்கக்குறைபாடுகளே காரணமாகும் என மருத்துவ அறிவியல் எச்சரிக்கை செய்கிறது. இக்கருத்துக்களை **'எச்சிலார் தீண்டார்** (ஆசாரக்கோவை 5: 1) **எச்சிலார் நோக்கார்** (முன்னது 6: 1) எச்சில் பல உள. அவற்றுள்,

**'இயக்கம் இரண்டு இணைவிழைச்சு**
**வாயில் விழைச்சு இவை எச்சில் இந் நான்கு'** . (மேலது. 7)

இப்பாடல்களில் இயக்கம் இரண்டாவன மலம், சலம், இணை விழைச்சு சுக்கிலம், கோழை, காரல் போன்ற மனிதக் கழிவுகளை பொது இடங்களில், கண்ட இடங்களில் துப்புதல், கழித்தல் பெருங்குற்றமாகும் என ஆசாரக் கோவை எச்சரிக்கின்றது. இவ்வெச்சரிக்கையில் நோய், நோய்தடுத்தல் சார்ந்த சுகாதார மேம்பாட்டினை அறியலாம்.

**நீராடலும் சுற்றுச்சூழலும்:** நீராடல், உணவுண்ணல், தூங்குதல் போன்றன, உடல் செயலியக்கத்திற்கு இன்றியமையாதன. இச்செயல்களில் கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகளை ஆசாரக்கோவை சூழலியல் பின்னணியில் எடுத்தியம்புகிறது. தெய்வ வழிபாடு, தீக்கனா, வியர்வை, அழுக்கு, வாந்தி, தலைமயிர் களைதல், புணர்ச்சிக்குப் பின்னர், மலம், சலம் கழித்த பின்னர், காலம் தாழ்ந்து தூங்குதல் போன்ற

ஐயமின்றி நீராடல் வேண்டுமென்பதை,

"........தீக்கனா வாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண் பொழுது
வைகு துயிலோடு இணை விழைச்சு....
மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்
ஐயுறாது ஆடுக நீர்."... (முன்னது. 10)

என்ற பாடலின் மூலம் அறியலாம். அழுக்கு ஆடைகளைக் குடிநீர் ஆதாரங்களில் அலசுதல் கூடாது. நீராடும் போது எச்சில் உமிழ்தல் கூடாது. நீரைக்கலக்கி அசுத்தம் செய்தலாகாது. நோயுடையவர்கள் பொது நீர்நிலைகளில் குளித்தல் ஆகாது என்பதை "உடுத்தாடை நீருள் பிழியார்" (மேலது. 11:2), நீராடும் போது "உமிழார் திளையார்" (மேலது. 13:2) என்ற பாடல் 14:2) "இடர் எனின் நீர் தொடார்" (மேலது. 13:2) என்ற பாடல் வரிகளில் உணரலாம். உணவு உண்ணும் முன்னர் கால் கை கழுவி வாய் துலக்கி குளித்தல் வேண்டும். மலம், சலம் கழித்த பின்னர் ஈரத்தினை நன்கு உலர்த்துதல் வேண்டும். உணவு உண்டபின் வாய், பல் சுத்தம் செய்தல் வேண்டும் என்பதை "இழியாமை நன்கு உமிழ்ந்து எச்சில் அறவாய் அடியோடு நன்கு துடைத்து..... முகத்துறுப்பு ஒத்த வகையில் விரல் உறுத்தி வாய் பூசல் மிக்கவர் கண்ட நெறி" (மேலது. 27) என்ற பாடலில் காணலாம்.

சுற்றுப்புறம் பேணல்: வழித்தடம், புல்நிலம், வயல்வெளி, பசுவின் சாணம், சுடுகாடு, நீராதாரம், மர நிழல் போன்ற இடங்களில் பல்துலக்கி எச்சிலை உமிழ்ந்தும், மலம், சலம் கழித்தும் அசுத்தம் செய்தலாகாது என்பதை "நடைவரவு நீரகத்து நின்று வாய்பூசார், வழிநிலை நீருள்ளும் பூசார்" (மேலது. 35) என்கிறது ஆசாரக்கோவை. இல்லங்களைச் சுற்றிக் கழிவுகளையும் குப்பைகளையும் விலக்குதல் வேண்டும். உண்ணும் கலங்களை நன்கு சுத்தம் செய்தல் வேண்டும். வீட்டு வாயிலையும் அடுப்பினையும் பசுஞ்சாணத்தால் தூய்மை செய்தல் வேண்டுமென்பதை

"காட்டுக்களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பி நீரெங்கும் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்லதுறல் வேண்டுவார்" (மேலது, 46)

மேற்கண்ட ஆசாரக்கோவைப் பாடல்களின் வழி நம் முன்னோர்கள் தன் சுத்தத்தையும், (Personal Hygiene) சுற்றுச்சூழல் மேம்பாட்டினையும் (Environmental Development) எங்ஙனம் அன்றாட வாழ்வில் கவனமாகப்

பேணி வாழ்ந்தனர் என்பதை அறியும் போது உலக வரலாற்றில் சுற்றுச் சூழலைப் பேணுவதில் நம் முன்னோர்கள் முன்னோடிகளாக விளங்கினர் என்பது தெற்றெனப் புலப்படுகின்றன.

**முடிவுரை:**

முன்னோர்களின் வாழ்க்கை, சுற்றுச்சூழலியல் அறிவோடு அதன்போக்கிலே தம் வாழ்க்கை முறையினை அமைத்துக்கொண்டனர். எக்காரணம் கொண்டும் தம்வாழ்வின் நுகர்வுக்கேற்ப சுற்றுச்சூழலை மாற்றமுயலவில்லை என்பதைத் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. குறிப்பாக அறநூல்கள் காட்டும் ஒழுக்கம், தர்மம், கடமை, விலக்க வேண்டியவை, பேணவேண்டியவை என்னும் பொருளில் அமைந்த பாடல்களில் சூழலியல் சிந்தனைகள் முகிழ்த்துள்ளன. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆசாரக்கோவை ஆகிய நூல்களில் சூழலியல் சிந்தனைகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. முடிவாக, மனிதன் வாழ்வதற்கு இந்தப் புவியைவிட்டால் இப்போதைக்கு வேறு வாழ்விடம் இல்லை. எனவே, மனிதன் வாழ்வதற்கு ஏதுவான இப்பஞ்சபூதத்தின் சூழலியல் பற்றி அக்கறை எடுத்துக்கொள்வதும், அதனைப் பாதுகாக்க முன்வருவதும் இக்காலத்தின் தேவையாகும்.

❑

Scanned by TapScanner

# 5

## கல்வியும் சமுதாய நலனும்

- முனைவர் க. நஞ்சையன்

**கல்வி**

கல்வி என்பதன் வேர்ச்சொல் 'கல்' என்பதாகும். 'கல்லுதல்' என்பது 'தோண்டுதல்' 'துருவுதல்' என்று பொருள்படும் (Tamil Lexicon Vol. III).

எனவே, கல்வி என்பது ஒரு மனிதனுக்கு, சமுதாயத்தினையும் அச்சமுதாயத்தில் தன்னுடைய வாழ்க்கை நிலையினையும் தோண்டி, துருவி அறிந்துகொள்ளும் அறிவினைத் தருவதாக அமைதல் வேண்டும். கல்வி என்பதை வள்ளுவரும்,

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)**

என்கிறார்.

**சமுதாயம்**

ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொதுவாழ்க்கை வழியைப் பின்பற்றி, கூட்டாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும் (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 8). லெவி (Levy), பார்சன்ஸ் (Parsons) ஆகிய அறிஞர்களின் கருத்துப்படி, சமுதாயம் என்பது தம்முடைய செல்வங்களைக் கொண்டே, நெடுங்காலம் நீடித்திருக்கத் தேவையான செயற்பாட்டு முன் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு சமூகக் கோவை (Social System) ஆகும் (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 8).

மேற்கூறப்பட்ட சமுதாயத்தில் ஓர் அங்கமாக உள்ள மனிதனின் வாழ்வில் கல்வி மிகவும் முக்கியமான ஒன்றாகும். அவ்வாறு அவனுக்கு அளிக்கப்படும் கல்வி, அறிவு சார்ந்த வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு உடையதாக இருக்க வேண்டும். மேம்பாடு என்பது, தான் வாழும்

சமுதாயத்தைச் சார்ந்த எதனையும் பண்போடு அணுகி, ஆராய்ந்து, அச்சமுதாயத்தோடு அதற்குரிய தொடர்பியல்புகளைக் கணித்து, அறிந்து கொள்வதாக இருத்தல் வேண்டும்.

'கல்வியில் கற்பித்தல் என்பது, ஆசிரியர் தன் உள் ஒளியை, தான் கற்பிக்கும் மாணவனின் உள் ஒளியாக மாற்றுவதாகும்' என்கிறார் கவிஞர் தாகூர். எனவே இன்றைய நிலையில் கல்வி நிறுவனங்கள் மாணவர்தம் உடல்நலம், உள்ள நலம், கல்வி நலத்தில் அக்கறை கொண்டு விளங்க வேண்டும். ஆசிரியர் மூலமாக சீரிய நெறிமுறைகளைக் கற்பித்து, அவர்கள் சமுதாயத்தில் சிறந்த உறுப்பினர்களாகிப் பிற்காலச் சந்ததியினருக்கும் நல்ல எடுத்துக்காட்டாக விளங்க வழி செய்கின்றனவாக விளங்க வேண்டும்.

**கல்வியில் வற்புறுத்தப்படும் சமுதாய நோக்கங்கள்**

- ஒவ்வொரு தனிமனிதனும் பொருளாதார ரீதியில் மற்றவர்களுக்குச் சுமையாக இராமல் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் திறன் பெற வேண்டும்.
- தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு அறிவும் திறனும் பெற்றிருக்க வேண்டும்.
- சமூகத்திலுள்ள சககுடிமக்களோடு பழகுவதில் நீதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மனிதனை மனிதநேயம் உடையவனாகத் திகழச் செய்யும் நடத்தை மாற்றமே கல்வி. நடத்தை மாற்றம் சமுதாயச் சூழலில்தான் நிகழ முடியும். எனவே தான் வாழும் சமுதாயச் சூழலால் அன்றி வேறு எவ்வகையிலும் கல்வி என்பதனுக்குப் பொருள் இல்லை.

"கல்வி என்பது நாம் அறிந்து, வேண்டுமென்றே கட்டுப்பாட்டுடன் செயல்படுத்தும் ஒரு நடவடிக்கை. அதன் மூலம் தனிமனித நடத்தையில் மாற்றங்களும், தனிமனிதர்கள் மூலமாகச் சமூகத்தில் மாற்றங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன" என்பார் பிரவுன்.

சமுதாயத்தில் பிறரோடு ஒட்ட ஒழுகிச் சமூகமாக வாழ்ந்து விரும்பத்தக்க வழியில் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் திறன்கள் இளைஞர்களிடையே வளர்ப்பதே கல்வியின் பணி. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அனுசரித்து நடத்தல் மனிதனின் முக்கிய பண்பாகும். ஆகவே இன்றைய சமுதாயத்திற்காக மட்டுமின்றி, எதிர்காலச் சமுதாயத்திற்காகவும் மனிதனைத் தயார் செய்வதே கல்வி ஆகும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மனிதனின் வாழ்க்கைத் தரத்தையும், தொழில் அணுகுமுறைகளையும் வெகுவாக மாற்றி வருகின்றன. புதிய சமுதாயத்திற்குத் தேவையான திறன்களையும்,

Scanned by TapScanner

தகுதிகளையும் இளைஞர்களிடையே ஏற்படுத்தக் கல்விமுறை முயல வேண்டும். திறன் பெற்ற சிந்தனையாளர்கள், திட்ட வல்லுநர்கள் ஆகியோர் நாளைய சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்றனர். தேவையான புதுமைகளையும், மாற்றங்களையும் படைத்து ஏற்றுக் கொள்ளும் வகையில் கல்விமுறை தன் நடைமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஜனநாயகப் பொதுவுடைமைத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ள நாம், நாட்டில் சமூக நலன்கள் தனிநபரின் நலன்களுக்கு மேலாக ஓங்கி இருக்க வேண்டும். சமுதாய வாழ்க்கையை வெற்றியோடு எதிர்கொண்டு செயல்படத் தேவையான பழக்கங்கள், உடல் மற்றும் உள்ளத்திறன்கள், யோகா, நீதிவழிமுறைகள், அறிவுப்பூர்வ ஈடுபாடுகள் ஆகியவற்றைக் கல்வி மட்டுமே வழங்க முடியும். சமுதாயத்தை ஆக்கப்பூர்வமான வழியில் மாற்றியமைக்க ஒவ்வொரு தனிமனிதனும் திறன் பெற்றிருக்க வேண்டும். இளைஞர்களுக்கு இத்தகைய வளர்ச்சி ஏற்பட கல்வி நிறுவனமும், சமுதாயமும் இணைந்து செயலாற்றினால் தான் முடியும். 'ஒருவனை முழுமையான மனிதனாக மாற்றுவது கல்வி' என்கிறார் விவேகானந்தர். இன்று முழு மனிதனாகும் முயற்சியில் நாளைய சமுதாயமும் முழுமையானதாக மாற வேண்டும்.

**கல்வியும் சமுதாய வளர்ச்சியும்**

நாட்டை வளப்படுத்துவதில் கல்வி ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுகிறது. சமுதாய வளர்ச்சிக்குக் கல்வி உதவ வேண்டும்.

- சமூக மரபினை மாணாக்கர்களுக்கு அளிக்கும் ஆசிரியர், தாமே அம்மரபுகளைத் திறம்பட உணர்ந்திருத்தல் வேண்டும்.
- சமூக மரபினைப் பரப்புதலுக்கு ஆதாரமாக, அம்மரபு தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டும். இது மொழியினால் மட்டும் இயலும்.
- சமூகப் பழக்கவழக்கங்களில் காலத்திற்கேற்ப மாறுதல்களைச் செய்வது கல்வியாகும். சமூக அமைப்பில் தேவைப்படும் மாற்றத்தினை (Social Change) ஏற்படுத்திட கல்வி ஒரு கருவியாகும்.
- நவீனமாதலுக்குக் கல்வி அடிப்படைக் காரணியாகும். நமது வளர்ச்சித் தேவைகள், நாட்டில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல், தேசிய ஒருமைப்பாடு, பொருளாதார முன்னேற்றம், தொழில்வளம் ஆகிய மாற்றங்கள் நிகழக் கல்வி ஒரு வலிமை வாய்ந்த கருவியாகத் திகழ்கிறது.

Scanned by TapScanner

## கல்வியின் விழுமிய நோக்கம்

தனிமனிதர்களிடம் சமூகத்திறன்கள் நன்கு வளர்ச்சிபெற உதவுதல் கல்வியின் இறுதி நோக்கமாக அமைய வேண்டுமென்று பாக்ஸி, தூன்டுமி போன்ற கல்வியாளர்கள் கருதுகின்றனர். மாணவரைச் சமூகத்தில் நற்குடிமக்களாகப் பயிற்றுவித்தல் கல்வியின் விழுமிய பணியாகும். ஆகவே இதனைக் குடிமை நோக்கம் (Citizenship Aim as Civil Aim) என்பர். ஏனெனில், நல்ல குடிமை உணர்வே சமூகத்தில் பிறருடன் ஒருவன் செயற்பட அடிப்படையாகும். ஒத்துழைத்தல், பிறருடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், தன் அனுபவங்களிலிருந்து எழும் பயன்களைத் தான் பெறுதலோடு பிறர்க்கும் அளித்தல், பிறரது செயல்களில் யாவருக்கும் உதவக்கூடிய முறையில் அவருடன் பங்கு கொள்ளல் ஆகியவை நல்லகுடிமகனது பண்புகளாகும்.

இந்தச் சமூக நோக்கம் இன்று மக்களாட்சி நாடுகளின் கல்வி அமைப்பில் பரவலாகக் காணப்படுகிறது. இதனைக் குடிஆட்சித் தத்துவத்தின் இன்றியமையா விளைவு எனலாம். இந்நோக்கம் ஒத்துழைப்பு, ஒருவருக்கொருவர் உதவி வாழ்தல், சமூகத்தில் இசைவு ஆகியவற்றைக் கல்வியின் பயன்களாக வலியுறுத்துகிறது. 'சமூகப் பணியே கல்வியின் நோக்கமாகும். செய்து கற்றலின் வழியே சமூகப் பண்புகளைப் பெற வாய்ப்பளிக்கும் வகையில் சிறந்த குடும்பங்களைப் போன்று கல்வி நிறுவனங்களும் மாதிரிச் சமுதாயங்களாகத் திகழ வேண்டும்' என்று ராஸ் (Ross) என்ற அறிஞர் குறிப்பது சிந்தித்தற்குரியது.

### சமூகத்திறன் பெற்றவரின் பண்புகள்

சமூகத்திறனைச் (Social Efficiency) சிறப்பாகப் பெற்றுள்ளவனது பண்புகளாக மூன்றினை பாக்ஸி என்பவர் குறிப்பிடுகின்றார்.

- வாழக்கற்றவன் சமூகத்துக்கு ஒரு பாரமாக இருக்க மாட்டான். தனது வாழ்க்கைத் தேவைகளைத் தனது உழைப்பின் மூலம் நிறைவு செய்துகொள்வான். இத்தகையவன் சமூகத்தில் நேரடியாக உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டோ அல்லது பிறருக்கு வழிகாட்டி ஊக்குவித்து இத்தகைய தொழில்களில் அவர்களை ஈடுபடச் செய்தோ வாழ்க்கை நடத்துவான்.
- இவன் சமூகத்தில் பிறரது வாழ்க்கையிலும் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளிலும் செயல்களிலும் தேவையின்றிக் குறுக்கிட மாட்டான்.
- தனது ஆற்றலுக்கேற்ற வகையில் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஓரளவேனும் இத்தகையவன் துணை புரிவான்.

உண்மைக் கல்வி இத்தகைய பண்புகளைப் பெற்றவர்களாக மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். கல்வி கற்றதன் விளைவாக ஒருவன் தன் உணர்வு பெறுவதுடன் சமூக உணர்வினையும் பெற வேண்டும். அவனிடம் நான் - உணர்ச்சியுடன் (I-Feeling) நாம் - உணர்ச்சியும் (We - Feeling) காணப்பட வேண்டும். இத்தகைய உணர்ச்சி பரந்துபட்டதாகக் காணப்பட வேண்டும். இத்தகைய பரந்த சமூக உணர்வினை (Social Consciousness) மாணவர்களிடம் உருவாக்குதலைச் சமூக நோக்கு வலியுறுத்துகிறது. கற்றலிலும், விளையாட்டுப் போன்ற செயல்களிலும் ஒத்துழைப்பு மனப்பான்மை வலியுறுத்தப் பெறுகிறது. கல்வி கற்கும் வாழ்க்கையே ஓர் இலட்சிய சமுதாய வாழ்க்கையாக அமைக்கப்படுகிறது.

சமூக நோக்கம் அல்லது குடிமை நோக்கத்துக்கான கல்வியில் கீழ்க் குறிக்கப்பெறும் இலக்குகள் அடங்கி உள்ளன.

- உடல் நலம்
- தொழில் திறன்
- நலமான வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொதுத்திறன்கள்
- குடும்பத்துள் பிற உறுப்பினர்களுடன் ஒத்துழைத்துச் செயற்படப் பயிற்சி.
- சிறந்த பெற்றோராகப் பிற்காலத்தில் விளங்குவதற்கான பயிற்சி.
- சமுதாயத்தில் பக்கத்து வீட்டாருடன் ஒத்துழைத்துப் பயனுள்ள வகைகளில் செயற்படல்.
- சமூகத்தின் சிறப்பான உறுப்பினராகச் செயற்படல்.
- ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவிடல்.

இத்துணை நல்லியல்புகள் இதில் அமைந்துள்ளன. இப்பண்புகள் நன்முறையில் மாணவனிடம் வெளிப்பட மாணவனது தனித் தன்மை நன்கு மதிக்கப்படல் வேண்டும். கல்விநிலையம் ஒரு சமூக நிலையமாகக் கருதப்படல் வேண்டும். கல்வியானது, செயல்களின் அடிப்படையில் அமைக்கப்படவேண்டும் என்று ஜான்டூயி என்ற அறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### சமூகக் கல்வியின் சமூகப் பணிகள்

#### சமுதாயத்தில் ஒற்றுமையை வலியுறுத்தல்

மிகப்பழைய காலந்தொட்டே நமது நாடு பண்பாட்டுச் சிறப்புடையதாகும். இங்கு அயல் நாட்டவர் பலர் படையெடுத்து வந்து இந்நாட்டில் குடியேறி விட்டனர். இதனால் பல மொழிகள், பல

Scanned by TapScanner

மதங்கள், பலவகைக் கலாசாரங்கள் நம் நாட்டில் உருவாயின. இவை ஒவ்வொன்றும் குடிமக்களைத் தனித்தனியான தீவுகள் போல் ஒற்றுமையின்றி, இயங்கவைக்கவல்லன. வேற்றுமை பல இருப்பினும், அவற்றினூடே ஒற்றுமை காண வேண்டியது நமது சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். சமூகக் கல்வித் திட்டத்தில் நாட்டின் பல்வேறு மொழிகள், பண்பாடு, மதங்கள், வரலாறு ஆகியவற்றைக் கற்பித்தல் வேண்டும். ஓரினத்தவர், மற்றவர்களின் வெறுப்பை வளர்த்துக் கொள்ளக் கூடாது. வயது வந்தவர்களுக்கான சமூகக் கல்வி நாட்டின் ஒற்றுமைக்குப் பெரிதும் உதவ முடியும்.

## நாட்டில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தலும், வளர்த்தலும்

நமது இயற்கை வளங்களைச் சிறப்பாக மரங்களைக் கட்டாயமாகப் பாதுகாக்க வேண்டும். கர்நாடகா போன்ற மாநிலங்களில் அரசாங்கம் ஆண்டுதோறும் மரங்களை நட்டு இயற்கைச் செல்வத்தைப் பாதுகாப்பதுடன் வளர்க்கவும் செய்கிறது. வன விலங்குகள் வாழ்ந்து பெருகுவதற்குக் காடுகள் மிகவும் அவசியம். இயற்கையையும் நாம் பாதுகாத்தல் வேண்டும்.

### மனித வளம்

அடுத்தபடியாக நாம் அதிகக்கவனம் செலுத்த வேண்டிய ஒருதுறை மனித வளமாகும். நமது குழந்தைகளும் இளைஞர்களும் நம் நாட்டின் இன்றியமையாத செல்வங்களாகும். இவர்களை நாம் நல்ல முறையில் வளர்த்து வழி நடத்திச் செல்லவேண்டும். கல்வி பயிலும் பருவத்தில் இவர்களுக்கு நல்ல பள்ளிகளும் சிறந்த ஆசிரியர்களும் அமைந்திட வேண்டும். கல்வி கற்காத இளைஞர்களை முறைசாராக் கல்வி மூலம் கற்க நாம் ஊக்குவிக்க வேண்டும்.

## ஒத்துழைக்கும் குழுக்களை வளர்த்தல்

தனிமனிதனுடைய வாழ்வு வளம்பெற வேண்டுவது எவ்வளவு முக்கியமோ அதே போலச் சமுதாயத்தில் நாம் காணும் அனைத்துக் குழுக்களும் வளம் பெற வேண்டும். வேறுபாடுகளினால் மக்கள் சிறு சிறு கூட்டங்களாக வாழ்கின்றனர். இதில் தவறேதுமில்லை. ஆயின் இவற்றுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுவது கண்கூடு. பிரச்சினைகளைச் சுமூகமான முறையில் சமாளிக்கும் திறனை, குழுக்களைச் சேர்ந்தவர்கள் வளர்த்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

### சமூகப் பண்பு

கிரேக்க நாட்டின் வரலாற்றில் இரண்டு நகர நாகரிகங்களைப் பற்றி அறிகிறோம். ஏதென்ஸ் நாட்டில் தனிநபரின் சிறப்பை வளர்ப்பதற்கு எல்லாச் சுதந்திரமும் அளிக்கப்பட்டது. இதனால் கலை,

Scanned by TapScanner

கல்வி, கேள்வி ஆகிய அனைத்திலும் அம்மக்கள் சிறந்து விளங்கித் தமது நாட்டிற்குப் பெருமை தேடித்தந்தனர் என்றறிகிறோம். ஸ்பார்டாவில் தனிநபர் சுதந்திரத்தை விட நாட்டின் நலனைப் பெரிதென மதித்தனர். சிறந்த இராணுவப் பயிற்சிபெற்ற ஒவ்வொரு குடிமகனும் நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் சமூகப் பண்பாட்டிற்குச் சிறந்த விளக்கம் தருகின்றன. "ஒரு குடும்பத்தின் நலனுக்கு ஒரு நபரைத் தியாகம் செய்யலாம். ஒரு கிராமத்தின் நலனுக்குத் தேவையானால் ஒரு குடும்பத்தையே தியாகம் செய்யலாம். ஒரு சமுதாயத்திற்காக ஒரு கிராமத்தையே தியாகம் செய்யலாம்" என்ற உபநிடதக் கருத்துக்கள் சமூக நலனில் மக்கள் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பைச் சுட்டிக் காட்டுகின்றன.

### சமூகக் கல்வியின் பொறுப்புகள்

சமூகக் கல்வி என்பது என்ன ? அதன் விளக்கம் யாது? என நோக்குங்கால், சமூகத்தில் மக்கள் இணக்கத்தையும் திடமான பண்பாட்டையும் அக்கல்வி அளிக்கவல்லதென அறிகிறோம். ஐந்தாண்டுத் திட்டங்களினால் பொருளாதாரத் துறையில் நாடு முன்னேறுவதற்கு இக்கல்வி உறுதுணையாகும். அறிவியலும், தொழில்நுட்பமும் நாட்டில் முன்னேறுவதற்குப் பெரிதும் உதவுகின்றன. கிராமப்புறங்களில் முன்னேற்றம் மெதுவாக வளர்ந்துசெல்கிறது. நகர்ப்புறங்களிலோ இதன் வேகம் அதிகம். இவ்விரண்டுக்கு மிடையேயுள்ள வேறுபாட்டைக் குறைக்கச் சமூகக் கல்வி அவசியமாகும்.

இவ்வாறு தனி மனிதனைச் சமூகச் சிறப்புக்கேற்பத் தலைவனாகவும், தொண்டனாகவும் நல்ல பண்புமிக்க குடிமகனாகவும் வளர்க்கும் பொறுப்பு சமூகக் கல்விக்குண்டு!

### சமூகப் பயனுள்ள ஆக்கச் செயல்கள்

சமூகத்திற்குப் பயன்படும் ஆக்கச் செயல்கள் (Socially Useful Productive Work) என்பது பயனுள்ள, பொருளுள்ள உடலுழைப்பு வேலை எனலாம். இவ்வுழைப்பு தனக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டும். இது சமூக சேவையாகவும் இருக்கலாம் அல்லது இதன் மூலம் உற்பத்திப் பொருளும் கிடைக்கலாம்.

சமூக ஆக்கச் செயல்களில் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியதன் குறிக்கோள்கள் :-

1. சமூகத்தில் நடைபெறும் உற்பத்தித் தொழில்கள்பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்வதோடு உடலுழைப்புச் செய்வோரை மதிக்கும் மனப்பான்மையை வளர்த்தல்.

Scanned by TapScanner

2. சமுதாயப் பிரச்சினைகள் பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்ளச் செய்வதுடன் சமுதாயச் சேவை செய்வது குறித்துச் சரியான மனப்பான்மையை வளர்த்தல்.

3. சமுதாயத்தில் பயனுள்ள உறுப்பினர்களாக வாழவும், சமுதாய முன்னேற்றத்திற்குத் தங்களாலான பங்கை ஆற்றவும் விருப்பத்தை வளர்த்தல்.

4. தன்னம்பிக்கை, உடலுழைப்பின் மேன்மை, சகிப்புத் தன்மை, கூட்டுறவு, பரிவு, பிறருக்கு உதவுதல் போன்ற பண்புகளை வளர்ப்ப தோடு பிறருடன் இணைந்து வேலை செய்யும் மனப்பான்மை யையும் வளர்த்தல்.

5. பல்வேறு தொழில் அல்லது வேலை செய்வதன் நுணுக்கங்களை அறிதல்.

6. படிப்படியாகச் செய்யும் தொழிலில் திறமையை வளர்ப்பதோடு படிக்கும் போதே செய்யும் தொழில் மூலம் பொருளீட்டும் திறமை பெறச் செய்தல்.

7. படைப்பாற்றலையும், சிக்கல் தீர்க்கும் ஆற்றலையும் வளர்த்தல். பயன்படும் சமூக ஆக்கச் செயல்கள் வாழ்க்கைத் தேவைகளை அடிப்படையாகக்கொண்ட சமூகத் தேவைகளைச் சார்ந்து கற்போரின் தேவைகளை ஒட்டிய செயல்களாக, தொழில்களாக இருக்க வேண்டும்.

**பெண்கல்வி**

குடும்ப வாழ்க்கையை நலமுறச் செய்யவும், குழந்தைகளது அறிவு வளர்ச்சிக்கு நல்ல அடித்தளத்தை அமைக்கவும், எழுத்தறிவின்மை யைப் போக்கவும், குடும்ப நலத்திட்டம் போன்ற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றியடையவும் பெண்கல்வி முக்கியமாகும்.

19-ஆம் நூற்றாண்டில் பெண்கல்விக்கான சமூகவியக்கம் எழுந்தது. இவ்வியக்கம் மேலும், மேலும் தீவிரமடைந்தது. எனினும் பெண் கல்வியில் மெதுவான முன்னேற்றமே காணப்பட்டது. ஆனால் இன்று நம் குடியரசில் பெண்களுக்கும் ஆண்களைப் போன்ற கல்வி வசதி உதவி செய்யப்பட்டுள்ளது.

இராதாகிருஷ்ணன் கல்விக்குழு, முதலியார் கல்விக் குழு, கோத்தாரி குழு, தேசியக் கல்விக் குழு ஆகியன பெண் கல்விக்கான பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளன. இப்பல்வேறு பரிந்துரை களுக்கும் இன்று செயல்வடிவம் தரப்படுகின்றது. வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு ஒதுக்கீடு, பொது வளர்ச்சியின் ஒரு முக்கிய பங்கு என்பது வலியுறுத்தப்படுகிறது.

## அறிவியல் கல்வி

நாட்டு வளர்ச்சிக்குக் கல்வி வளர்ச்சியும், முக்கியமாக அறிவியல் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சியும் அடிப்படை. நமது அறிவியல் கல்வியின் தரத்தைப் பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது ஓரளவு குறைந்து காணப்படுகிறது. இந்நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும். அறிவியல் துறையில் பல்கலைக் கழகங்கள் மேலும் பயனுள்ள வகைகளிலும் அதிக அளவிலும் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

## சூழ்நிலைக்கல்வி

புதிய கல்விக் கொள்கையின் முக்கிய கூறுகளுள் ஒன்று சுற்றுப்புறச் சூழல் பற்றிய கல்வி அளிக்கப்படுதலாகும். நிலம், நீர், மரங்களடங்கிய காடுகள், காற்று மண்டலம் ஆகியன மனிதச் செயல்களால் மாசுபடுத்தப்பட்டால் மனிதனது வாழ்க்கை அழிவை நோக்கிச் செல்லும். இவ்வுண்மையை உணர்ந்து மனிதனின் எதிர்காலம் நம்பிக்கையுள்ளதாக அமையவேண்டுமெனில் சூழ்நிலைக் கல்வி இன்றியமையாதது. மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கல்வி முக்கிய கருவியாகும்.

கல்வியானது சமூகச் செயலாகும். கல்வி நிலையங்கள் சமூக நிலையங்களாகும். ஆசிரியர்கள் சமூக உறுப்பினர்கள். ஆகவே தனி நபரைச் சமூகத்தின் சிறந்த உறுப்பினராக மாற்றுவது கல்வியின் முக்கிய பணியாக விளங்குகிறது என்பது தெரியவருகிறது. சமூக மாறுதல்களுக்கேற்ப கல்வி அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கல்வியுலகில் ஏற்படும் புதிய அணுகுமுறைகளையும், உத்திகளையும் ஏற்றுக்கொண்டால் சமூகம் வளர்ச்சி பெறும்.

# 6

# அற இலக்கியங்களில் மேலாண்மை

- பேரா. கூ. செந்தாமரை

தொன்மைக் காலத்திலேயே சீனா, இன்டஸ் பள்ளத்தாக்கு, ...ந்து போன்ற நாடுகளில் நிர்வாகவியல் பயன்பாட்டில் இருந்தது ...வந்துள்ளது. எகிப்து நாட்டில் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ...றைக்குள்ள கருவிகளைக்கொண்டு மணல்பரப்பில், பிரமாண்ட ... பிரமிடுகள் கட்டியுள்ளனர் என்பது அவர்களின் நிர்வாகத் ...க்குச் சான்றுகளாகும். பழங்காலத்திலிருந்து நிர்வாகவியல் பற்றிய ...ப்புகள் கிடைத்தாலும் அது ஒரு பாடமாக இரண்டாம் உலகப் ...ருக்குப் பிறகுதான் கற்றுக்கொடுக்கப்பட்டது. 50 வருடங்களாகத் ...ன் நிர்வாகவியல் மாபெரும் அளவில் வியாபாரத்திலும், கல்வியிலும் ...ப்படுகின்றது.

தமிழில் 'நிர்வாகம்' பற்றிய முக்கியத்துவம் பெற்ற காலம் என்று ...வதானால் சங்கம் மருவிய காலத்தைச் சொல்லலாம். இக்கால ...டத்தில் தோன்றிய அற இலக்கியங்கள், மனிதர்கள் இளமைப் ...வத்தில் செய்யும் தவறுகளைத் திருத்தி நல்வழிப்படுத்தி உயர ...வரை கூறுகின்றன. நீதிக்கதைகள் மூலம் அறக்கருத்துக்களை ...மையாக எடுத்துச் சொல்லி வழிநடத்தினால், அறவழியைப் ...பற்றாவிட்டாலும் தீயவழியில் செல்வதைத் தடுக்க இந்த ...கியங்கள் பயன்படுகின்றன. திருக்குறள், திரிகடுகம், 'ஆசாரக் ...வை, ஏலாதி, ஔவையார் படைப்புகள் போன்ற சிறப்பு வாய்ந்த ...இலக்கியங்கள் உணர்த்தக்கூடிய மேலாண்மைபற்றி இக்கட்டுரை ...க் காணலாம்.

சங்க இலக்கியங்களில் அறக்கருத்துக்கள் இருந்தாலும் சங்கம் ...விய காலத்தில் தோன்றிய அறஇலக்கியங்கள் அடிவரையறை

குறைந்தும் நீதியையும், அறத்தையும் பாடுபொருளாகக் கொண்டு வெண்பா யாப்பினால் எழுதப்பட்டும் உள்ளன. இவ்விலக்கியங்களில் இலக்கண வரைமுறைகள் குறைந்து காணப்படுகின்றன. மேலும் அறக்கருத்துக்களைச் சொல்லுவதற்குக் கல்வியறிவும், அனுபவ அறிவும் மிகுந்த ஒருவரால்தான் எடுத்துச் சொல்ல முடியும். இதற்கு ஒரு கதை சொல்வார்கள். ஓர் ஊரில் பாகவதர் ஒருவர் இருந்தார். அவருக்குக் காசியின் மன்னர் முன்பு சொற்பொழிவாற்ற வேண்டும் என்பதாகும். இது அறிந்த மன்னரும் பாகவதரின் சொற்பொழிவைக் கேட்க விரும்புவதாகவும், அதற்கு முன்பு பாகவதர் இன்னும் ஒருமுறை பாகவதத்தை நன்கு படித்துவிட்டு வந்தால் நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்தார். சொற்பொழிவாளருக்குக் கடுங்கோபம் வந்தது. ஆனால் பேசுவது மன்னரல்லவா ? அதனால் கோபத்தை அடக்கிக் கொண்டு மீண்டும் ஒருமுறை பாகவதத்தை முழுமையாகப் படித்தார். மீண்டும் ஒருமுறை படித்ததில் அவருக்கு ஆழ்ந்த அர்த்தங்கள் புரிந்தன. அவருடைய கோபம் மறைந்தது. அதன்பிறகு மன்னரைக் காணச் சென்றார். மன்னரோ “மீண்டும் ஒருமுறை பாகவதம் படித்துவந்து சொற்பொழிவாற்றுங்கள்” என்றார். மிகவும் வருத்தம் அடைந்த பாகவதர் வீடு சென்று மீண்டும் படித்தார். படிக்கப் படிக்க அவரிடம் இருந்த அகங்காரம், தற்பெருமை எல்லாம் மறையத் தொடங்கின. அதனால் காசி மன்னரிடம் தன் சொற்பொழிவை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் மறைந்துவிட்டது. இனி பாகவதர் வரமாட்டார் என்று உணர்ந்த காசி மன்னர், பாகவதரிடம் ஓடோடிச் சென்று அவர் காலில் விழுந்து, “எனக்குப் பாகவதம் கற்றுக் கொடுக்க நல்ல ஆசானாக நீங்கள் கிடைத்து விட்டீர்கள்” என்றார்.

இதிலிருந்து கற்றுக் கொண்டதென்னவென்றால் கல்வி கற்றவனாயினும், ஒன்றைத் திரும்பத்திரும்பப் படித்துக் கற்றுக் கொள்வதிலிருந்து அதில் புதைந்துள்ள பல செய்திகள் புலப்படுவதைக் காணமுடிகின்றன. மேற்கண்ட கதையில் வந்த மன்னனைப் பாருங்கள். மன்னன் மதிநுட்பம் மிக்கவன் என்பதாலேயே பாகவதரை, தனக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசான், சிறந்த மதிநுட்பம் மிக்கவராக இருக்கவேண்டும் என்று எண்ணியே அப்படிச் செய்திருக்கிறான். இக்கதையில் வரும் மன்னனின் ஆளுமைத்திறனைப் பார்க்கமுடிகிறது. பழங்கால அரசாங்கம், வியாபாரம், அரசியல் தந்திரம், சமூக உறவு முறைகள் இவற்றிலிருந்து நிர்வாகம் பற்றிய அரிய தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

Scanned by TapScanner

## திருக்குறள் காட்டும் மேலாண்மை

ஒன்றைக் கற்றுக்கொள்ள மேன்மேலும் படித்தால் மட்டுமே அதன் ஆழமான பொருள் நன்கு புலனாகும். மாணவர்களுக்குச் சிறுவயதில் கற்றுத்தரப்பட்ட திருக்குறளுக்குப் பொருள் தெரியாது ஆனால் குறளைத் தலைகீழாகக் கூடச் சொல்லும் அறிவு இருக்கும். அதையே உயர்கல்வி கற்கும்போதுதான் அதன் முழுமையான பொருள் புலனாகும்.

திருக்குறள், மனிதர்கள் எப்படி உலகில் வாழ வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டது. திருக்குறளை ஆழ்ந்து படித்தால் தனிமனித நிர்வாகத் திறனையும் ஒரு நாடு அல்லது அமைப்பை நிர்வகிக்கும் முறையையும் வள்ளுவர் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதை அறிய முடிகின்றது. பொதுவாகப் பார்த்தால் அறிவு மட்டுமே ஒன்றை நிறைவேற்றப் பயன்படுவதில்லை. அதையும் மீறி ஒரு சில அடிப்படைப் பண்புகள் நிர்வாகவியலில் உள்ளன. திருக்குறளில்,

**"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்."** *(அதி-48, குறள்-472)*

நம்மால் செய்யமுடிந்த செயலையும், அதற்காகத் தெரிந்துகொள்ள வேண்டியவற்றையும் தெரிந்துகொண்டு, அந்தச் செயலில் தொடர்ந்து முயற்சி செய்கின்றவருக்கு முடியாதது இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

ஒரு தொழிலின் ஒவ்வொரு நிலைக்கும் திருக்குறளிலிருந்து வழிமுறைகளையும் விவேகத்தையும் பெறலாம். ஆனால் அவற்றைப் பெறுவதற்கு முன் குறளின் கருத்துக்களைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பண்பினைக் கற்றுக் கொடுக்கவந்த வள்ளுவர் ஒரு தலைவனுக்குத் தேவையான அடிப்படைக் குணங்கள் இவையெனக் கூறுவதைக் காணலாம்.

**"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"** *(அதி-39-குறள் 382)*

ஒரு தலைவனுக்கு அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய பண்புகள் சிறிதும் குன்றயாமல் இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். செயலுக்கேற்ற காலத்தைப் பற்றிச் சொல்லும்போது.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (அதி - 49 - குறள் 490)

என்கிறார் வள்ளுவர். ஒருவன் செய்யும் செயலுக்குச் சாதகமாகக் காலம் இல்லையெனில் "கொக்குக் காத்திருப்பது" போன்று காத்திருக்க வேண்டும். சரியான காலம் வரும்போது கொக்கு மீனைப் பிடிப்பது போன்று விரைவாகச் செயல்பட வேண்டும்.

ஒரு தொழிலைச் செய்ய முதலில் இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். மைக்கேல் போர்டர் என்பவர், "ஒரு தொழிலில் போட்டியாளர்களை எதிர்கொள்ள, தேர்ந்தெடுக்கும் இடம் மிகமிக முக்கியமானது" என்கிறார். மிகச் சரியான இடம்தான் தொழிலில் போட்டியாளர்களைச் சிந்திக்க வைக்கும். எந்த ஒரு தொழிலையும், தொழிற்சாலைகளையும் தொடங்குவதற்கு இடம் மிகமிக முக்கிய மானது.

அடுத்து தோற்றப்பொலிவும், பேச்சுத் திறனும் தொழில் செய்பவனுக்கு முக்கியமானதாக அமைகின்றன. கம்பீரமானவர்கள் தான் மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள். அவர்கள் கூறுவதையே மற்றவர்கள் கேட்பார்கள். அதே போல் பேச்சுத்திறன் சுருக்கமாகவும், தெளிவாகவும் அமைவது நல்லது. பொறுப்பற்ற பேச்சு வெற்றிக்குக் காரணமாக விளங்கும் வலிமையைத் தேய்த்து அழிக்கும் என்கிறார் வள்ளுவர்.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்" (அதி-57, குறள்-567)

தெரிந்து வினையாடலில், வல்லவன் யார் என்பதற்கு,

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று" (அதி. 52 - குறள் - 515)

இக்குறள் சான்றாகும்.

ஒரு பணியைச் செய்யும் வழிகளை அறிந்து, இடையூறுகளைத் தாங்கிச் சென்று முடிக்க வல்லவனிடம் உங்கள் பணியை ஒப்படைக்க வேண்டும். அதை விடுத்து ஒருவரிடம் உள்ள ஈடுபாட்டால் பணிகளை அவரிடம் தரக்கூடாது.

அமெரிக்க ஜனாதிபதிகளான ஃபிராங்களின் ரூஸ்வெல்ட், ஹாரி ட்ரூமன் இருவரும் தத்தம் அமைச்சரவைக்கு அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, "அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளைப்

Scanned by TapScanner

பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. பணியில் அவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதுதான் முக்கியம்" என்று கூறுவார்கள். இவர்கள் இருவருக்கும் மிகச் சிறந்த அமைச்சரவை இருந்தது என்பது உலகறிந்த செய்தி ஆகும். ஆகையால் ஒருவரிடம் எதுவுமில்லை என்பதைவிட என்ன திறமையுள்ளது என்பதை அறிவதே மிக முக்கியம் ஆகும்.

**"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குரிய னாகச் செயல்"** *(அதி - 52 - குறள் - 518)*

ஒருவன் தொழிலுக்கு ஏற்றவனா என்று ஆராய்ந்து தேர்ந்தெடுத்த பின்னர் அவனுக்கு அதற்குத் தகுந்த பதவி, அதிகாரம் மற்றும் அந்தப் பணிகளை முடிக்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அப்போதுதான் அவனால் தனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலும் என்கிறது குறள்.

ஒரு அரசன் சிறந்த நிர்வாகியாக வேண்டுமெனில், அவனிடம்

**"படைகுடி கூழ் அமைச்சு நட்பரண்ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு"** *(அதி-39, குறள்-381)*

என்ற குறள் மூலம் தன்னையும் தன் நாட்டையும் காக்கும் படையும், குடிமக்களும், நிறைந்த செல்வமும், அமைச்சர்களும், நண்பர்களும், கோட்டையும் ஆகிய ஆறினையும் உடையவனே சிறந்த அரசனாக இருக்க முடியும் என்கிறது.

ஒரு நிர்வாகத்தை நடத்திக் கொண்டு செல்லும் தலைவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு,

**"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்"** *(அதி - 39, குறள் 386)*

என்ற குறளில் ஒரு தலைவன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும் இருந்தால் அவனுடைய நிறுவனம் உலக மக்களால் புகழப்படும் என்கிறது.

வின்ஸ்டன் சர்ச்சில் தன் சொல்வன்மை மூலமாகக் கோடிக் கணக்கான மக்களை ஆட்கொண்டது மட்டுமல்ல, இரண்டாம் உலகப்போரில் வெற்றிபெறத் தேவையான தியாகத்தையும் அவர்களைச் செய்ய வைத்தார். போரில் வெற்றிபெற வேண்டும் என்று அவர் பேசிய பேச்சு மக்களைக் கட்டிப் போட்டது இதனை.

Scanned by TapScanner

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்" (அதி - 65, குறள் - 643)

என்று சொல்லும்போது கேட்பவர்களைத் தன் வயப்படுத்துமாறும் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு பேசுவது சொல்வன்மையாகும் என்கிறது குறள்.

சிறந்த தலைவன் என்று பெயரெடுக்க

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (அதி-39, குறள்-385)

என்ற குறளுக்கேற்ப பொருள் வரும் வழிகளை மேன்மேலும் அறிந்து அவற்றை உண்டாக்குவதிலும், பொருளைச் சேர்த்தலிலும், சேர்த்த பொருளைக் காப்பதிலும், காத்த பொருளை நல்வழியில் செலவு செய்தலிலும் திறமையானவனே சிறந்த தலைவனாக இருக்க முடியும் நிர்வாகத்தில் இன்னுமொரு முக்கிய அம்சமாகக் கருதுவது, 'ஒற்று' அறிவதாகும். இதனை,

"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்" (அதி-59, குறள்-582)

என்ற குறளில் எல்லாரிடத்திலும் நிகழ்கின்றவை எல்லாவற்றையும் எப்பொழுதும் ஒற்றர்களின் உதவி கொண்டு விரைந்து அறிவது ஒரு தலைவனின் கடமையாகும். இத்தோடு நம்பிக்கை, முதிர்ச்சி, பெருந் தன்மை இவை மூன்றும் உயர்ந்த பண்புக்கு மிக முக்கிய மானதாகும் என்று ஸ்டீஃபன் கோவே கூறியுள்ளார்.

தலைவனாக வாழ வழிகாட்டிய குறளில் மனிதனாக வாழவும் சொல்லப்பட்டிருக்கிறது.

"பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது" (அதி - 25, குறள் - 248)

பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவ ஆனால் அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பலன் அற்றவரே. அ எந்தக் காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை என்கிறது கு மேலும், மனதில் உறுதி, உண்மை, இரக்கம் இம்மூன்றும் ஒ தலைவனிடம் மற்றவர்களுக்கு உள்ள நம்பிக்கையை உணர்த்தும். இ

Scanned by TapScanner

அவருக்குச் சிறந்த பணியாளர்களைத் தந்து வெற்றிபெறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

## திரிகடுகம் காட்டும் மேலாண்மை

மூன்று கருத்துக்களைக் கொண்டு மனிதர்கள் தம் வாழ்க்கையில் உயர வழிகாட்டுவதாக அமைவது திரிகடுகம் ஆகும்.

**"வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆளல்லான்**
**செல்வக் குடியுட் பிறத்தலும் பல்லவையுள்**
**அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்**
**துஞ்சுஊமன் கண்ட கனா"** *(திரிகடுகம் - 7)*

என்ற பாடலில் வாளை என்னும் மீனை உள்ளான் என்னும் சிறுபறவை எடுக்க முயற்சி செய்தலும், ஆளமாட்டாதவன் செல்வமுள்ள குடியில் பிறந்து அதனை ஆளக்கருதுதலும், கற்றார் பலர் கூடிய சபையில் அஞ்சும் இயல்புடையவன் படித்துள்ள அருமையான நூலுணர்ச்சியும் ஆகிய இம்மூன்று செயல்களும் தூங்குகின்ற ஊமையானவன் கண்ட கனவைப் போலாகும் என்கிறது. மேலும், மேலாண்மைச் சிந்தனை யோடு விளங்குபவனிடம் ஆளுமைத்திறன் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

**"பத்திமை சான்ற படையும் பலர்தொகினும்**
**எத்துணையும் அஞ்சா எயிலரணும் - வைத்தமைந்த**
**எண்ணின் உளவா விழுநிதியும் இம்மூன்றும்**
**மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு"** *(திரிகடுகம் - 100)*

தன்மேல் அன்பு நிறைந்த சேனையும், பகைவர் பலர் கூடி எதிர்ப்பினும் நிலையான மதிலரணும், முற்றுப் பெறாத சிறப்புடைய பொருள் வைப்பும் இம்மூன்றும் பூமியை ஆளுகின்ற அரசர்க்கு உறுப்புக்களாம். அன்பு நிறைந்த சேனைகள், பாதுகாப்புமிக்க அரண், அழியாத சிறப்புக்கள் பொருந்திய பொருள் இவைமூன்றுமே அரசாள்பவனுக்கு மட்டுமல்ல ஒரு நிர்வாகத்தை நடத்துபவனுக்கும் முக்கிய உறுப்புகளாக அமைவன என்பதை நம் முன்னோரான நல்லாதனார் சுட்டிச் சென்றுள்ளார்.

## ஆசாரக் கோவையில் மேலாண்மைச் சிந்தனைகள்

சமுதாயத்தில் மக்கள் ஒழுங்குமுறையோடு வாழ வேண்டும் என்று கூறுவதுதான் ஆசாரக் கோவை.

"இறைவர்முன் செல்வமுங் கல்வியுந் தேசுங்
குணமுங் குலமுடையார் கூறார் பகைவர்போற்
பாரித்துப் பல்காற் பயின்று" (ஆசாரக்கோவை - 71)

என்ற பாடலில் ஒருவர் தம் கல்வி, செல்வம், பலம், குணம் முதலியவற்றை அரசாளும் மன்னன் முன்போ, அல்லது ஒரு நிர்வாகத்தை ஆளும் தலைவன் முன்போ, தற்பெருமையோடு எடுத்துக் கூறி அதனால் உண்டாகும் பகைமையை வளர்த்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்கிறது ஆசாரக் கோவை. தலைவன் முன்னால் பிதற்றிக் கொண்டிருந்தால் அழிவுக்குத் தான் வித்திடும். அடக்கமாக இருந்து சாதிக்க வேண்டும் என்று கூறுகின்றது.

**ஏலாதி காட்டும் மேலாண்மைச் சிந்தனைகள்**

ஏலத்தை ஆதியாகக் கொண்டு செய்யப்படும் மருந்துப் பொருளின் இனிமையை ஏலாதியின் பாடல்களில் காணலாம்.

"பொய்யான்பொய் மேவான் புலாலுண்ணான் யாவரையும்
வையான் வழிசீத்து வாலடிசில் - நையாதே
ஈத்துண்பா னாகும் இருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பான் ஏத்துண்பான் பாடு" (ஏலாதி - 44)

பொய் சொல்லாமலும், பிறர்பேசும் பொய்க்கு உடன்படாமலும், ஊனுண்ணாமலும், எவரையும் இகழாமலும், விருந்தினர் முதலியோர் வருந்தாமல் வழிதிருத்தித் தூய்மையான உணவைப் பகுத்துக் கொடுப்பவன், பெரிய கடல் சூழ்ந்த உலகத்துக்கு அரசனாகி ஐவகைப் புலன்களை நுகர்ந்து பெருமையும் புகழும் அடைவான். ஒருவன் நேர்மையாகவும் அறத்தொடும் வாழ்ந்தால் அரசனுக்கு நிகராக வாழ்வான் என்கிறது ஏலாதி. மற்றவர்கள் தன்னை மதித்து நடக்க வேண்டும், மற்றவர்களின் மனங்களில் தான் நிலைநிற்க வேண்டும் என்று கருதுபவன் மேற்கண்ட கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறது.

**பிற்கால நீதி நூல்களில் மேலாண்மைச் சிந்தனைகள்**

மன்னராட்சி நடந்த காலங்களில் அவர்களை நல்வழிப் படுத்திய புலவர்களில் ஔவையாருக்குப் பெரும்பங்குண்டு என்பதை அறிவோம்.

Scanned by TapScanner

ஒரு தலைவனானவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு நிறைய கருத்துக்களை எளிமையான சொற்களில் எடுத்துச் சொல்லியிருக்கும் பாங்கு சிறு குழந்தைகளையும் நல்வழிப்படுத்த உதவுகிறது எனலாம்.

**ஆத்திசூடி**

"ஊக்கமது கைவிடேல்"
"ஏற்பது இகழ்ச்சி"
"குயம்பட வுரை"
"அழகு அலாதன செய்யேல்"
"நாடொப்பன செய்"
"பீடு பெற நில்"
"மிகைபடச் சொல்லேல்"

போன்ற வரிகளில் ஒரு தலைவனாக, அனைவராலும் மதிக்கத்தக்கவனாக இருக்க விரும்புபவன் மேற்கண்ட வாக்கைக் கடைப்பிடித்தால் சிறப்படையலாம் என்கிறார் ஔவையார்.

**மூதுரை**

"அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா" (மூதுரை - 5)

விரிந்த உருவத்தால் நீளமான, மிக உயர்ந்த மரங்கள் எல்லாம் பழுக்க வேண்டிய காலத்தில் தான் பழுக்கும். அதுபோல் விடாது தொடர்ந்து முயற்சிசெய்தாலும் கூடிவர வேண்டிய நாள் அல்லாமல் நாம் தொடங்கிய காரியங்கள் கூடிவராது என்கிறார். ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவோர் அதைத் தகுந்த காலமறிந்து தொடங்க வேண்டும் என்கிறார் ஔவையார்.

இவ்வாறு அற இலக்கியங்கள் மனிதனின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதோடு நில்லாமல், மேன்மேலும் தன்னை உயர்த்திக் கொள்ளவும் உறுதுணையாக இருக்கின்றன என்பதை அனைவரும் அறிந்து அதன்வழி பின்பற்ற வேண்டும்.

❑

Scanned by TapScanner

# 7

# புதுக்கவிதைகளில் விழிப்புணர்வுச் சிந்தனைகள்

- முனைவர் பாரிஜாதம்

சமுதாயத்தைச் சொல்லில் வடிப்பதே இலக்கியங்கள் என்பார் டிபோனால்ட். சொல்லுக்குள் வாக்கியத்தைச் சுருக்கி வைத்து உணர்ச்சிப் பிழம்பாகக் கருத்துக்களை வெளியிடுவது புதுக்கவிதை. ஒவ்வொரு வரியும் அமிர்தத்தூவல். இன்றைய யதார்த்த நிலை அனைத்தும் புதுக்கவிதையின் பாடுபொருளாகின்றன. புதுக்கவிதையின் அடிநாதம் தனிமனிதனில் தொடங்கி சமுதாயத்தில் முடிவதுதான். தனிமனித அவலங்களையும் சமூகச் சிக்கல்களையும் கண்டு அவற்றிற்கான விடியலைத் தேடிக் கொடுக்கின்றன. தனிமனிதனின் ஆணவமும் அகந்தையும் கிள்ளியெறியப்பட்டு விட்டால் சமூகம் மேன்மை யடையும் என்ற சித்தாந்தத்தை வெளிப்படுத்துவது. வாழ்க்கைப் போராட்டங்களில் பல்வேறு வடிவங்களில் தங்களை உணர்வுப் பூர்வமாக இணைத்துக் கொண்ட மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டி எழுச்சியூட்டி நேர்பாதை காட்டுகின்றன புதுக்கவிதைகள். சுதந்திரப் பயிர் காக்கத் தோன்றிய பாரதியைப் போல மனிதப் பயிர்களைக் காக்கத் தோன்றின புதுக்கவிதைகள் எனலாம்.

## சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்

இன்றைய சிறுவர்கள் தான் வளர்ந்து வரும் உலகத்துக்கே வலதுகை. எனவே அவர்தம் மனதிலே தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும். சிறு வயதிலே தட்டி அடக்கி விடக்கூடாது. தளிர்கள் கருகினால் எப்படி மரமாகும்? 'இளம் மனதில் வலிமைதனை ஏற்றடா'

என்று பட்டுக்கோட்டை பாடியது போல ஊக்கத்தினை ஊட்ட வேண்டும்.

"உனது
சுத்தமான சுறுசுறுப்பையும்
சிலர்
சுட்டித் தனம் என்று
தட்டி அடக்கலாம்
ஓய்ந்து விடாதே
தூண்டாமலே எரியும்
சூரிய விளக்காய்ச் சுடர்விடுநீ
உன்
இரத்த ஓட்டம்
இந்த மண்ணுக்கு
இன்னும் சில கங்கைகளை இழுத்துவரட்டும்"

என்று கவிஞர் வைரமுத்து "ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்ற தலைப்பிலே சிறுவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

**தடைகளே படிக்கற்கள்**

வாழ்க்கையென்பது ஒரு போராட்டக் களம். கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதை. இந்தத் தடைகளையெல்லாம் தகர்த் தெறிய வேண்டும். தடைகள் தான் நமக்கு ஞானத்தைப் புகட்டும் போதி மரம். துயரமென்னும் தடைகளைத் தாங்கினால் தான் உயரங்களை எட்டிப் பிடிக்க முடியும்.

நூலிலே படித்த ஒரு கதை. ஒரு தவளை பள்ளத்திலே விழுந்து விட்டது, 'ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்' எனக் கூக்குரலிட்டது.

அவ்வழியாகச் சென்ற மான் அதை எட்டிப் பார்த்தது. தவளை கெஞ்சியது. மான் தன்னால் இறங்கி வர முடியாது என்று சொல்லி விட்டுப் போய்விட்டது.

அடுத்ததாக ஒரு பூனை வந்தது. அதனிடமும் அந்தத் தவளை கெஞ்சியது. அதுவும் உதவவில்லை.

இப்படிப் பலநாட்கள் கெஞ்சிப்பார்த்தது தவளை. ஒரு நாள் பள்ளத்திலிருந்து வெளியே குதித்து வந்து விட்டது.

Scanned by TapScanner

இதைப் பார்த்த மற்ற மிருகங்களுக்கெல்லாம் பெரிய ஆச்சரியம். 'எப்படி மேலே வந்தாய்?" என்றன.

ஒரு பாம்பு பள்ளத்தில் இறங்கி என்னை சாப்பிட வந்துச்சு. வேறு வழியில்லை. ஒரே தம்புடிச்சி மேலே தாவிட்டேன் என்றது தவளை

தடைகள் உணர்த்துவது இதுதான். இதனை 'வித்தியாசமான தாலாட்டு' என்னும் தலைப்பிலே ஆண் மகனுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

"உன் சாலையில்
மரங்கள்
பூக்களைப் பரப்பி வைக்கலாம்
ஆனால்
மனிதர்கள்
முட்களைப் பரப்பி வைக்கலாம்
நீ
பூவையும் எடுத்துக் கொள்
முள்ளையும் எடுத்துக் கொள்
அந்தப் பூவைச்
சட்டையில் குத்திக் கொள்ள
முள்ளைக்
குண்டூசியாக்கிக் கொள்"

பிறந்தால் மட்டும் போதாது. சாதிக்க வேண்டுமென்ற உணர்வை ஊட்டுகிறார் கவிஞர் வைரமுத்து. தடைகள் இல்லாமல் வெற்றி என்பது இல்லை.

**சமத்துவம்**

'குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பர். உண்மைதான். கள்ளங் கபடமற்ற குழந்தைகள் மனதில் தூவும் விதை தான் ஆலமரமாக வேர் விட்டுக் கிளைபரப்பும், எனவே கவிஞர் வைரமுத்து சமுதாயத்தைப் பாதிக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் கூட குழந்தைகள் மனதிலே போட்டு வைக்கிறார். சமுதாயத்தில் வர்க்க பேதம் தலை விரித்தாடுகின்றது. ஆண் உயர்வு, பெண் தாழ்வு என்ற நிலை ஆழமாக வேரூன்றி விட்டது. இதைத் தகர்த்தெறிய வேண்டும். ஆண் பெண் பேதமின்றி அனைவரும் சமம் என்ற நிலை உருவானால் தான் வீடும் நாடும் சிறக்கும். அமைதிபெருகும். தளிர்கள் தான் மரமாவது போல இன்றைய குழந்தைகள் தான் நாட்டின்

நாளைய தலைமுறை. எனவே, அவர்களைப் பார்த்து, கவிஞர் வைரமுத்து

"சமத்துவம்
இந்த மண்ணில்
ஆரம்பமாகட்டும்
குழந்தாய்
நெஞ்சில்
தேசபக்தியெனும்
தீ வளர்த்துக் கொள்
மானமிகு அறிவு
பேணு."

ஆண் பெண் பேதமின்றி நாட்டுப்பற்று அனைவர் உள்ளங்களிலும் ஊன்றித் திளைக்க வேண்டும் என்ற சிந்தனையைக் குழந்தைகளின் முன் வைக்கின்றார். அவர்களிடத்து தேசபக்தியென்பது தீ போலப் பரவ வேண்டும் என்கிறார்.

## இளைஞர்களின் வெற்றிக்கு வழிகாட்டல்

வெற்றிக்கு முதற்படி உழைப்பு. உழைப்பால் உயர்ந்தோர் பலர். சாதாரணமானவர்களெல்லாம் சரித்திரத்தின் நாயகர்களானார்கள். காரணம் உழைப்பு. 'உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்க முடியாது' என்பார் எமர்சன்.

உழைப்பின் மகத்துவத்தைக் கவிஞர் மேத்தாவும் இளைஞர் களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றார். நீ ஓயாமல் உழைத்துக்கொண்டே இருக்கவேண்டும். வெற்றித் தேவதை உன்னுடைய விலாசத்தை விசாரிக்கத் தொடங்கும் வரை நடந்து கொண்டேயிரு.

"பாதங்கள்
நடக்கத்
தயாராய் இருந்தால்
பாதைகள்
மறுப்புச் சொல்லப்
போவதில்லை
நெய்யாய் திரியாய்
நீயே மாறினால்
தோல்வியும் உனக்கொரு
தூண்டுகோலாகும்"

"விதை முளைக்க வேண்டுமாயின் அது உமியை இழந்து தான் ஆகவேண்டும். ஊர்ந்து செல்லும் புழுக்கள் பறக்க வேண்டுமானால் இறக்கையைச் சுமக்கச் சம்மதிக்க வேண்டும். நீ முன்னேறும் போது சில தியாகங்களைச் செய்து தான் ஆக வேண்டும். நிமிர்ந்தவன் வளைந்தாலே அவனுக்கு வாசல் வழி விடுகிறது" என்று சீனக் கவிஞர் மிங்க்ஷூவின் கருத்து இவண் நினைக்கற்பாலது.

ஒன்றை இழந்தால் தான் ஒன்றைப் பெற முடியும் என்ற கருத்து இளைஞர்களுக்கு எடுத்துரைக்கப் பெறுகிறது.

மேலும் வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும் இளைஞர்களுக்கு நம்பிக்கை தேவை என்பதை வலியுறுத்துகிறார் கவிஞர் பாவலன்.

**"இளைஞனே!**
**எச்சரிக்கை**
**உன் இடதுகை**
**நம்பிக்கை**
**இரண்டும் இயங்கினால்**
**சிறக்கும் உன்**
**வாழ்க்கை"**

திபெத்தியக் கதை ஒன்று உண்டு. ஒரு வயதான பெண்மணி இந்தியாவிற்கு வியாபரம் செய்யச் சென்ற ஒருவனிடம் ஒரு துறவியின் ஞாபகார்த்தமாக எதையாவது கொண்டுவர வேண்டுகோள் விடுத்தாள். அவளது மூடநம்பிக்கையை நினைத்து மனத்தில் சிரித்துக்கொண்டு வருகிற வழியில் இறந்து கிடந்த நாயின் தாடை எலும்பை பட்டுத் துணியால் மூடி அவளிடம் கொடுத்தான். அவளோ அதை முழு நம்பிக்கையோடு வணங்கினாள். நம்பிக்கை தான் வாழ்க்கை என்பதை உணர்த்துகிறது இந்தக் கதை. இராமகிருஷ்ண பரமஹம்சரும், 'அறிவு பலவீனமுடையது; நம்பிக்கை சர்வசக்தியுமுடையது. அந்த நம்பிக்கை முன்னர் இயற்கையின் சக்திகள் கூட ஒதுங்கி விடுகின்றன' என்கிறார்.

கவிஞர் மேத்தாவும்,

**"நம்பிக்கை**
**நார் மட்டும்**
**நம் கையில்**

Scanned by TapScanner

இருந்தால்
உதிர்ந்த மலர்களும்
தானாகவே வந்து
ஒட்டிக் கொள்ளும்
கழுத்து மாலையாகவும்
உன்னை வந்து
கட்டிக் கொள்ளும்"

என்பர்.

கவிஞர் வைரமுத்து 'வித்தியாசமான தாலாட்டு' என்னும் தலைப்பிலே இளைஞர்களுக்குப் புதியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். இந்தத் தாலாட்டு உறக்கத்திற்காக அல்ல; விழிப்பிற் காக. விழிப்பையே பாடுபொருளாய்க் கொண்டது. இளைஞர்களின் ஒவ்வொரு செயலும் இந்த சமூக முன்னேற்றத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

"நதிக்கரை ஓரத்து நகரம் - வெள்ளப் பெருக்கை எதிர்பார்த்து
விழிப்போடிருப்பது போல் - எப்போதும் விழிப்பாய் இரு!
உறங்கும்போதும் உன்மனக்கண்கள்-இமைத்துக் கொண்டிருக்கட்டும்
இந்தச் சமூகத்தின் வேர்களைக் கொஞ்சம் விசாரி!
மானுடத்தை உன் தோள்களில் சுற்றி உயர்த்து!
திசைகளின் நெற்றிகளுக்கு உன்பெயர் பொட்டாகட்டும்"

*(இன்னொரு தேசிய கீதம், ப.68)*

ஒவ்வொரு இளைஞனும் சமூக அக்கறையோடு செயல்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

உழைப்புக்குத் தயாராக இருப்பவர்கள் ஒருபோதும் தோற்ப தில்லை. இதை உணர்ந்தாலே போதும் வாழ்க்கை வசந்தமாகி விடும். ஆனால் இன்றைய இளைஞர்களில் பலர் இதைப் புரிந்து கொள்வ தில்லை. குறிக்கோளற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிறவிப்பயனை அறியாதவர்கள் இவர்கள். இத்தகு இலட்சியமற்ற இளைஞர்களை நோக்கி,

"வாழ்க்கையை வாழப்பார் - அல்லது
வாழ்க்கையை வார்க்கப்பார்
சுடும் வரைக்கும் நெருப்பு

சுற்றும் வரைக்கும் பூமி
போராடும் வரைக்கும் மனிதன் - நீ மனிதன்"

*(வைரமுத்து- இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, ப.95)*

உயிரோடு இருப்பது வாழ்க்கையல்ல; உயிர்ப்போடு இருப்பது தான் வாழ்க்கை என்ற தத்துவத்தை உணரவைக்கிறார் கவிஞர். "எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள். இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும், எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கின்றது" என்ற விவேகானந்தரின் எழுச்சிமிகு சிந்தனை இவண் நினைக்கற்பாலது.

**மது பற்றிய விழிப்புணர்வு**

இன்றைய இளைய சமுதாயம் அறிவில் மனதைச் செலுத்தாது மதுவில் மயங்கி வாழ்வைச் சீரழித்து விடுகிறது. இத்தீய பழக்கம் அவர்தம் மதிப்பை இழக்கச் செய்யும். மதுஅருந்தியவனைக் கண்டால் ஈன்ற தாயின் முகமே வெறுப்படையும். மதுவுண்டு மயங்கியவன் செத்தவனாகவே கருதப்படுவான். பிறரின் எள்ளலுக்கு ஆளாவான். தனது பொருளைக் கொடுத்து மதுவாங்கி மயங்குவது அவனது அறியாமையேயாகும்.

"கைஅறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்அறி யாமை கொளல்"
*(குறள் 925)*

என்பார் வள்ளுவர்.

எண்ணத்தையே அழிக்கும் மதுவினைத் தூக்கி எறி என்று இளைய வாலிப உள்ளங்களுக்குக் கவிஞர் மேத்தா விழிப்புணர்ச்சி யூட்டுகிறார்.

"கிண்ணத்தைத் தூக்கி எறி - மதுக்
கிண்ணத்தைத் தூக்கி எறி
எண்ணத்தை விறகாக்கி
இதயத்தைக் கரியாக்கும் - மதுக்
கிண்ணத்தைத் தூக்கி எறி"

இங்ஙனம் மதுவினால் ஏற்படும் தீமையைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். தமிழன்பனின்,

"புகை பிடித்தால் இறப்பாய்
மது குடித்தால் இறப்பாய் இரண்டும்
விட்டால் வாழ்வில் சிறப்பாய்"

Scanned by TapScanner

என்ற வரிகள் உண்மையை உணர்த்துவதுடன் யதார்த்தத்தையும் புரிய வைக்கின்றன. மது, புகை இரண்டும் கூற்றுவனுக்குத் துணை நிற்பன. இதைத் தீண்டினால் கூற்றுவன் விரைவில் வந்து உன்னைத் தீண்டுவான் என்று புகை, மதுப்பழக்கம் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறார்.

## பெண்கள்

இல்லறம் நல்லறமாக மங்கல விளக்காகத் திகழ்பவள் பெண். பெண்கள் இந்நாட்டின் கண்கள் என்றார் பாரதியார். 'மங்கையராகப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா! என்று கூறினார் கவிமணி. 'பெண்ணின் முகம் எனது புத்தகம்' என்றார் கவிஞர் பைரன். 'நாணலை ஒத்தவர்கள் பெண்கள். சிறுகாற்று பட்டாலும் அசைந்து கொடுப்பார்கள். ஆனால் புயல் வீசினாலும் ஒடிய மாட்டார்கள் என்று கூறியுள்ளார் வாலி. மிகுந்த பொறுமையுடன் எதையும் தாங்கும் சக்தி படைத்தவர்களாக இருப்பதனால் தான் பெண்ணை சக்தி என்கின்றனர் போலும்.

'பெண்ணின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றம்' என்றார் அறிஞர் அண்ணா. இவ்வாறு அறிஞர் பலராலும் போற்றப்படுவது ஒருபுறமிருக்க, மற்றொரு புறமோ விலங்கிடப்பட்ட கைதிகளைப் போலவும் வாய்ப்பூட்டுப் போடப்பட்ட பொம்மைகளைப் போலவும் அடங்கியிருக்கும் அவலம். எவ்வளவு தான் படித்துப் பட்டம் பெற்றுச் சமூக அந்தஸ்துப் பெற்றாலும், இல்லத்தில் அவளது வாழ்க்கை ஒரு கேள்விக்குறிதான். பாம்பின்கால் பாம்பறியும் என்பது போல் பெண்ணின் நிலை உணர்ந்த பெண்படைப்பாளர்கள் தம்படைப்பில் அவர்கள் தம் இதயத்தில் விழிப்புணர்வுச் சிந்தனைகளைத் தூவி அதனை முளைத்தெழச் செய்கிறார்கள்.

**"மலையாய் நிமிர்ந்து நில்**  
**உன்னை அழிக்க அஞ்சுவர்**  
**புயலாய் எழுந்து நில்**  
**உன்னை நெருங்க நடுங்குவர்**  
**மின்சாரமாய்த் தாக்கிடு - உனை**  
**மிதித்திட மிரளுவர்**  
**தீயாய்த் தகித்திடு - உன்னைத்**  
**தீண்டிடத் தயங்குவர்"**

*(மரிய தெரசா, நிழல் தேடும் மரங்கள், ப. 37)*

குழந்தைகள் தம் வளர்ப்பிலே பெற்றோர்கள் செய்யும் தவறுதான் பெண்ணடிமைக்கு முதற் காரணம். சாண் பிள்ளையானாலும்

Scanned by TapScanner

ஆண்பிள்ளை என்றும் தொப்பையில் இருந்தாலும் தங்கம்/குப்பையில் இருந்தாலும் தங்கம் என்றெல்லாம் சொல்லி அவர்களை வானளாவ உயர்த்துவதும், பெண் குழந்தைகளை ஆண்களுக்கு அடங்கியே நடக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அவர்கள் மூளையை மழுங்கடித்து விடுகிறார்கள். பெண்ணுக்கென்று சில இலக்கண வரம்புகளை வேறு, விதித்து விடுகிறார்கள். அந்தப் புதைகுழியிலிருந்து அவளால் மீண்டெழ முடியவில்லை. மீண்டெழுந்து விட்டால் அவளுக்குப் பட்டப்பெயர்கள் சூட்டப்படுகின்றன. இத்தகு சூழலில் அரைக்க அரைக்க அம்மியும் நகரும் என்பது போலத் திரும்பத் திரும்ப மீட்சி பெறும் எண்ணங்களை அவர்களுக்குள்ளே வளர்த்து இன்று பாரதி காட்டிய புதுமைப் பெண்ணாய், சிற்பியாய் உருவாக்கி வருகிறார்கள் பெண்படைப்பாளர்கள். அவர்கள் மட்டுமின்றி ஆண் படைப்பாளர்களும் அப்பணியைச் செய்ய முன் வந்துவிட்டனர். பெண் அஞ்சி அஞ்சி வாழும் வரை ஆடவர் தம் அதிகாரச் செருக்கு உயர்ந்து கொண்டேதான் செல்லும்.

ஒரு முறை விவேகானந்தர் மலையின்மீது ஏறிக் கொண்டிருந்தார். பின்னால் குரங்குகள் அவரைத் துரத்திக் கொண்டு சென்றன. அவரும் அஞ்சி ஓடினார். பின்னாலிருந்து ஒருகுரல், 'ஓடாதே! எதிர்த்து நில்' என்றது. விவேகானந்தரும் துணிந்து நின்றார். குரங்குகள் பின்வாங்கின. அதைப்போல் எதையும் துணிவுடன் எதிர் கொள்ளும்போது கயவர் கூட்டம் பெண்களை அண்டக்கூட நடுங்கும். எனவே, மலையாய், புயலாய், தீயாய், மின்சாரமாய் மாறிவிடு என்று அவர்களை விழித்தெழச் செய்கிறார் மரியதெரசா.

பெண்கள் மண்ணாய் பொறுமையாய் இருந்து விட்டால் மிதித்து அலட்சியம் செய்வர். கனியாய் இருந்துவிட்டால் சுவைத்து மறந்துவிட்டு வீசி விடுவர். நிலவாய் ஒளி வீசினால் அமாவாசை இருளில் வீழ்த்துவர். விளக்காய் எரிந்தால் அணைத்து இன்பம் தேடுவர். எனவே பெண்ணே புயலாய்ப் புறப்படு என்று அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

புடைவையிலும் நகையிலும் திருப்திப்பட்டு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு அவளது நிலையை எடுத்துச் சொல்லி அவளுக்கு விழிப்புணர்வூட்ட முயல்கிறார் கவிஞர் பொன்மணி வைரமுத்து.

Scanned by TapScanner

"தன்னைத்தான் விலங்கிட்டு
அழிகின்ற
உன்னைத்தான் உலகம்
பேதை என்று சொல்லி
உதட்டுக்குள் சிரிக்கிறது
ஒதுங்காதே
தட்டிக்கேள்
அதற்குன்னைத்
தகுதிப் படுத்திக் கொள்"

*(பொன்மணி வைரமுத்து கவிதைகள், ப.49)*

தனக்குத்தானே விலங்கிட்டுக்கொண்டு, எல்லாம் விதி என்றெண்ணிக் கிடைத்தது போதும் என்ற திருப்தியோடு வாழ்கின்ற நிலை. ஏன் எதற்காக இவ்வாறு தன்னையே அழித்துக் கொள்ள வேண்டும்? ஒதுங்கி நில்லாதே; தீமைகளைக் கண்டு அஞ்சாது எதிர்த்துப் பேசக் கற்றுக் கொள், என்று அறிவுரை சொல்லி அவளை விழித்தெழ வைக்கிறார்.

ஒவ்வொருவரும் தன்மனத்திற்காகத் தான் வாழவேண்டுமே யொழிய பிறர் சொல்லும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் அஞ்சி வாழ்தல் கூடாது. இந்த உலகம் வாழ்ந்தாலும் ஏசும்; தாழ்ந்தாலும் ஏசும்; அதைக் கருத்தில் கொள்ளுதல் கூடாது. பெண்களே பெண்களுக்குப் பட்டம் கொடுக்கும் பல்கலைக்கழகங்கள்.

"ஆமாம்
நீ பேசினால் ‘வாயாடி’
பேசாவிட்டால் ‘பிகுக்காரி’
சிரித்தால் ‘சிங்காரி’
சிரிக்காவிட்டால் ‘சிடுமூஞ்சி’
ஏசினால் ‘எரிந்து விழுபவள்’
அழுதால் ‘சாகசக்காரி’
அழாவிட்டால் ‘அழுத்தக்காரி’
போதும் பெண்ணே போதும்
உன் இனத்திற்காக
வாழ்ந்தது போதும் - இனி
உன் மனத்திற்காக மட்டுமே வாழ்!"

என்றொரு புதுக்கவிதை, பெண்கள் பெண்களுக்குப் பட்டம் கொடுத்து மட்டம் தட்டுவதைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆண் படைப்பாளர்களுள்ளும் கவிஞர் வைரமுத்து பெண்ணினத்துக்காகக் குரல் கொடுப்பவர். கற்பொன்றில் மட்டும் கண்ணகியைப் போல் இருங்கள் மற்றவற்றில் அந்த மடமைகளை மறந்து விடுமாறு கூறுகிறார்.

"இப்போதும் அவளைப் போல் ஏமாந்து நின்றிருந்தால்
முப்போதும் கண்ணீரில் மோனநிலை கொண்டிருந்தால்
கடலுள் விழுந்த சிறு கடுகாகிப் போவீர்கள்
இடருள் சிக்குண்டே எருக்கம்பூ ஆவீர்கள்
கருவுடைந்த முட்டையெனக் கலங்கித் தவிப்பீர்கள்
வருத்தத்தில் தானுங்கள் வாழ்நாளைக் கழிப்பீர்கள்.
சுகப்படமாட்டீர்கள்; சூறைக்காற்றுக்குள்
அகப்பட்ட பஞ்சினைப் போல் அலைந்தே அழிவீர்கள்"

(வைரமுத்து, வைகறை மேகங்கள்)

மடமைத் தீயைக் கொளுத்தி விடுங்கள். இருளைக் கிழித் தெறியுங்கள் ஒளி விளக்காகத் திகழுங்கள். வாழ்வைப் புரிந்து எச்சரிக்கையோடு நடத்திடுங்கள். சாதுவாக இருந்தால் வாழ்க்கை சாத்தியப்படாது. கற்ற அறிவைப் பயன்படுத்த வேண்டும். திரியைத் தீண்டிக் கொண்டேயிருந்தால் தான் சுடர்விடும். அது போல அறிவுத்திரியைத் தீண்டிக் கொண்டிருக்க வேண்டும். கோவலனைப் போன்றவர்கள் பலர் இருப்பர். மாதவியரும் பலருண்டு. நீ தான் கவனமாக இருத்தல் வேண்டும். விட்ட பின்பு பற்றுவது என்பது கடினம். எனவே வாழ்வின் தொடக்கத்திலே எச்சரிக்கையோடு இருப்பது நலம் எனத் துன்பமற்ற வாழ்வுக்கு வழிசொல்கிறார் கவிஞர்.

பெண் என்றாலே பொறுமைதான். இல்லை, அதற்காகக் கொடுமைகள் அனைத்தையுமா பொறுமையுடன் ஏற்றுக் கொள்வது? மனித உயிரா? இல்லை, இயந்திரப் பொம்மையா?

"பெட்டிப் பாம்பாகப் பேசா திருந்ததுதான்
கட்டழகே நீ செய்த கடுங்குற்றம் முதற்குற்றம்"

என்கிறார் கவிஞர் வைரமுத்து. பெண்ணே! ஆழ்கடலைப் போல நீ அமைதியாகி விட்டால் நசுக்கப்பட்டு விடுவாய், சீறியெழுந்துவா? என்று பெண்ணுக்குப் புத்துணர்வை அளிக்கிறார்.

இன்று சமுதாயத்தில் கன்னியர் பலர் முதிர்கன்னியாகவே இருப்பதற்கு 'வரதட்சணை' என்னும் ஆசைப் பேயே காரணமாகும். இந்த வரதட்சணை வில்லை ஒடிப்பது யார்? என்ற கேள்விக்குறி? இன்னும் இராமர்களுக்கு இரத்தமில்லை. பொருள்களின் விலைவாசி ஏற்றம் போல் மாப்பிள்ளைகளுக்கும் ஏற்றம். பெண்ணின் தந்தையோ பாவம், சாய்வு நாற்காலியில் . அதனால் பெண்களே பிறரை நம்பி இந்த வில்லை ஒரு நாளும் ஒடித்தல் இயலாது.

"இனி
நாமே ஒடிப்பதே
நியாயம்
எங்கே
சீதைகளே கொஞ்சம்
சேருங்களேன்"

இந்த வரதட்சணை வில்லை ஒடிப்பது பெண்களின் கையில்தான் உள்ளது. ஒற்றுமையோடு அணிதிரண்டால் நிச்சயமாக வரதட்சணை வில்லை ஒடித்து விடலாம் என்ற நம்பிக்கையை யூட்டுகிறார்.

## அரசியல் விழிப்புணர்வு

நாட்டின் முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுக்க வேண்டி தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் இன்று சட்டமன்றங்களிலும் பாராளுமன்றங்களிலும் பந்து எறியும் போட்டியைப் போன்று செருப்பு வீசும் போட்டியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'கோயில் செய்குவோம்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் கவிஞர் வைரமுத்து இதனை எள்ளி நகையாடுகிறார்.

'இன்னும் கொஞ்சம் நாளில்
அத்தனை சட்டசபைகளும்
ஆலயங்கள் ஆகலாம்!
அங்கும்
செருப்போடு நுழைவது
தடை செய்யப்படலாம்'

- (இன்னொரு தேசியகீதம், ப.49)

கடவுளின் சன்னிதானத்துக்கு முன் செருப்பணிந்து செல்லுதல் கூடாது என்பர். ஆனால் இன்றைய அரசியல்வாதிகளின் போக்கினைப் பார்த்தால் இனிமேல் சட்டமன்றங்களுக்குக் கூட யாரும் செருப் பணிந்து வரக்கூடாது என்று சொல்லும் நிலை வந்தாலும் வரலாம்

என்கிறார். ஜனநாயகத்தால் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகளின் செயலைச் சுட்டிக் காட்டி இனியாவது யாருக்கு ஓட்டுப்போடுவது என்று நீங்கள் சிந்தியுங்கள் என்ற சிந்தனைக் கனலை அவர்களுக்கு ஏற்படுத்துகிறார். மக்கள் விழிப்போடு செயல்படாமையே இத்தகு அவலங்களுக்குக் காரணம் எனலாம்.

தேர்தல் முறை மாறினாலும் ஜனநாயகம் மட்டும் மாறாமலே இருக்கிறது. அதனால்தான் அரசியல் வாதிகள் கட்சி மாறிகளாக மாறிவிட்டனர்.

"எங்கள் ஊர் எம்.எல்.ஏ
ஏழு மாதத்தில்
எட்டுத்தடவை
கட்சி மாறினார்" -*(மீரா, ஊசிகள்)*

என்ற மீராவின் வரிகள் மக்கள் சிந்தனைக்கு விடப்பட்டதாக அமைகின்றன.

### அறிவியல் விழிப்புணர்வு

மேல்நாடுகளில் அறிவியல் வளர்ச்சி அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் நம் மக்கள் அறிவியல் என்ற சொல்லையே இப்பொழுது தான் கண்டறிந்திருக்கிறார்கள். முடங்கிக் கிடக்காதே! விரைவில் முன்னேற வழிபார்! முயன்றால்தான் முன்னேற முடியும்.

"மூச்சு விட்டுக் கொண்டிருப்பவன் எல்லாம்
மனிதன் இல்லை
முயற்சி செய்து கொண்டிருப்பவன்
மட்டும்தான் மனிதன்!

*(பா.விஜய்யின் சிந்தனைச் சிறகுகள்)*

என்பார் பா.விஜய். எனவே விழிப்புணர்வு கொள் என்று தமிழனுக்கு மேல்நாட்டு நிலைகூறி அவனுள் மூழ்கிக் கிடக்கும் ஆற்றலைத் தட்டி எழுப்புகிறார்.

"புதுமை கொள் தமிழா
புழுதி கழுவு
உலக நீரோட்டத்தில்
கரைந்து விடாமல்
கலக்கப் பழகு
மேற்கே விஞ்ஞானம்

Scanned by TapScanner

பொருள் கண்டறிந்தது
போன நூற்றாண்டு
அதற்கு நீ
சொல் கண்டறிந்தது
இந்த நூற்றாண்டு
சொல்!
என்று நீ
சொல்லை விடுத்துப்
பொருள் கண்டறிவாய்.
அறி
அன்றுதான் நீ
அறியப்படுவாய்"

என்று மிகவும் பின்தங்கியிருக்கும் தம் இனத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி, அதற்கு வழியும் கூறி அவர்தம் உள்ளத்திலே உத்வேகத்தையும் ஊட்டுகிறார் கவிஞர் வைரமுத்து.

## சாதி சமய விழிப்புணர்வு

இன்று சமூகத்தில் ஆழமாக வேரூன்றி இருப்பவை சாதியும் சமயமும் தான். இவற்றை அகழ்ந்து எடுத்தல் வேண்டும். அப்போது தான் இனக்கலவரங்களும் மதக்கலவரங்களும் அழியும். இந்தப் பேதங்களால் மனித நேயமே மரித்து விட்டது. வீட்டிலும் சாதி, தெருவிலும் சாதி, பெயரிலும் சாதி. தங்களைத் தாங்களே பேதப்படுத்திக் கொள்கிறோம். எனவே நகத்தை வெட்டுவது போல சாதியை வெட்டி எறிய வேண்டுமென்கிறார் வாலி.

"நகம் வளர்ந்தால் வெட்டி
விடுகிறோம் அல்லவா?
சாதியையும் வெட்டிவிடு
பெயருக்குப் பின்னால் இருக்கும்
சாதியையும் வெட்டிவிடு
உன்முகத்தில் கரியைப் பூச சம்மதிப்பாயா?
சாதி முலாம் பூசாதே
உன் பெயரிலும் சாதிமுலாம் பூசாதே"

சாதியைத் தம் பெயருக்குப் பின்னால் இணைப்பது முகத்தில் கரியைப் பூசுவது போல என்று சொல்லி மக்களிடத்தில் சாதிப்பேயை ஒழிக்க வேண்டுமென்ற எழுச்சியையூட்டுகிறார்.

சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் இந்த தேசத்தைத் துண்டாட நினைக்கின்ற சுயநலவாதிகள் பலர். அவர்களை இனங்கண்டறிந்து அவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்குமாறு வேண்டுகிறார் மேத்தா.

"சாதியின் பெயராலும்
சமயத்தின் பெயராலும்
அமைதியான வாழ்விற்கு
சமாதி கட்ட நினைக்கிற
வகுப்பு வாத சக்திகளுக்கும்
தேசத்தைத் துண்டாட நினைக்கிற
தீய சக்திகளுக்கும் எதிராக
துணிந்து எழு - தோள்கொடு
கொடுமையை எதிர்த்துநில்."

கொடுமையை எதிர்க்கத் துணிந்தால் தான் அதற்கு முற்றுப் புள்ளி வைக்க இயலும் என்பது கவிஞரின் எண்ணம்.

கவிஞர் வைரமுத்து சாதித்தீயை அணைக்க வழி வகுத்துக் காட்டுகிறார். கல்விதான் அதற்கு விடிவெள்ளி என்று பெரியோர் சொல்லிப்போந்தனர். கவிஞர் வைரமுத்துவும் அதை எடுத்துச் சொல்லி, படித்தால் மட்டும் போதுமா? அதன் வழியில் நிற்க வேண்டாமா? வள்ளுவன் கூட,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் 391)

என்று சொல்கின்றானே! இன்னுமா நீங்கள் திருந்தவில்லை என்று கேள்விக்கணையைத் தொடுத்து மக்களைச் சிந்திக்க வைக்கின்றார்.

"இந்த தேசத்தில்
அடுப்புகளுக்கே இன்னும்
நெருப்பு வந்து சேரவில்லை
அதற்குள் கூரைக்கா? *(ஜாதி, 1989)*

இன்று பள்ளி செல்லும் சிறுவர்கள் கூட சாதிவெறியினால் கத்திகளைத் தூக்கிக் கொண்டு அலைகின்றனர். இளம் மொட்டுக்களைக் கருக வைக்கின்றனரே என்று வேதனைக் குரல் எழுப்புகிறார்.

"புத்தகம் ஈந்து கல்விச்சாலை
போக்கும் சிறுவர்களைக் - கையில்

Scanned by TapScanner

கத்திகள் தந்து ஜாதிக் களத்தில்
கருகச் செய்வீரோ"

*(தீ அணையட்டும் 1998)*

சாதியென்னும் தீ சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் களத்தில் இறக்கி அமைதியைக் குலைத்துவிடுகிறது.

**வன்முறை**

விலங்குகள், பறவைகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டு உயிர்க்கொலை செய்ததில்லை, மனிதனைத் தவிர!

"ஆடுகளை ஆடுகள்
அடித்துக் கொன்றதில்லை
மாடுமுட்டி மாடு
மரித்ததென்று செய்தியில்லை
கோழியொன்று மிதித்ததால்
கொலையுண்ட கோழியில்லை
மனிதர்கள் மட்டுமே
மனிதர்களை

*(ஏர்வாடி.எஸ்.இராதாகிருஷ்ணன், மின்னல் கவிதைகள்)*

இவ்வரிகள் ஒவ்வொருவரையும் ஆழமாகச் சிந்திக்க வைக்கின்ற வைரவரிகள். இறைவன் படைப்பில் அனைவரும் சமம். இதைப் புரிந்து கொண்டால் போதும். வன்முறைக் காட்சிக்கு அரங்கேற்றம் ஏது? ஐந்தறிவு படைத்த மிருகங்களைப் பார்த்தாவது மனிதன் திருந்த வேண்டும் என்ற எண்ண அலையை மனிதனின் மனக்கோட்டைக் குள்ளே செலுத்தி அவனை உணர வைக்கிறார் கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்.

**கண்தானம்**

தானத்தில் சிறந்தது கண்தானம். விழியில்லார் புறக்கண்களால் உலகைக் காணுதல் இயலாது. பிறந்து விட்டால் இறப்பு என்பது உறுதி. இறப்பிற்குப் பின் மனித உடல்களால் பயனுண்டோ? விலங்குகளில் யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்பர். பிற விலங்குகளின் தோல், கொம்பு, கொழுப்பைக் கொண்டு காலணி, கலைப் பொருட்கள், சோப்பு முதலியவற்றைச் செய்ய இயலும். ஆனால் மனிதன் இறப்பிற்குப் பின் பயனற்றவனாகி

விடுகிறான். இறந்ததுமே அவன் கண்களை எடுத்து விழியிழந்தோர்க்குப் பொருத்தினால் அவர்களும் பார்வை பெறுவர். இவனும் கண்களால் உலகைப் பார்த்துக் கொண்டிருப்பான். தானத்திலும் சிறந்தது கண் தானம் என்பதை கவிஞர் வைரமுத்து பின்வருமாறு சுட்டுவர்.

மரணம்
உங்களுக்குத்தான்
உங்கள்
கண்களுக்கல்ல!
பிறருக்குக்
கண்ணாடியாய் இருப்பதே
பெருமைக்குரியது
நீங்கள் ஏன்
கண்ணாகவே இருங்களேன்.
--
இந்த உலகை
எத்தனை காலம் நீங்கள்
பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.
இறந்தபின் கண்களை
இரவல் தாருங்களேன்
நானும் பார்த்து
நனைகிறேன்
செத்தும் கொடுத்தவன்
சீதக்காதி மட்டும்தானா?
உங்களுக்கும் அந்த
கௌரவம் தருமே
கண் தானம்!

என்று கண்தானத்தின் பயனை எடுத்தியம்பி மக்களுக்கு கண்தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

## பொதுவுடைமை

இயற்கையின் மூலம் பொதுவுடைமைச் சிந்தனைகளைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்துகிறார் கவிஞர் வைரமுத்து. 'வானம்' பற்றிய கவிதையில்,

"குனிந்து குனிந்து
கூன் விழுந்த மனிதா!
வான் பார்க்க நிமிர்
வானம் முழுக்க
உனக்கு
நீ ஏன்
வரப்புக்குப் போராடுகிறாய்?"

என்ற வரிகள் தொழிலாளர்களின் நிலையைச் சுட்டி, அவர்களுக்கு ஒரு புத்துணர்வை ஏற்படுத்துவது போல் அமைகிறது. குனிந்தே பழக்கப் பட்டவனுக்குத் திடீரென நிமிர முடியவில்லை. அதனால் குனிந்து கொண்டே செல்லாதே, உன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பார். இந்த வானம், பூ, எல்லாம் உனக்கு. பிறகு எதற்குப் போராடுகிறாய் என்று கேள்விகேட்டு அவனைச் சிந்திக்க வைக்கிறார்.

இன்று சமுதாயத்தில் புரையோடியிருக்கின்ற சமூகச் சீரழிவி லிருந்து மனிதர்களைக் காக்க அக்னிக் குஞ்சுகளாகப் புறப்பட்டு விட்டன புதுக்கவிதைகள். பல்வேறு வகைகளில் விழிப்புணர்வை ஊட்டி மனிதம் காக்கப் பாடுபடுகின்றன புதுக்கவிதைகள் என்றால் மிகையன்று.

❑

# 8

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மதிப்புக்கல்வி

-முனைவர் இரா.காமராசு

கல்வி மனித சமூக உருவாக்கத்தின் அடிப்படைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. மனித நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், மனித குலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குவது கல்வியே ஆகும். உலகத்தின் தொன்மையான மொழிகளில் ஒன்றாக, உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது தமிழ். வரலாற்றுத் தொடக்கம் முதலே தமிழ் நிலத்தில் கல்வியும், கலைகளும், இலக்கியங் களும் செழித்து வளர்ந்திருப்பதைப் பல ஆய்வுகள் மெய்ப்பித்திருக்கின்றன.

அரசர், பெண்டிர், பல்தொழில் செய்வோர் உட்பட ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட புலவர்கள் வாழ்ந்ததும், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகளாக விளங்குகின்றன. மரத்தடி, ஆசிரியரின் வீடு, ஊர்ப் பொதுவிடங்களில் பள்ளிகள் இருந்திருக்கக் கூடும். மதுரைக் கணக்காயர், மதுரைப் பாலாசிரியர், பேராசிரியர் போன்ற சங்க இலக்கியப் பயில் சொற்கள் 'ஆசிரியர்' என்ற இன்றைய பொருண்மையைச் சுட்டி நிற்கக் கூடியவை. அது மட்டுமல்லாமல், அடிப்படைக் கல்வியறிவு இன்றி இத்துணைப் பெரிய எண்ணிக்கையிலான புலவர் கூட்டமும் இருந்திருக்க முடியாது. பேரிலக்கியங்களும் எழுந்திருக்க முடியாது.

**உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே...**
**......................**
**......................**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே** *(புறம்... 183)*

Scanned by TapScanner

என்ற புறநானூற்றுப்பாடல், ஆசிரியர் மாணவரிடம் கல்வி கற்கும் நிலையினையும், கல்வி கற்பதன் சமூக மதிப்பினையும் சுட்டி நிற்கின்றது.

**ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே...** *(புறம்... 312)*

என்னும் பாடல் பிள்ளையைச் சான்றோனாக்கும் தன்மை பெற்றோரில் தந்தைக்கு உரியது எனச் செப்பினாலும் கல்வி தருவதைப் பெற்றோரின் அடிப்படைக் கடமையாகக் கட்டமைக்கின்றது.

கல்வியின் தொடக்க நிலை எண்ணும், எழுத்தும், கற்றலும், கற்பித்தலும் எனக் கொண்டால் அதன் வளர்ச்சி நிலையாகக் கல்வி வாயிலாகப் பெறப்படும் பயன்பாட்டினைக் கொள்ளலாம். கல்வி என்பதற்குப் பலவித விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. ஒருவனின் நடத்தை மாற்றத்தை உருவாக்கும் ஒன்றாகக் கல்வியை உளவியலாளர் குறிப்பிடுவர். மனிதரை மனிதராக்கும் முயற்சி கல்வியின் பண்பும் பயனுமாக அமைகின்றது.

"நாம் எதைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம், நமது கல்வி சமுதாயத்திலிருந்து முழுக்க முழுக்க விலகியிருக்கின்ற கல்வி அமைப்பாகும். இந்தக் கல்விக்கும், சுற்றிலும் உள்ள சமுதாயத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கல்வி கற்றுக் கொண்டவர்கள் இந்தச் சமுதாயத்திலிருந்து வேருடன் பிடுங்கிக் கொள்கின்ற கல்வியைத்தான் நாம் இதுவரை கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம்." (2005: 16) என்கிறார் கல்வியாளர் வே.வசந்திதேவி. இது இன்றைய கல்வி முறையின் சிக்கலை முன் வைக்கிறது.

கல்வி என்பது வேலைவாய்ப்போடு தொடர்புடைய ஒன்றாகவும், கல்வி என்பதே வேலை பெறுவதற்கான நுழைவுச் சீட்டாகவும் மாறிவிட்ட நிலைமையில் கல்வியில் மனித மதிப்புகளை (Human Values) வலியுறுத்த வேண்டிய சூழல் உருவாகி விட்டது.

மனிதனை ஒரு சமூக உயிரியாகவும், சமூகத்தில் மனிதனை ஒரு அலகாகவும் கொண்டால் சமுதாய உடன் விளைவுகளுக்கு மனிதன் பொறுப்பாளியாகின்றான். மனிதனின் பண்பு சார்ந்த அறநெறி வளர்ச்சிக்குக் கல்வி அடிப்படையாகின்றது. எனவே கல்வியில் அறநெறிகளை வலியுறுத்துவது மற்றும் கல்வியின் ஆகச் சிறந்த நோக்கமாக மனிதப் பண்பியலை வலியுறுத்துவது இன்று மதிப்புக் கல்வி (Values in Education) என அழைக்கப்படுகிறது.

"மனிதனின் ஏற்கனவே உள்ள நிறை நிலையை வெளிப்படுத்துவதே கல்வி" என்பார் விவேகானந்தர் (2005: 24)

Scanned by TapScanner

"மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழிற்படச் செய்வதே அறிவுக்கு உண்மையான அபிவிருத்தி என்பது என் கருத்து. அறிவும் உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும் போது, இதயத் தத்துவமும் விழிப்படைய வேண்டுமென்பது அவசியமாகும். அவ்விதமின்றி, உள்ளமும் உடலும் வளர்ச்சி பெற்று, உணர்ச்சித் தத்துவம் விழிப்பு அடையாவிட்டால் அது கிரமமான வளர்ச்சியாகாது. வெறுங்கோணலாகவே போய்விடும். உணர்ச்சி தத்துவத்துக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது இதயத்தைப் பயன்படுத்துவதென்னும் கருத்துப்படவே நான் சொல்கிறேன்" (2005: 19) என இதயம் சார்ந்த மதிப்புக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துவார் மகாத்மா காந்தி.

தமிழில் சங்க காலம் தொட்டுக் கல்வி குறித்த வரையறைகளில் மனித மாண்புகளுக்கான இடம் தூக்கலாகவே காணப்படுகின்றது. இன்று 'மதிப்புக் கல்வி' என்பது அனைவராலும் பின்பற்றவும் கொண்டாடப் படவுமான சூழலில், அறநெறிகளை வலியுறுத்திய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணலாகும் மதிப்புக் கல்வி குறித்த சிந்தனைகளை இங்குக் காணலாம்.

கல்வியின் இன்றியமையாமையைப் பல நூல்கள் வலியுறுத்துகின்றன. கல்வியின் தேவை, சிறப்பு, கல்வி கற்காததால் விளையும் தீங்கு ஆகியனவற்றைப் பல பாடல்கள் சுட்டுகின்றன.

**ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்**
**பேணொடும் எண்ணும் எழுத்திவை மாணொடு**
**கேட்டெழுதி ஓதிவாழ் வார்க்கு ஈய்ந்தார் இம்மையான்**
**வேட்டெழுத வாழ்வார் விரிந்து.** *(ஏலாதி - 63)*

சிறந்த நற்குணங்களுடன் எண்ணும் எழுத்தையும் ஆசிரியரிடம் பாடம் கேட்டு ஏட்டிலே எழுதியும் படித்தும் வாழும் மாணவர்க்கு, உணவுடன் உடையும் எழுத்தாணியும் சுவடியும் தம் முந்தைய பிறவியில் கொடுத்தவர்- இந்தப் பிறவியில் புலவர்தன்வரலாற்றை விரும்பி எழுதும் வாழ்வு பெற்றவராக விளங்குவார் என்னும் பொருள் தரும் இச்செய்யுள் 'சிறந்த நற்குணங்களை' கல்விக்கு, முன் நிபந்தனையாக்குகிறது.

கற்க வேண்டியவற்றைக் கல்லாதவர்க்கு நட்பாகி ஒழுகுதலும், மனத்தூய்மை மிக்க மனைவியைக் கோலால் அடித்தலும், ஒழுக்கக் குறைவானவரை தமது இல்லத்துக்கு அழைத்துச் செல்லுதலும் அறியாமையினால் நேரும் கேடுகளாக,

**கல்லார்க்கு இனனாய் ஒழுகலும் காழ்க்கொண்ட**
**இல்லாளைக் கோலால் புடைத்தலும்- இல்லம்**

சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமையான் வரும் கேடு. (திரிகடுகம்- 3)

திரிகடுகம் சுட்டுகின்றது.

நல்லார்க்கும் நம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்கும் தம்மூரென் றூரில்லை - அல்லாக்
கடைகட்கும் தம்மூரென்று ஊரில்லை தம்மைத்
துடையார்க்கும் எவ்வூரு மூர். (நான்மணிக்கடிகை- 81)

என்னும் செய்யுள், கல்வியறிவு மிக்கார், துறவறநெறியில் வாழ்வார் ஆகியோர்க்கு உயர்வு நிலையாலும், கீழ் மக்களுக்குத் தாழ்வு நிலையாலும் எல்லா ஊரும் பொதுவாகும். எந்த ஊரும் சொந்தமில்லை. செல்வர்க்கு அவர்கள் வாழும் ஊர் சொந்த ஊராக விளங்கும் எனக் கூறுவதன் வழி. கல்வி கற்றாரும், அறநெறிச் செல்வாரும் ஊர், நாடு என்ற குறுகிய எல்லைகளைக் கடந்து மதிக்கப் பெறுவர் எனக் குறிப்பிடுகின்றது.

இதே கருத்துப்பட பழமொழி நானூறு.

ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அஃது உடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை- அந்நாடு
வேற்று நாடாகா, தம வேயாம்! ஆயின்னால்
ஆற்றுணா வேண்டுவது இல் (பழமொழி - 55)

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாகையால் வழிப்பயணத்திற்கு 'ஆற்றுணா' (கட்டுச்சோறு) தேவையில்லை என்கிறது இப்பாடல்.

சிறுபஞ்சமூலமோ ஒருபடி மேலே போய் அறிவு நூல்களைக் கற்றவர்களைத் தேவர்களாகவும் கல்லாதவர்களைப் பிசாசுகளாகவும் சித்திரிக்கின்றது.

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன் பொருள் செய்யாதார்- ஆதரே
துன்ப மிலேம் பண்டு யாமே வனப்புடையேம்
என்பர் இருகால் எருது. (சிறுபஞ்- 18)

இங்குக் கற்றவரின் சிறப்பு என்பதே நற்குண நற்செய்கையாக விளக்கம் பெறுகின்றது.

கல்வியானது இப்பிறவியிலே ஒரு நற்பயனைத் தரும்; அடுத்தவர்க்கு அளிப்பதால் குறையாது; கற்றவரை அக்கல்வி விளக்கமுறச் செய்யும்; என்றும் அழியாதது கல்வி ஒன்றே; எனவே எந்த உலகத்திலும் கல்வியைப் போல மன மயக்கம் போக்கும் ஒரு மருந்தில்லை எனக் கல்வியின் சிறப்பை உணர்த்தும் நாலடியார் (132).

Scanned by TapScanner

கற்கும் கல்வி நன்னெறியுடையதாக அமைய வேண்டும் என்பதை,

**அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லா(து)**
**உலகநூ லோதுவ தெல்லாங்- கலகல**
**கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்**
**போஒந் துணையறிவா ரில்.** (நாலடியார் -140)

என்ற செய்யுளின் வழியாக, பிறவித் துயர் போக்கும் அரு மருந்தாக நல்லறிவு நூல்களைச் சுட்டிக் காட்டுகின்றது.

'பிச்சை புக்காயினும் கற்றல் மிக இனிதே' (1) என்று கல்வி கற்பதை வலியுறுத்தி, 'கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே' (16) எனக் கற்ற கல்வியின் வலிமையைத் தெளிவுபடுத்தி, 'கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள் இனிதே' (32) எனக் கற்றறிந்தவரின் அறிவுடைமையை கற்றலின் பண்பியலை இனியவை நாற்பது எடுத்து இயம்பும்.

நீதி நூல்களின் மணி மகுடமாக விளங்கும் திருக்குறள், கல்வி (40), கல்லாமை (41), கேள்வி (42), அறிவுடைமை (43) ஆகிய நான்கு அதிகாரங்களில் கல்வியின் சிறப்பையும், கல்லாமையின் இழிவையும், எது அறிவுடைமை என்பதையும் முன்மொழிகின்றது.

**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.** (குறள் 399)

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள் என்பதன் வழி கல்வியின் நோக்கம் 'பிறருக்கும் நன்மை பயப்பது' என்பது பெறப்படுகிறது.

**விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்.** *(குறள் 410)*

கற்றவர்க்கும் கல்லாதவர்க்குமான ஒப்பீடு மனிதர்களுக்கும் விலங்குக்குமாகக் காட்டப்படும் விதத்தால் விலங்கு நிலையில் உள்ளோரை மனித நிலைக்கு உயர்த்துவது கல்வி என்னும் கருத்து விளக்கம் பெறுவதால் கல்வியின் நோக்கு 'மனிதப் பண்பியல்' என்பது தெளிவாகிறது.

மேலும் கல்வி மூலம் பெறப்படும் அறிவானது மனிதனைப் பக்குவப்படுத்தி உயர்ந்த நடத்தை உள்ளவனாக உருவாக்க வேண்டும் என்பதை, அறிவற்றம் காக்கும் கருவி (421), மெய்ப் பொருள் காண்பதறிவு (423), எவ்வதுறைவதுலகு (426), அஞ்சுவது அஞ்சாமை பேதைமை (428), அறிவுடையார் எல்லாம் உடையார் (430) போன்ற குறள்களின் மூலம் தெளிவாக்குகின்றார் வள்ளுவர்.

"உள்ளத்தெழுச்சிகள் மனிதனுக்கு அசாதாரண சக்தியைக் கொடுக்கின்றன. அவை மனிதனைப் பாழ்படுத்தவும் கூடும். அவை மனிதனுக்கு அடிமையாக வேண்டுமே தவிர, மனிதன் அவைகட்கு அடிமையாகக் கூடாது. சிறந்த வாழ்க்கைக்கு மனிதன் உள்ளத்தெழுச்சி களைச் சரியான முறைகளில் கையாளுதல் அவசியம். அவைகளை நசுக்குவது சரியான வழியல்ல. அவைகளைச் சரியான வழிகளில் செயலாற்றுமாறு மாற்றுவது அல்லது தூய்மை செய்வது அவசியம்... புத்தகங்கள் தூய்மைப்படுத்தும் சாதனமாகும்." (அருணாஜலடை, 1957: 63) எனக் கல்வியாளர்கள் சுட்டுவதன் வழி பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூல்கள் கல்வி குறித்த சிந்தனைகளை வலியுறுத்துவது என்பதற்கும் மேலாக, இந்நூல்கள் அனைத்துமே மதிப்புக் கல்விக்கு அடித்தளம் அமைப்பதாக அமைகின்றன எனலாம்.

"கல்வியானது பண்டைய மரபுகளைக் காத்தலோடு அதனுடன் புதியனவற்றையும் இணைப்பதாக அமைதல் வேண்டும். இத்தகைய கல்வியே தனி மனிதன், சமூகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் உதவுவதாகும்." (1969:322) என்பார் கல்வியாளர் எஸ்.சந்தானம்.

கல்வியின் மனித நேயக் குறிக்கோள்களை எட்டுவதற்கு மதிப்புக்கல்வி மிக மிக இன்றியமையாததாகும். மருத்துவம், பொறியியல், பிற உயர் கல்வி பயின்றவர்கள் கூட மனிதப் பண்பற்றவர்களாக இருப்பதற்கும், சமூகப் பாகுபாடுகள், சமூகப் பதற்றம் அதிகரித்துக் காணப்படுவதற்கும் கல்வி என்னும் மனிதனைச் சுத்திகரிக்கும் கருவி பழுதுபட்டு நிற்பதே காரணம் என்பது சமூக அக்கறை உள்ளவர்களின் கருத்தாக உள்ளது.

கல்வியில் மனிதப் பண்புகளின் செல்வாக்கை வலியுறுத்துவதோ, நில்லாமல் ஒட்டுமொத்த இலக்கியங்களுமே அறநெறிக்களஞ்சியமாக விளங்கிடும் பதினெண்கீழ்க்கணக்கு- அறநூல்கள் மதிப்புக் கல்வியை வலியுறுத்திய முன்னோடி முயற்சிகள் என்பது மிகவும் பொருத்தமானது.

"கல்வி என்பதைப் பற்றி நமது மக்கள் பெரும்பாலும் புத்தகப் படிப்பையும், குருட்டு உருப்போட்டுத் தேர்வுகளில் தேறிவிடுவதையுமே கல்வி என்று கருதிக்கொண்டிருக்கின்றனர். அதாவது அலமாரியில் உள்ள புத்தகங்களைப் போல், இவர்களும் தங்கள் மனதில் பல விஷயங்களைப் பதிய வைத்திருக்கும் 'ஒரு நகரும் அலமாரி' என்று தான் சொல்ல வேண்டும்" (10-3-1956 விடுதலை) என்ற பெரியாரின் கருத்து குழந்தைகளின் இயல்பூக்கங்களின், தனித்திறன்களின் சுயாதீனமான வளர்ச்சியை கல்வி வென்றெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

❑